# கப்பலோட்டிய தமிழன்

9930
(L969)



ம.பொ.சிவஞானம்

இன்ப நிலையம்

# கப்பலோட்டிய தமிழன்

(ஒன்பதாம் வகுப்பு)

ம.பொ.சிவஞானம்

இன்ப நிலையம்

மயிலாப்பூர் :: சென்னை-4.

மாணவர் பதிப்பு : டிசம்பர், 1968.
இரண்டாம் பதிப்பு : ஜூலை, 1969.
உரிமை பதிவு செய்யப் பெற்றது.

விலை ரூபாய் ஒன்று

(10.9 டபுள் கிரௌன் வெள்ளைத் தாளில் அச்சிடப்பட்டது)

பாடப் புத்தகக் குழுவினரின் ஒப்புதல் பெற்றது.
கெஜட் 7-5-69. பக்க எண். 29.

MARUTHY PRESS, 83, Peters Road, Madras-14.

14258

# பதிப்புரை

இந்திய சுதந்தரப் போரில் ஈடுபட்டு இன்னல் பல ஏற்றவர் வ. உ. சிதம்பரனார்.

தமிழரின் தன்மானத்தைக் காக்க வீரர் சிதம்பரனார் கண்ட கனவுகளை இன்று நம்மிடையே இருந்து நனவாக்கிக் கொண்டிருப்பவர் திரு. ம. பொ. சிவஞானம் அவர்கள். வீரர் சிதம்பரனாருக்கு 'கப்பலோட்டிய தமிழன்' என்னும் சிறப்புப் பெயரை வழங்கி அவரது புரட்சிமிக்க செயல்களை எழுத்தினாலும் பேச்சினாலும் தமிழகத்திலும் வெளி இடங்களிலும் பரப்பி வருபவர் திரு. ம. பொ. சி. அவர் எங்கு சொற்பொழிவாற்றினாலும் அதில் புரட்சி வீரர் சிதம்பரனாரின் புகழ் இடம் பெறாமலிராது.

ஒருவரது வரலாற்று நூலைப் படிப்பவர்களுக்குச் சலிப்புத் தட்டாவண்ணம், ஆர்வத்துடன் படிக்கும் விதத்தில் இனிய நடையில் எழுத முடியும் என்பதை இந்நூலின் மூலம் உறுதிப் படுத்தியுள்ளார் ம. பொ. சி. ஏறக்குறைய மறந்துவிட்டதாகக் கருதப்பட்ட வ. உ. சி.யின் வரலாற்றைத் தற்கால மக்கள் மனதில் நினைவூட்டப் பாடுபட்டு வெற்றியும் பெற்று விட்டார் ம. பொ. சி.

இந்த அரிய இனிய நூலை வெளியிடும் வாய்ப்பை எங்களுக்கு அளித்த திரு. ம. பொ. சி. அவர்களுக்கும் இந்நூலை மாணவர் பதிப்பாக வெளியிடுவதில் உதவி புரிந்த புலவர் திரு. தணிகை உலகநாதருக்கும் எங்கள் உளமார்ந்த நன்றி.

சோம. சுவாமிநாதன்
இன்பநிலையம்.

(1969)

# பாடமும் பக்கமும்


| | | | |
|---|---|---|---|
| 1. | வீர வணக்கம் | ... | 1 |
| 2. | பிள்ளைப் பருவம் | ... | 5 |
| 3. | வாய்மையுள்ள வழக்கறிஞர் | ... | 11 |
| 4. | இல்லற வாழ்க்கை | ... | 17 |
| 5. | சுதேசிக் கப்பல் கம்பெனி | ... | 22 |
| 6. | அரசியல் வாழ்க்கை | ... | 40 |
| 7. | ஆர்வி ஆலையில் வேலை நிறுத்தம் | ... | 52 |
| 8. | சிதம்பரனார் சிறைப்பட்டார் | ... | 56 |
| 9. | நாட்டு மக்கள் கொந்தளிப்பு | ... | 62 |
| 10. | செக்கடியில் சிதம்பரனார் | ... | 70 |
| 11. | மக்கள் கிளர்ச்சி | ... | 77 |
| 12. | வீரருக்கு விடுதலை | ... | 86 |
| 13. | சிதம்பரனாரின் தமிழ்த் தொண்டு | ... | 90 |
| 13. | குண நலன்கள் | ... | 94 |
| 15. | மீளாப் பிரிவு | ... | 100 |
| 16. | நினைவுச் சின்னங்கள் | ... | 104 |
| | கட்டுரைப் பயிற்சி | ... | 108 |

THIRUVANMIYUR, MADRAS-41

# 1. வீர வணக்கம்

## வீரபழிபாடே இறை வழிபாடு

காதலும் வீரமும் தமிழினத்தின் இரு கண்கள் போன்றவை. பண்டைத் தமிழ் நூல்களை ஆராய்வோர் **அகம்-புறம்** என்ற இரு சொற்களில் இந்த உண்மை விளக்கப்பட்டிருப்பதைக் காணலாம். தமிழினத்தின் வீரத்திற்குச் சான்று கூறிய வள்ளுவப் பெரியாரும்,

> **மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்**
> **உயிர்நீப்பர் மானம் வரின்**

என்றார். ஆம்; மானம் இழந்தபின் உயிர் வாழ்வது தமிழர் மரபன்று.

வீர வழிபாடே இறை வழிபாடாகக் கொண்டவர் தமிழர். இறை வழிபாட்டின் உண்மையும் அதுவேயாம். 'கடவுள் வழிபாடு' என்பதன் மூலத்தை ஆராயப் புகுந்தால், அது வீர வழிபாட்டில் தொடங்கியதாகவே இருக்கும் என்பதில் ஐயமில்லை.

'மானங் காத்தான்,' 'கானாடு காத்தான்' என்பன போன்ற இன்றைய தமிழகத்தின் ஊர்ப்பெயர்

களும், பண்டைய வீரர்களின் விழுமிய செயல்களைப் பிற்கால மக்கள் மறவாமல் போற்றினரென்பதை நினைவூட்டுகின்றன அல்லவா?

சிலப்பதிகாரத்தில், அறக் கற்பினளான பாண்டிமாதேவி இருக்க, மறக் கற்பினளான கண்ணகி தேவிக்குச் சிலை எடுப்பித்ததும், முடி தாங்கிய மன்னரெல்லாம் அச்சிலையின் அடிவணங்கிப் போற்றியதும், வீர வணக்கத்தைத் தமிழர் வழிவழி கடைப்பிடிக்க வேண்டுமென்பதை உணர்த்துகிறதன்றோ?

**வீரர் பரம்பரை**

தமிழினத்தில் வாழையடி வாழையாக வீரப் பெருமக்கள் பலர் தோன்றி வந்தனர். ஆனால் இடைப்பட்ட காலத்தில் தமிழகம் அடிமைப் பிணியால் தாக்குண்ட காரணத்தால் வீரமக்களைப் பெறுவது தடைப்பட்டது. ஆங்கில ஆட்சியில் அடிமை மக்களுக்கு நடுவிலே தமிழர் மரபின் பெருமை மறைந்துவிடாது விளங்கத் தோன்றினர் ஒரு மறத் தமிழர். அவர்தாம் **வ. உ. சிதம்பரனார்.**

வெள்ளையர் ஆதிக்கத்தின்மீது நம் உரிமை வீரர்கள் தாக்குதலைத் தொடங்கியபோது வடக்கே திலகர் பெருமானும், தெற்கே வீரர் சிதம்பரனாரும் தளபதிகளாக இருந்து தளராது போர் புரிந்தனர். வடக்கு முனையைவிடத் தெற்கு முனைப் போர்தான் மிகக் கடுமையாக இருந்தது.

### செயற்கரிய செய்த சிதம்பரம்

தளபதி சிதம்பரனுர், சுதேசிக் கப்பல் கம்பெனி யைத் தொடங்கி, வெள்ளை வர்த்தகக் கூட்டத்தைத் தாக்கினுர்.

தூத்துக்குடி ஆர்ஷி மில் தொழிலாளருக்குத் தலைமை தாங்கி, வெள்ளை முதலாளிகளின் மூலதனக் கோட்டையை வேலை நிறுத்தம் என்னும் 'வெடி' வைத்துத் தகர்த்தார்.

தூத்துக்குடியில் தெருக்கள் தோறும் கூட்டங் கள் போட்டு ஏகாதிபத்தியத்தை எதிர்க்குமாறு மக்கள் உள்ளத்தே வீரக் கனலை மூட்டினுர்.

### செக்கிழுத்த சிதம்பரனுர்.

இவ்வளவும் 1907, 1908 ஆகிய இரண்டே ஆண்டுகளில் நிகழ்ந்தன. இவற்றின் விளைவென்ன? ஆங்கில முதலாளித்துவ வாணிகக் கூட்டத்தார் ஒன்று திரண்டு தளபதி சிதம்பரனுரைச் சிறைப் படுத்தி 'நீதி'யின் பெயரால் இரு ஆயுள் தண்டனை ! விதித்தனர். சிறையில் செக்கிழுக்க வைத்தனர்; கல்லுடைக்கச் செய்தனர்; அறுசுவையுண்டு அரசர் போல் வாழ்ந்த செல்வச் சிதம்பரனுரைக் கேழ் வரகுக் கூழ் குடிக்க வைத்துக் கொடுமைப்படுத்தினர். ஆம்; அயலார் ஆதிக்கம் சிதம்பரனுரைப் பழிக்குப் பழி வாங்கியது.

**வல்லாளன், சிதம்பரனுர் சிறையிற் பட்ட**
**வருத்தமெலாம் விரித்துரைக்கில் வாய்விட் டேங்கிக்**

**கல்லான மனத்தவரும் கண்ணீர் சொட்டக்**
**கனல்பட்ட வெண்ணெயெனக் கரைவார் இன்றும்**

என நாமக்கல் கவிஞர் வருணித்திருப்பது மிகை யன்று.

முற்காலத்தே வ. உ. சி. யைத் 'தேச பக்தர் சிதம்பரம் பிள்ளை' என்றே அழைப்பது வழக்கம். இன்றோ 'கப்பலோட்டிய தமிழர்' என்பதே அவருக்குச் சிறப்புப் பெயராகிவிட்டது. தமிழக வீரப் பெருமக்கள் வரிசையிலே வ. உ. சி. அவர்களுக்கு ஒரு தனி இடம் உண்டு.

இங்ஙனம் நாட்டு மக்களின் உணர்ச்சியைத் தூண்டிவிட்டுத் தமிழ் நாட்டில் விடுதலைப் புரட்சி கண்ட சிதம்பரனாரின் வாழ்க்கை வரலாறு தமிழனுக்கு ஒரு மங்காத காவியமாகும்.

## 2. பிள்ளைப் பருவம்

### பாரோர் புகழும் பாண்டி நாடு

**பாண்டிநாடு** என்பது, தமிழகத்தின் ஒரு பகுதி. அந்நாடு பண்டை நாளில் சீரெலாம் பெற்றுத் திகழ்ந்தது. அறநெறி தவறாத அரசர்களும், போரில் புறங்கொடாத வீரர்களும், பொய்யடிமை யில்லாத புலவர்களும், வாய்மை தவறாத வணிகர் களும் அந்நாட்டில் நிறைந்திருந்தனர். தங்கத் தமிழ் வளர்க்கப் பாண்டிய மன்னர்கள் சங்கம் அமைத்துப் போற்றியதும் பாண்டி வளநாடே ஆகும்.

வளைந்த செங்கோலைத் தன்னுயிர் கொடுத்து நிமிர்த்திய நெடுஞ்செழியன் ஆட்சி புரிந்ததும், குற்றமற்ற கோவலனைக் கொன்றதற்காகக் கண் ணகி தேவியார் அரசியல் புரட்சி விளைத்ததும், உலகெலாமுணர்ந்த உத்தமப் புலவர்கள் ஒருங்கே அமர்ந்து தமிழ்வளர்த்த சங்கம் திகழ்ந்ததும் அந்தப் பாண்டி நாட்டில்தான்.

### உரிமை வீரர் தோன்றினர்

இத்தகைய பழம் பெருமை வாய்ந்த பாண்டி நாட்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் ஓட்டப்

**பீடாரம்** என்னும் சிற்றூர் ஒன்றுள்ளது. இதற்குத் தென்னளகை என்றும் பெயர். இந்த ஒட்டப்பிடாரத்தில்தான் வெள்ளையருக்கு வரி செலுத்த மறுத்து வீரப்போர் புரிந்த **வீரபாண்டியக் கட்டபொம்மன்** தோன்றினன். அவன் அரியணையிலிருந்து ஆட்சி புரிந்த பாஞ்சாலங் குறிச்சி, ஒட்டப்பிடாரத்திற்கு அடுத்துள்ள ஊராகும். மற்றும், ஒட்டப்பிடாரத்திற்கு வடக்கே பதின்மூன்று கிலோ மீட்டர்களுக் கப்பாலுள்ள எட்டயபுரத்தில்தான் இந்திய விடுதலைப் பரணி பாடிய **கவியரசர் பாரதியார்** தோன்றினர். இவ்வாறு வாழையடி வாழையாக வீரர்களைப் பெற்றெடுக்கும் தென்பாண்டிப் பகுதியான ஒட்டப்பிடாரத்தில், உலகநாதப் பிள்ளைக்கும் பரமாயி அம்மையாருக்கும் மைந்தராகத் திருவாளர் வ. உ. சிதம்பரனர் 1872ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் 6ஆம் நாள் வியாழக்கிழமையன்று தோன்றினர்; வ. உ. சிதம்பரனருக்குப் பின் பிறந்த மக்கள் அறுவர். அவர்களில் ஆண் மக்கள் நால்வர்; பெண் மக்கள் இருவர்.

**கல்விப் பயிற்சி**

வ. உ. சிதம்பரம், முதன் முதலாகக் கல்வி பயின்றது ஒரு திண்ணைப் பள்ளிக்கூடத்திலேயே. இளமையிலேயே அவர் உள்ளத்தில் தமிழ் வித்து ஆழ்ந்து பதிந்து வளரலாயிற்று. திண்ணைப் பள்ளிக்கூட ஆசிரியரான வீரப்பெருமாள் அண்ணாவியார் ஒரு தமிழ் மகன் கற்கவேண்டிய

அத்தனை தமிழ் நூல்களையும் கவனமாகக் கற்பித்தார்.

அரிச்சுவடியில் தொடங்கி, நன்னெறி, மூதுரை போன்ற ஒழுக்க நூல்கள் பலவற்றையும் பழுதறக் கற்றார் வ. உ. சிதம்பரம். சிதம்பரத்தின் தந்தையார் அன்னை மொழியைப் பயில்வித்த பின்னர், ஆங்கில மொழியையும் கற்பிக்க விரும்பினார். ஆனால், ஒட்டப்பிடாரத்தில் அந்நாளில் ஆங்கிலப் பயிற்சிக்கான பள்ளி அமைந்திருக்கவில்லை. செல்வச் சிறப்புடைய உலகநாதப் பிள்ளை தமது செலவிலேயே ஒட்டப்பிடாரத்தில் புதிய பள்ளி ஒன்றைக் கட்டுவித்தார். எட்டயபுரத்திலிருந்து அறம் வளர்த்த நாதப் பிள்ளை என்ற அன்பர் ஒருவரை அழைத்து வந்து அப்பள்ளிக்கு ஆசிரியராக்கினார். சிதம்பரம் ஒருவருக்காகக் கட்டப்பட்ட இந்தப் பள்ளி ஊரிலுள்ளவர்கள் பலரும் ஆங்கிலம் கற்கப் பயன்படுவதாயிற்று.

சிதம்பரம், புதிய பள்ளியில் சில காலம் பயின்ற பின்னர், தூத்துக்குடி சென்று அங்குள்ள செயின்ட் ஃபிராசிஸ் சேவியர் உயர்நிலைப் பள்ளியில் தொடர்ந்து படித்து வந்தார். உயர்நிலைப் பள்ளிப் படிப்பு முடிந்ததும் கால்டுவெல் கல்லூரியில் சேர்ந்து மெட்ரிகுலேஷன் தேர்விலும் வெற்றியடைந்தார். மாணவர் சிதம்பரம் நாட்டுக் கல்வியில் நாட்டமுடையவர். ஆதலால் அவருக்கு ஆங்கிலத்திலும் தமிழறிவே சிறந்து விளங்குவதாயிற்று.

**கட்டுக்கடங்காத காளை**

துள்ளித் திரியும் பருவத்தில், பிள்ளை விளையாட்டுக்கள் எத்தனையுண்டோ, அத்தனையிலும் பயிற்சி பெற்றூர் சிதம்பரம்.

சுவர்மேல் நடத்தல், மரம் ஏறுதல், கவண் எறிதல், கல்லெறி பழகுதல், கண்பொத்தி ஆடுதல், கோல் எறிதல், குதிரை ஏற்றம், சடுகுடு ஆட்டம், நீர்விளையாட்டு, கத்தி வீசுதல், மற்போர், கம்பு சுற்றுதல், துப்பாக்கி சுடுதல், விற் பயிற்சி முதலிய பல வீர விளையாட்டுக்களில் சிதம்பரனூர் சிறந்த தேர்ச்சி பெற்று விளங்கினூர். இத்தகைய சீரிய பயிற்சிகளால் அவர் திண்ணிய உடலும் உள்ளமும் உடையவராக விளங்கினூர். அவருடன் பழகும் இளைஞர்களில் சிதம்பரனூரே உடல் வலிமையும் உயர்ந்த தோற்றமும் கொண்டு காளையைப்போல் காட்சியளித்தார்.

'விளையும் பயிர் முளையிலே தெரியும்'

என்னும் பொன்மொழிக் கிணங்கச் சிதம்பரனூர் பிற்காலத்தே சிறந்த வீரராக விளங்குவார் என்பதற்குரிய அறிகுறிகள் அவர் தம் இளம் பருவத்திலேயே காணப்பட்டன.

பிற்காலத்தில் தமிழினத்தின் வீரத் தலைவராக விளங்கவிருக்கும் சிதம்பரம், தமிழகத்துக்கே உரிய வீர விளையாட்டுக்களை விரும்பிக் கற்றதில் வியப்பில்லையன்றோ? சிதம்பரம் தமது பள்ளிப் பருவத்தில் கட்டுக்கடங்காத காளையாகத் திரிந்து வந்தார். அவரிடமிருந்த துடுக்குத்தனங்கள் சொல்லி முடி

யாதவை. தந்தை உலகநாதப் பிள்ளை, சிதம்பரத் திடம் வைத்த பேரன்பு காரணமாக அவர் செய்த பிழைகள் அனைத்தையும் பொறுத்துக் கொள்வார். ஆனால், தம்மால் பொறுத்துக்கொள்ள முடியாத சமயங்களில் தம் மைந்தரை அவர் நையப் புடைத்து விடுவார். தந்தையார் அடிக்கும் போதெல்லாம் காளை சிதம்பரம் யாரிடமும் சொல்லிக்கொள்ளா மலே வீட்டைவீட்டு ஓட்டம் பிடிப்பார்.

**சென்றவர் திரும்பினர்**

ஒருநாள் ஏதோ தவறு செய்தமைக்காகச் சிதம் பரத்தை அவர் தந்தையார் கடுமையாக அடித்து விட்டார். சிதம்பரம் பலமுறை தந்தையிடம் அடி பட்டுப் பழகியவர். என்றாலும், அன்று அடித்த அடிகளை அவரால் பொறுத்துக்கொள்ள முடியா மல் மனம் புண்பட்டுவிட்டது. உடனே அவர் துறவுகொள்ளத் துணிந்துவிட்டார்; மறுகணமே மொட்டை அடித்துக்கொண்டார்; உடுத்திருந்த பட்டாடைக ளனைத்தையும் களைந்தெறிந்தார்; பருத்தி உடைக் கோவணத்துடன் பட்டினத்தார் போல் வேடம் பூண்டார்.

'துறவி சிதம்பரம்' பலநாள் ஊண், உறக்க மின்றி ஊர் ஊராகச் சுற்றி அலைந்தார்; இறுதியாக மதுரையைச் சேர்ந்தார். அதுவரை பட்ட அல்லல் களால் மனம் மாறி இல்லந்திரும்ப எண்ணினர். ஒட்டப்பிடாரத்தில் உள்ள நண்பர் ஒருவருக்குத் தமது உள்ளக் கிடக்கையைக் கடித மூலம் தெரிவித் தார். இந்தச் செய்தி சிதம்பரத்தைத் தேடி

அலேந்துகொண்டிருந்த தந்தைக்கும் எட்டியது. கன்றைப் பிரிந்த தாய்ப் பசுவைப்போலக் கலங்கிக் கொண்டிருந்த அவர் ஓடோடியும் மதுரைக்குச் சென்றார்; மைந்தரைக் கண்டார்; மார்புறத் தழுவிக் கதறி அழுதார். பிறகு சிதம்பரத்திற்கு அறிவுரைகள் பல கூறி ஊருக்கு அழைத்து வந்தார்.

## 3. வாய்மையுள்ள வழக்கறிஞர்

**சட்டப் படிப்பு**

சிதம்பரத்தின் துடுக்குத் தனத்தை அடக்க எண்ணித் தந்தை உலகநாதப் பிள்ளை அவரை ஓட்டப்பிடாரம் வட்ட அலுவலகத்தில் எழுத்தர் வேலையில் அமர்த்தினார். அந்த வேலையில் ஈடு படச் சிதம்பரத்திற்கு விருப்பமில்லை. என்றாலும் தந்தையின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்தார். ஆனால், ஒன்றிரண்டு திங்களுக்குமேல் அந்த வேலையில் அவரால் நிலைத்திருக்க முடியவில்லை.

வழக்கறிஞர் தேர்வுக்கும் படிக்க எண்ணிச் சிதம்பரனார் தந்தையின் இசைவை வேண்டினார். மைந்தரின் கருத்தறிந்த தந்தை அவரைத் திருச் சிக்கு அனுப்பிக் கணபதி ஐயர், அரிகர ஐயர் என்ற இரு சட்ட நிபுணர்களிடம் படிக்கவைத்தார். பின்னர், 1895ஆம் ஆண்டில் மாணவர் சிதம் பரனார் சட்டத் தேர்வில் தேர்ச்சி பெற்று வழக்கறிஞ ரானார்.

சிதம்பரனார், வழக்கறிஞர் தொழிலை முதன் முதலில் ஓட்டப்பிடாரத்திலேயே தொடங்கினார். அக் காலத்தில் ஓட்டப்பிடாரம், அந்த வட்டத்தின்

தலைநகராக இருந்ததால் 'சப்-மாஜிஸ்திரேட் கோர்ட்' இருந்துவந்தது. சிதம்பரனாரின் பாட்டனார், பெரிய தந்தையார், தந்தையார் ஆகிய எல்லாருமே வழிவழி வழக்கறிஞர் தொழிலில் ஈடுபட்டு வந்தனர். அதன் காரணமாகச் சிதம்பரனாரின் இல்லத்திற்கு 'வக்கீல் ஐயா வீடு' என்ற சிறப்புப் பெயர் வழங்கலாயிற்று.

சிதம்பரனார், சீரியல் (Civil), குற்றவியல் (Criminal) என்றும் இரு துறைகளிலும் ஈடுபட்டுத் தொழில் புரிந்தார். என்றாலும், குற்றவியல் துறையில்தான் அவருக்குத் திறமை அதிகம். அத் துறையில் அவர் தம் முன்னோரைவிட அதிகப் புகழ்பெற்று விளங்கினார். வயதில் இளைஞராக இருந்தும் பிற வழக்கறிஞர்கள் அவரைக் கண்டு பொறாமை கொள்ளும் வண்ணம் தொழிலைத் திறம்பட நடத்தி வந்தார். மிக்க தேர்ச்சியும் திறமையும் வாய்ந்த வழக்கறிஞர்களைவிட அவர் அதிக வருவாயை அடைந்து வந்தார்.

வ. உ. சி., தம் தொழிலில் வருவாய் ஒன்றே பெரிதென எண்ணாமல் ஒழுக்கம், வாய்மை, பிறர் நலம் பேணல் இவற்றையே குறிக்கோளாகக் கொண்டிருந்தார். இச் சீரிய நோக்குச் சிதம்பரனாரிடம் வாழ்நாள் முழுவதும் காணப்பட்டது. சிதம்பரனார், தாம் எடுத்துக்கொண்ட வழக்குக்களில் பெரும்பாலானவற்றில் வெற்றி பெறுவார். வெற்றி பெறுதென்று தெரிந்த வழக்குக்களில் எதிர்க்கட்சியை அணுகி அறிவுரை கூறிச் சமரசம் செய்து வைப்பார். கட்சிக்காரருக்காக ஒருமுறை

வழக்கு மன்றத்திற்கு வந்துவிட்டால் மீண்டும் எக் காரணத்தை முன்னிட்டும் அவரைக் கைவிடமாட்டார். கட்சிக்காரர்களின் இன்ப துன்பங்களைத் தம் இன்ப துன்பங்களாக எண்ணி வழக்கை நடத்துவார். சிதம்பரனார் கட்சிக்காரர்களிடம் ஏழை, பணக்காரர் என்ற வேற்றுமை பாராட்டாமல் எல்லாரையும் ஒரே விதமாக மதிக்கும் இயல்புடையவர். வழக்கறிஞர் தொழிலில் வ. உ. சி. யிடம் இருந்த கடமை உணர்ச்சியும், நேர்மை உள்ளமும் கண்டு நீதிபதிகள் அவரைப் பெரிதும் மதித்து வந்தனர்.

வாணிகத் தொழிலில் கொள்வோருக்கும் கொடுப்போருக்குமிடையே கைக்கூலி வாங்கும் தரகர்கள் உண்டு. வாணிகத்தில் பிறந்த இந்த முறை, வழக்கறிஞர் தொழிலிலும் புகுந்து வளர்ந்து வந்தது; கட்சிக்காரர்களைக் கொண்டு வந்து வழக்கறிஞரிடம் 'தரகு' பெறுவது இந்தத் தரகர்களின் வழக்கம். இதனை வ. உ. சி. முற்றும் வெறுத்தார். இந்தச் செய்கை வழக்கறிஞர் தொழிலின் சிறப்பைக் குறைப்பதாகவும் கருதினார். பெரும்பாலும் கட்சிக் காரர்களிடமிருந்து வழக்கறிஞர்கள் அதிக அளவிற்குப் பணம் பறிக்கவே இந்தத் தரகர்கள் பயன் பட்டு வந்தனர். வ. உ. சி. தாம் எழுதிய பாடல் ஒன்றில்,

'வக்கீலாய் நின்று வழிப்பறி செய்யும் திக்கிலார்'

என்று தவறான வழியில் நடந்த வழக்கறிஞர்களைப் பற்றிக் குறை கூறியுள்ளார்.

காவலர் துறையினர் யார் மீதேனும் தவருக வழக்குத் தொடுத்திருப்பதாகத் தமக்குத் தோன்றிஞல் அவர் அந்தக் குற்றமற்றவருக்குத் துணையாக நின்று கைம்மாறு கருதாது தம்மால் இயன்ற உதவியைச் செய்வார். இதனுல் காவல் அதிகாரிகளின் ஆத்திரத்திற்கும், அதிகாரக் கொடுமைக்கும் ஆளாக வேண்டி இருப்பினும் அவர் அஞ்ச மாட்டார். காவலர் சாட்சிக் கூண்டில் நிற்க நேர்ந்து விட்டால் போதும்; கேள்விக் கணைகள் தொடுத்து அவர்களைத் திக்குமுக்காட வைத்து விடுவார்.

சிதம்பரனர் போக்கில் வெறுப்புக் கொண்ட அதிகாரிகள் தலைமைக் காவலர் சுப்பிரமணியம் என்பவரைக் கொலை புரிந்ததாக வந்த வழக்கில் அவரையும் ஒரு குற்றவாளியாக்கினர். அந்தக் குற்றவாளிகளுக்காகச் சிதம்பரனர் வழக்கு மன்றத்தில் தோன்ருமல் செய்வதற்காகவே அதிகாரிகள் இந்தச் சதிச் செயலைச் புரிந்தனர். ஆனல், இந்தக் கொலை வழக்கில் சிதம்பரனர் எதிரிகளின் வழக்கறிஞராக வருவதில்லை என்று வாக்குறுதி தந்தால் குற்றவாளிகள் பட்டியலிலிருந்து அவரது பெயரை நீக்கிவிடுவதாக ஆசை காட்டினர்.

**சூழ்ச்சியைச் சூழ்ச்சியால் வென்ருர்**

சிதம்பரனர் சூழ்ச்சியைச் சூழ்ச்சியால் வெல்லும் திறனுடையவர். எனவே, எதிரிகளுக்காக வழக்காடுவதில்லை என்று வாய் மொழியாகவே வாக்குறுதி தந்து அதிகாரிகளின் சதியிலிருந்து

விடுதலை பெற்றார். ஆனால், குற்றமற்ற அம்மக்களுக்காகத் தாம் ஆற்ற வேண்டிய கடமையைக் கைவிடவில்லை. கொலை வழக்கு விசாரணைக்கு வந்த போது, சிதம்பரனார் எதிரிகள் சார்பில் தோன்றி வழக்காடி, வெற்றியும் பெற்றார்.

சிதம்பரனார் வாக்குறுதியை மீறி, எதிரிகளின் சார்பில் நின்று வழக்காடியது கண்டு ஆத்திரங் கொண்ட அதிகாரிகள், அந்தக் கொலை வழக்கில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளின் தரப்புச்சாட்சியை எதிரிகள் தரப்புக்கு இழுக்க முயன்றதாக அவர் மீது வழக்குத் தொடர்ந்தனர். அந்த வழக்கை விசாரித்த கூட்டு நீதிபதி லயோனல் வைபர்ட், அது பொய் வழக்கெனத் தள்ளுபடி செய்து குற்றமற்ற சிதம்பரனாருக்கு இழப்பீடு தருமாறும் கூறினார். பொய் வழக்கைக் கற்பித்து, உத்தமர்சிதம்பரனாருக்குத் தொல்லை கொடுத்த தலைமைக் காவலரும் வேலையிழந்தார். இந்நிகழ்ச்சிக்குப் பின் காவலர், சிதம்பரனாரின் பெயரைக் கேட்டாலே, அவர் இருக்கும் திக்கு நோக்கித் தெண்டனிடும் பக்தராயினர்.

நீதித் துறையிலும் கையூட்டு வாங்கிப் பிழைக்கும் அநீதி நடமாடுவதைக் கண்டு சிதம்பரனார் ஆத்திரங்கொண்டார். ஏகாம்பரம் என்ற துணை நீதிபதிக்கு எதிராக வழக்காடி அவருக்குத் தக்க தண்டனை கிடைக்கும்படி செய்தார். மற்றும் வாசுதேவ ராவ், பஞ்சாபகேச ராவ் பி.ஏ., பி.எல். என்ற இரு அதிகாரிகளின்மீது கையூட்டு வாங்கியதாக வந்த வழக்கிலும் அவர்களுக்கு எதிர்க் கட்சியில் தோன்றிக் கையூட்டுக் குற்றச்சாட்டை மெய்ப்பித்து

வெற்றி பெற்றார். கடமையிலிருந்து தவறிக் கைக் கூலி வாங்கிய அந்த அதிகாரிகளுக்குக் கடுந் தண்டனை விதிக்கப்பட்டது.

அதிகாரிகளுக்கு எதிராக நடந்து கொள்ளும் சிதம்பரனாரின் போக்கு அவர் தந்தையாருக்குப் பிடிக்கவில்லை. எனவே, அவர் சிதம்பரனாரைத் தூத்துக்குடிக்குச் சென்று தொழில் புரியத் தூண்டினார். தந்தையின் கருத்துப் பிடிக்காவிடினும், அவர் கட்டளைப்படி தூத்துக்குடிக்குச் செல்வதால், தமது தொழில் வளர்ச்சியுறும் என்ற காரணத்தால், சிதம்பரனார் 1900ஆம் ஆண்டில் தூத்துக்குடிக்குச் சென்று தொழில் நடத்தினார்.

# 4. இல்லற வாழ்க்கை

**திருமணம்**

சிதம்பரனாரின் இருபத்து மூன்றும் வயதில் அவர் தம் தந்தையார் திருச்செந்தூர் சுப்பிரமணியப் பிள்ளையவர்களின் மகள் **வள்ளியம்மை** என்றமங்கை நல்லாளை அவருக்கு மணஞ் செய்து வைத்தார். இவ் வம்மையார், இல்வாழ்க்கையில் தம் கணவருக்கு உற்றுழியுதவும் ஊன்றுகோல் போலவும் அறுசுவை யுண்டி அளிப்பதில் அன்னை போலவும் விளங்கினார்.

**இல்லத்தரசி வள்ளியம்மை**

சிதம்பரனாரிடம் ஒருநாள் உறவினர் ஒருவர் ஒரு கட்சிக்காரரைக் கொண்டு வந்துவிட்டு அவர் சென்ற பிறகு தரகு கேட்க, இவர் அச் செய்தியைப் பற்றித் தம் மனைவியாகிய வள்ளியம்மையாரிடம் கலந்து ஆலோசித்தார். அவ்வம்மையார், "தரகு கொடுத்து வழக்கைப் பெறுவது இழி தொழில். பெற்ற பொருளைக் கட்சிக்காரரிடமே திருப்பிக் கொடுத்துவிடுங்கள்" என்று இயம்பினார்.

சிதம்பரனார் ஒடுக்கப்பட்ட வகுப்பைச் சேர்ந்த விருதுநகர் **இராமையா தேசிகர்** என்பவரைத் தம்

இல்லத்தில் வைத்துக் காப்பாற்றிவந்தார். அவர் முகக் கண்களை இழந்த அந்தகர். எனினும் அகக் கண்களை இழவாத ஆத்ம ஞானி. வள்ளியம்மையார் அவ்வந்தக ஞானிக்குத் தாமே அமுதூட்டுவார். இதையறிந்த அயலார், இழிகுலத்தோனை வீட்டில் வைத்து உணவளித்து வருகிறாரெனப் பழிச்சொல் பகர்வாராயினர். சிதம்பரனார் தம் மனைவியாரிடம் அந்தப் பழிச்சொல்லைக் கூறி ஆலோசனை கேட்டார். வள்ளியம்மையார், "எல்லாம் உணர்ந்த துணைவரே, தங்களுக்குத் தெரியாததா? துறவிக்குக் குலம் ஏது? உயிர்களனைத்தும் ஒன்றாயிருக்கும்போது அதைப் பகுத்துப் பார்ப்பது பேதைமையன்றோ? உயிர் தோறும் இறைவன் வீற்றிருக்கிறான் என்பது தாங்கள் அறிவித்ததுதானே? சாதி, குலம் என்பவை யெல்லாம் கற்பனையே அன்றி வேறல்ல. பழிப்பார் பழிக்கட்டும்; நாம் நமது மனவழி நடப்போம்" என்றார்.

வள்ளியம்மையார் தமிழ்க் கல்வியில் சிறந்து விளங்கினார். அவ்வம்மையார் திருக்குறளைப் பொருளுடன் ஓதியுணர்ந்திருந்தார் என்பதற்கு,

'வள்ளுவர் குறளை வளனுறப் படித்துக்
கொள்ளும் விதத்தில் கூறுவள் உரையுடன்'

எனச் சிதம்பரனார் தமது மனைவியாரின் அறிவுரை குறித்துக் கூறியதே சான்றாகும்.

### வள்ளியம்மையார் பிரிவு

இத்தகைய குணநலன்களைப் பெற்றிருந்த வள்ளியம்மையார் 1901ஆம் ஆண்டில் அகால மரண

மெய்தினார். அவ்வம்மையாரின் பிரிவால் பிள்ளையவர்கள் பெருந் துன்பமடைந்தார். வள்ளியம்மையாரின் அரிய குணங்களைப்பற்றி அவர் பாடிய இரங்கற்பாக்கள் பல. அவற்றுட் சில வருமாறு:

**இல்லமதில் ஒன்றுமே யில்லையென்னாள்; எக்காலும்**
**நல்லுணவுதான்சமைத்து நல்குவாள்—அல்லலொழித்**
**தின்புறவே செய்திடுவாள்; எப்பணியும் உள்ளமுடன்**
**அன்புமிகு நல்லாள் அமைந்து.**

**என்னுடைய நேயர்களும் ஏழைபர தேசிகளும்**
**என்னுடைய வீடுவந்தால் ஏந்திழைதான்—தன்னுடைய**
**பெற்றோர்வந் தார்களெனப் பேணி உபசரிப்பாள்**
**கற்றோரும் உள்ளுவக்கக் கண்டு.**

நன்றியறிதலையே நல்லொழுக்கமாகக் கொண்ட சிதம்பரனார், முதல் மனைவியாரிடம் காட்டும் நன்றிக்கு அறிகுறியாக, மீண்டும் அவ்வம்மையாரின் குடும்பத்திலேயே **திருமதி மீனாட்சியம்மை** என்ற பெண்ணரசியை மணம் புரிந்துகொண்டார்.

**தீண்டாமையை வேண்டாமை**

மனிதனுக்கு மனிதன் உயர்வு தாழ்வு கற்பிப்பதை அவர் அடியோடு வெறுத்தார். சாதிக்கொரு நீதி கூறும் சழக்கர்களையும், பிறப்புக் காரணமாக ஆதித் தமிழர்களைத் தீண்டாதவர்களெனக் கூறும் தீயவர்களையும் கண்டிக்கப் பிள்ளையவர்கள் சற்றும் தயங்கியதில்லை.

**'பிறப் பொக்கும் எல்லா உயிர்க்கும்'**

**'நல்ல குலமென்றும் தீயகுல மென்றும்**

**சொல்லளவல்லால் பொருளில்லை'**

என்று முன்னோர் மொழிந்த சொல்லின் பொருளை அவர் முற்றும் உணர்ந்திருந்தார். 'இறைவன் படைப்பிலே அனைவரும் சமம்' என்ற உயரிய கருத்தே அவரது உள்ளத்தில் குடிகொண்டிருந்தது. ஆதித் தமிழரொருவரை, தம் இன்னுயிர்த் துணைவராகக் கொண்டு தமிழ் இலக்கியங்களைக் கற்பித்தார். அவர்தான் **சகஜானந்த அடிகள்.**

பிற்காலத்தில் சிதம்பரனார் சிறையிலிருந்து மீண்டதும் சிலகாலம் சென்னையில் வசிக்க நேர்ந்தது. அப்போது ஒருநாள் சென்னை 'ரிப்பன் அச்சுக் கூடத்'தில் சிதம்பரனாரும் சகஜானந்த அடிகளும் முதன் முதலாக ஒருவரை ஒருவர் சந்தித்து உரையாட நேர்ந்த காலையில், பிள்ளையவர்கள் அவரது சாதியை விசாரித்தாராம். "நான் நந்தனார் வகுப்புப் பிள்ளை"யென சகஜானந்த அடிகள் பதிலளித்தார். உடனே சிதம்பரனார் சகஜானந்தரின் இரு கைகளையும் இறுகப் பிடித்து, "உண்மையைக் கூறியதால் தாங்களே உண்மை அந்தணர்" எனக் கூறி, சகஜானந்தரைத் தமது இல்லத்திற்குக் கூட்டிச் சென்றார். பின்னர்ப் பல ஆண்டுகள் அவரைத் தமது வீட்டிலேயே வைத்திருந்து உணவளித்துத் தொல்காப்பியம், திருக்குறள் முதலிய சிறந்த நூல்களைப் பயிற்றுவித்து அவரைச் சிறந்த புலவராக்கினார்.

சிதம்பரனார் சென்னையைவிட்டு நீங்கி, மீண்டும் தமது சொந்த ஊராகிய ஒட்டப்பிடாரம் சென்ற

போது சகஜானந்தரையும் தம்முடன் கூட்டிச் சென்ருர். தம் உறவினர் இல்லங்களில் நடக்கும் விழாக்களுக்குச் சகஜானந்தரையும் தம்முடன் அழைத்துச் சென்ருர். யாராவது சகஜானந்தரின் குலத்தைக் குறித்துக் கேட்டால், "இவரொரு துறவி; இவரைச் சாதி விசாரிக்கலாகாது" என்பாராம். "தம் பிள்ளையைப் போன்று என்னை வளர்த்தார், அப் பெருந்தகை வள்ளல்" எனச் சகஜானந்தரே கூறுகின்ருரெனில், பிள்ளையவர்களின் பெருங்குணத்திற்கு வேறென்ன சான்று வேண்டும்? சகஜானந்த அடிகள், சிதம்பரனுருக்கு எழுதிய கடிதமொன்றில்,

**தாமின் புறுவ துலகின் புறக்கண்டு**
**காமுறுவர் கற்ரு ரெனக்கழறும்—மாமறைக்குச்**
**சான்ருச் சிதம்பரமென் தந்தை நினைக்கண்டேன்**
**நான்மாறென் செய்வேன் நவில்.**

**சாவா மருந்தெனவே தற்பரனுர் வள்ளுவர்செய்**
**பாவால் அறிவெனக்குப் பாலித்த—தேவா!**
**சிதம்பரமென் சற்குருவே! சிந்தையினில் நின்றன்**
**பதம்பெற்றேன் என்றும் பணிந்து.**

எனச் சிதம்பரனுரைத் தந்தையாகவும் குருவாகவும் தெய்வமாகவும் கருதி அஞ்சலி செய்துள்ளார்.

## 5. சுதேசிக் கப்பல் கம்பெனி

**தமிழர் கடல் வாணிகம்**

மரக்கலங்களின் துணையால் திரைகடலோடியும் திரவியந் தேடுவதில் திறமை பெற்றிருந்தனர் பண்டைத் தமிழர். முற்கால இந்தியாவில் கப்பலோட்டும் கலை தமிழருக்கே உரித்தாயிருந்தது என்றால், அது மிகையாகாது. ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தமிழர் மரக்கலங்களைக் கட்டிக் கடலிலே செலுத்தியதை **அரப்பா, மொகஞ்சதாரோ** நகரங்களைப்பற்றிய ஆராய்ச்சி முடிவுகள் அறிவிக்கின்றன. சிந்து நதிக்கரையில் புதையுண்ட அந்த நகரங்களில் பானை ஓடுகளில்கூட மிகப் பெரிய கப்பல் போன்ற சித்திரங்கள் பல வண்ணங்களில் தீட்டப் பட்டிருக்கின்றனவாம். உரோம் நாட்டில் கயிற்றைக் கொண்டு பலகைகளைப் பிணைத்து மரக்கலங்கள் கட்டிய காலத்திலேயே, தமிழர் மரக்கலங்கள் கட்டுவதில் மேனாட்டினரைவிட முன்னேறியிருந்தனர். பலகைகள் ஒன்றோடொன்று பொருத்தப்பட்டிருப்பதைக் கண்டுபிடிக்க முடியாதவாறு கப்பல் கட்டுவதில் திறமை பெற்றிருந்தனர் தமிழ் நாட்டார். கப்பல்களின் முகப்பிலே புலி, சிங்கம் போன்ற உரு

வங்களும் அழகுபெற அமைக்கப்பட்டு வந்ததாகவும் தெரிகிறது.

சோழ மன்னர்கள் வலிமை வாய்ந்த கப்பற் படையை உடையவராயிருந்தனர். இராசராச சோழன் இலட்சக் கணக்கான தமிழ் வீரர்களைக் கப்பலில் கொண்டு சென்று இலங்கை, மலாயா முதலிய இடங்களை வென்றதாக வரலாறு கூறுகிறது. இவ்வாறு வாணிகத்தில் பொருளையும் போரில் புகழையும் அடைவதற்குப் பண்டைத் தமிழர் கப்பல் களைப் பயன்படுத்தினர். பின்னாளில் தமிழகம்உட்பட இந்தியா முழுவதும் ஆங்கிலேயருக்கு அடிமைப் பட்டது. நமது நல்வாழ்வில் நாட்டமில்லாத அவ் வந்நியர் நம்மிடமிருந்து அரசைப் பறித்ததோடு நில்லாமல், பொருள் தேடும் வழிகள் அனைத்தையும் பறித்தனர். அந்த வகையில் தமிழரின் கப்பல் வாணிகமும் ஆங்கிலேயரின் வசமாயிற்று. நில ஆதிக்கமும், கடல் ஆதிக்கமும் பெற்ற அவ்வாங்கி லேயர், நமது தமிழகத்தின் செல்வத்தையெல்லாம் சுரண்டிச் செல்வாராயினர்.

**ஆங்கிலேயரின் கடலாதிக்கம்**

தமிழினத்துக்குற்ற இந்த அவல நிலை கண்டு சிதம்பரனாரின் நெஞ்சு பொறுக்கவில்லை. ஆயினும், என் செய்வார்? ஆட்சித் திறனும், சூழ்ச்சி அறிவுங் கொண்டு அனைத்துலகும் ஆணை செலுத்தும் ஆங்கி லேயருக்கு முன் அவர் எம்மாத்திரம்! தமிழ் மக்கள் அவ்வளவு பேரும் ஒருங்கு சேர்ந்து போராடினாலுங் கூட ஆங்கிலேயர் நம்மிடமிருந்து பறித்த வாணி

கத்தைப் பற்றுதல் எளிதோ? எளிதன்று. ஆகவே தமிழரது உரிமையைப் பறித்து உடைமையையும் சுரண்டிச் செல்லும் வெள்ளை வணிகரை விரட்டி யடிக்க எண்ணியவராய்க் காலத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தார் சிதம்பரனார்.

இந்நிலையில்தான், இந்தியக் கண்டத்தில் வங்கப் பிரிவினைக் கிளர்ச்சி வலுப்பெறலாயிற்று. ஒன்று பட்ட ஒரே தேசிய இனமாக இருந்த வங்காள மக்களை இந்து என்றும், முஸ்லீம் என்றும் பிரித்து அவர்களின் தாயகமாகிய வங்க நாட்டையும், இந்து வங்காளம், முஸ்லீம் வங்காளம் என்று இரண்டாகத் துண்டாடினார் வைசிராய் லார்டு கர்ஸன். குடிமக்க ளிடையே ஒற்றுமையை உண்டாக்குவதே அரசாங் கத்தின் முதற் பொறுப்பு. ஆனால், இந்தியாவில் ஆங்கிலேயரின் ஆதிக்கம் இதற்கு நேர்மாறாக மக்களின் ஒற்றுமையைக் குலைத்து வேற்றுமையை உண்டாக்குவதையே தனது வேலையாகக் கொண் டிருந்தது. ஓர் அந்நிய ஆட்சி இதைவிட வேறுவித மாக நடந்துகொள்ளுமென்று எதிர்பார்க்க முடியா தன்றோ?

**வங்கப் பிரிவினை எதிர்ப்பு**

ஆனால், அயலவரின் பிரித்தாளும் சூழ்ச்சிக்கு வங்காளிகள் இரையாகவில்லை. அவர்கள் இந்து வென்றும் இஸ்லாமியரென்றும் பிரியாது, 'வங் காளிகள் அனைவரும் ஒரே இனம்' என்ற உணர்ச்சி யுடன் ஒன்றுபட்டுப் பிரிவினையை எதிர்த்துப்

போராடினர். தூங்கும்பொழுதுகூடத் தாய் நாட்டின் தொண்டையே நினைத்திருப்பவர் வங்காளிகள். வங்கப் பிரிவினை எதிர்ப்புப் போராட்டமானது வங்காளத்தோடு நில்லாமல் இந்தியா முழுவதும் பரவியது.

இந்திய மக்கள் வங்கப் பிரிவினையை எதிர்க்கும் பொருட்டு அந்நிய ஆடை எதிர்ப்பு இயக்கத்தை ஆரம்பித்தனர். அந்நிய ஆடைகள் மலை மலையாகக் குவிக்கப்பட்டு நெருப்புக்கு இரையாக்கப்பட்டன. பம்பாய் நகரில் அந்நியத் துணிகளை மூட்டையாகக் கட்டி நகருக்கு வெளியே கொண்டுபோய்த் தீ வைத்துக் கொளுத்தினர் தேசியவாதிகள். இந்த ஆடை கொளுத்தும் விழாவை ஆரம்பித்து வைக்கையில், அதர்வண மந்திரம் சொல்லி அந்நியத் துணியில் தீ வைத்தார் திலகர் பெருமான். பிற நாட்டு ஆடையில் பற்றி எரிந்த தீயானது எவ்வளவுதூரம் அடிமைப்பட்ட மக்களின் அகத்தே சினத்தீ கொழுந்துவிட்டு எரிந்துகொண்டிருக்கிறது என் பதைக் காட்டிற்று.

**அந்நிய ஆடை எரிப்பு**

ஏற்கெனவே காலத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்த சிதம்பரனார் சீற்றங்கொண்ட சிங்கமென எழுந்தார். நீதிமன்றத்தில் வழக்கறிஞர் தொழில் நடத்தி வந்த அவர், தமது தொழிலைக் கைவிட்டு நாட்டுரிமைப்போரில் நாட்டங்கொண்டார். தம்மிடமிருந்த அந்நிய ஆடைகள் அத்தனையும் தீ வைத்துக்

கொளுத்தினர். "எரிவது ஆடையன்று; ஏகாதிபத்தியமே" என்று எண்ணி மகிழ்ந்தார்; இனி அந்நியப் பொருள்கள் எவையும் வாங்குவதில்லை என்று உறுதி பூண்டார். அந்நியத் துணி தரித்தவரைக் கண்டாலும் அவருக்குக் கண் சிவந்துவிடும். அந்நியக் கத்தி வைத்துள்ள தொழிலாளியிடம் தலைமயிர்க் கழிவு செய்துகொள்ள மாட்டார். ஆங்கில ஆதிக்கத்தை எதிர்த்து வங்க மண்ணிலே போர் தொடங்கிவிட்டதைக் கண்டு பூரிப்படைந்தார்; தாம் கருதிய செயல் கைகூடிவிட்டதாகக் களிப்பெய்தினர்; தமிழர்களைத் தட்டி எழுப்பி ஆங்கில ஆதிக்க எதிர்ப்புப் போரின் இரண்டாவது முனையைத் தமிழ் நாட்டில் தொடங்க எண்ணினர்; வங்காளியரைப் போன்று தமிழ் மக்களும், தங்கள் தாயகமாம் தமிழகத்தில் ஆங்கிலப் பேரரசுக்கு அழிவு தேட வேண்டியது இன்றியமையாதது என உணர்ந்தார்.

### ஆங்கிலக் கப்பல் கம்பெனி

ஆங்கிலேயர் இந்தியாவில் புகுந்தது ஆளுவதற்காக மட்டுமன்று; இந்நாட்டின் செல்வத்தைச் சுரண்டிச் செல்லவும் ஆகும் என்பதைச் சிதம்பரனார் நன்கு அறிந்தவர். ஆதலால் அவர் ஆங்கிலேய வாணிகக் கூட்டத்தின்மீதே தமது முதல் தாக்குதலை ஆரம்பித்தார். தூத்துக்குடிக்கும் சிங்களத்திற்கும் இடையில் வாணிகப் பொருள்களைப் **பிரிட்டிஷ் இந்தியா ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனியின்** கப்பல்களே ஏற்றுமதி, இறக்குமதி செய்து வந்தன. அக்கம்பெனி ஆங்கில ஏகாதிபத்தியத்தின் ஆணிவே

ரான வெள்ளை வணிகருடையது. நாட்டில் தோன்றிய தேசிய இயக்கத்தை அவ்வெள்ளையர் கம்பெனி வெறுத்தது. மேலும், அக்கம்பெனி இந்திய வாணிகம் வளரவொட்டாது தடை செய்கிறதென்ற எண்ணம் இந்திய வணிகர்களிடையே பரவியது.

**சுதேசிக் கப்பல் கம்பெனி தொடங்கல்**

பிரிட்டிஷ் கப்பல் கம்பெனியின் ஆதிக்கத்தை அடக்க எண்ணித் தூத்துக்குடி இந்திய வணிகரின் ஆதரவு கொண்டு 1906ஆம் ஆண்டு **சுதேசிக் கப்பல் கம்பெனி** ஒன்றைத் தோற்றுவிக்கத் துணிந்தார் சிதம்பரனார். தொடக்கத்தில் வணிகர் சிலர், சிதம்பரனாரின் முயற்சி வெற்றிபெறப் பண உதவி புரிந்தனர், மற்றும் பலர், பின்னர்ப் பணம் தருவதாக வாக்குறுதி தந்தனர். ஆனால், ஒரு சில கோழைகள் மட்டும் சிதம்பரனாரின் முயற்சியைக் கேலி செய்தனர். "ஆங்கிலக் கப்பலுக்கு எதிர்க்கப்பல் விடுவதா? அஃது ஆகாத செயலப்பா!" என்று பயமுறுத்தினர். ஆனால், சிதம்பரம் பிள்ளை முன்வைத்த காலைப் பின் வாங்குவதில்லையென்ற முடிவுடன் பணியாற்றினார்.

சுதேசிக் கப்பல் கம்பெனி 1882ஆம் ஆண்டின் இந்தியக் கம்பெனிகள் சட்டப்படி 1906ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் பதினாறும் நாள் பதிவு செய்யப்பட்டது. பங்குதாரர்களிடம் பத்து இலட்சம் ரூபாய் சேர்ப்பதெனத் திட்டமிடப்பட்டது; இந்தியர் மட்டுமன்றி இலங்கையர் உள்பட, ஆசியாக் கண்டத்தார் எவரும் இக் கம்பெனியில் பங்குதாரர்களாகச் சேரலாமெனவும் விதி இயற்றப்பட்டது.

பாலவனத்தம் ஜமீன்தாரரும் மதுரைத் தமிழ்ச் சங்கத் தலைவருமாகிய **திரு. பாண்டித் துரைசாமித்** தேவரைக் கம்பெனியின் தலைவராக்கிச் செயலாளர் பொறுப்பைத் தாமே ஏற்றுக்கொண்டார் சிதம்பரம் பிள்ளை. பதின்மூன்று வங்கியாளர்கள் சுதேசிக் கப்பல் கம்பெனியின் தொடக்ககால நிருவாகிகளாக இருக்க இசைந்தனர். சேலம் சி. விசயராகவாச்சாரியார், எம். கிருஷ்ணன் நாயர் உள்பட நான்கு வழக்கறிஞர்கள் கம்பெனியின் சட்ட ஆலோசகர்களாக நியமிக்கப்பட்டனர்.

**கம்பெனி வளர்ச்சி**

கம்பெனி பதிவு செய்யப்பட்டதும் பங்குதாரர்கள் சேர்க்கும் வேலை தொடங்கிற்று. **ஜனுப் ஹாஜி முகம்மது பகீர்சேட்** என்பவர் மட்டும் எட்டாயிரம் பங்குகளுக்குரிய ரூபாய் இரண்டு இலட்சத்தைக் கம்பெனிக்குச் செலுத்தினர். இந்த இரண்டு இலட்சம்தான் கம்பெனியின் தொடக்க மூலதனமாக அமைந்தது. சுதேசிக் கப்பல் கம்பெனியின் நிருவாகிகள் முதன் முதலாகக் கூடிக் கம்பெனியின் குறிக்கோளை வரையறுத்தனர். அவை பின் வருமாறு:—

தூத்துக்குடிக்கும் கொழும்புக்கும், கம்பெனியார் தீர்மானித்திருக்கும் மற்ற இடங்களுக்கும் நீடித்தும் வசதியாகவும் கப்பல்கள் போக வரச் செய்து பயணத்தையும் வாணிகத்தையும் ஒழுங்குபடுத்துதல்.

இந்தியர்களையும், இலங்கையர்களையும் மற்றும் ஆசியாக் கண்டத்துச் சாதியார்களையும் கப்பல் நடத்தும்

தொழிலில் பழக்குவித்து, அதனால் வரும் நற்பலன்களை அடையும்படி செய்தல்.

இந்தியர்களுக்கும், இலங்கையர்களுக்கும், மற்றும் ஆசியாக் கண்டத்துச் சாதியார்களுக்கும் கப்பல செலுத்துவதற்கும் கப்பல் கட்டுவதற்கும் பயிற்சி யளித்தல்,

இந்தியா, இலங்கை மாணவர்களுக்கும் மற்றும் ஆசியாக் கண்டத்து மாணவர்களுக்கும் கப்பலோட்டும் தொழிலையும், கப்பல் கட்டும் தொழிலையும் தொழிலியல் முறைப்படி கற்பிக்கப் பயிற்சி நிலையங்கள் ஏற்படுத்தல்,

கப்பல் நடத்துவதிலும் வாணிகம் செய்வதிலும் இந்தியர்கள், இலங்கையர்கள் முதலிய ஆசியாக் கண்ட மக்களிடையே ஒற்றுமையை நிலவச்செய்து முன்னேறச் செய்தல்,

பற்பல வணிக நிலையங்களில் உள்ள வாணிகங்களுக் குரிய கொள்வன, கொடுப்பன தெரிந்து கொள்வதற் காக இந்தியா, இலங்கை முதலிய ஆசியாக் கண்டத்து நாட்டினரைப் பிரதிநிதிகளாக நியமித்தல்,

கப்பல்கள், இயந்திரப் படகுகள் முதலியன ஏற் படுத்துவதற்கும் அவற்றைச் செப்பனிடுவதற்கும் துறைகள் ஏற்படுத்தல்.

இந்தத் திட்டங்களை நிறைவேற்றத் தொழில் துறையில் முன்னேறிவரும் நாடான ஜப்பான் உதவி யைப் பெறுவதெனவும் கம்பெனியார் எண்ணினர்.

சுதேசிக் கப்பல் கம்பெனியின் குறிக்கோள் தமிழர் அல்லது இந்தியர் நலன்களுக்காக மட்டும்

பாடுபடுவதன்று; ஆசியாக் கண்டத்தார் அனைவரும் ஒன்றுபட்டு முன்னேற உழைப்பதேயாகும்.

தொடக்கத்தில் சுதேசிக் கப்பல் கம்பெனியார் சொந்தத்தில் கப்பல்களை வாங்கவில்லை. ஷாலைன் ஸ்டீமர்ஸ் கம்பெனியிடம் கப்பல்களைக் குத்தகைக்கு வாங்கி ஓட்டினர்; சுதேசிக் கப்பல் கம்பெனி தோன்றியதை பிரிட்டிஷ் கப்பல் கம்பெனிகள் விரும்பவில்லை. அந்தக் கம்பெனியைக் கலைப்பதற்கான முயற்சியிலும் ஈடுபட்டனர். பம்பாய் ஷாலைன் ஸ்டீமர்ஸ் கம்பெனியின் உரிமையாளர் எஸ்ஸாஜி டாஜ்பாய் என்பவர், பிரிட்டிஷ் கப்பல் கம்பெனியாரும் தூத்துக்குடி வெள்ளை அதிகாரிகளும் அச்சுறுத்தியதால், சுதேசிக் கப்பல் கம்பெனியாரிடம் தாம் செய்துகொண்ட ஒப்பந்தத்திலிருந்து தம்மை விடுவித்துக்கொண்டார். இவருடைய செயலால் சுதேசிக் கம்பெனியார் கப்பல் இன்றிக் கலங்கினர். இவர்களை நம்பி வெள்ளையர் கம்பெனியைப் பகைத்துக் கொண்ட தமிழ் வணிகர்கள் செய்வதறியாது திகைத்தனர். இவ்வளவு தொல்லைகளுக்கிடையிலும் சிதம்பரனார் சிறிதும் கலங்கவில்லை. கொழும்புக்கு விரைந்தோடிச் சென்று பெரிய கப்பல் ஒன்றைக் குத்தகைக்குப் பேசித் தூத்துக்குடித் துறைமுகத்துக்குக் கொண்டுவந்தார்; சிதம்பரனாரின் சீரிய செயலைக் கண்டு தூத்துக்குடி வணிகர்கள் சிந்தை குளிர்ந்தனர்.

**சிதம்பரனாரின் சூளுரை**

சொந்தமாகக் கப்பல் வாங்கினாலொழிய, சுதேசிக் கம்பெனி வெகுநாட்களுக்கு நீடிக்க முடியாதென்பதைச் சிதம்பரனார் உணர்ந்தார். எனவே புதிய கப்பல்கள் வாங்கப் பணம் திரட்டும் பணியில் ஈடுபட்டார். தூத்துக்குடி வணிகர்கள் தங்களாலான வரை சுதேசிக் கப்பல் கம்பெனிக்குப் பொருளுதவி புரிந்தனர். எனினும் அது போதுமானதாயில்லை. ஆங்கிலேய ஆதிக்கத்தின் ஆற்றல் முழுவதையுங் கொண்டு நடத்தப்படும் வெள்ளையர் கம்பெனிமுன் இந்த உதவி எம்மாத்திரம்! சிதம்பரனார் பம்பாய், கல்கத்தா முதலிய நகரங்களுக்கும் சென்று பொருள் திரட்டினார். "ஆங்கிலேயர் நம் அரசைப் பறித்தது பொருள் பறிக்கவேயாம். ஆகவே பொருள் பறிக்கும் வாணிகக் கப்பலை விலக்கி வைத்தாலொழிய, அவ்வாங்கிலேயர் இந்தியாவை விட்டு வெளியேறார்" என்று முழக்கஞ் செய்தார்.

•

சிதம்பரனாரின் வீர உரைகளைக் கேட்ட வடநாட்டு வாணிக மக்களில் பலர் சுதேசிக் கப்பல் கம்பெனியில் பங்குதாரர்களாகச் சேர்ந்தனர். சிதம்பரனார் கப்பல் கம்பெனிக்குப் பொருள் தேடும் முயற்சியில் ஈடுபட வடஇந்தியா செல்லப்புறப்பட்ட போது, "மீண்டும் என் தமிழகம் திரும்புங்கால், கப்பலுடன் திரும்புவேன்; இல்லையேல் அங்கேயே கடலில் வீழ்ந்து மாள்வேன்" எனச் சூளுரை கூறிச் சென்றார். என்னே அவரது மனவலிமை!

### மலைகலங்கினும் நிலைகலங்காத மாண்பு

அவர் பம்பாய்க்குச் சென்றிருந்த பொழுது ஊரில் அவர் தம் மைந்தன் **உலகநாதன்** என்பவன் நோய்வாய்ப்பட்டு மரண நிலையை எய்தினன். மனைவியாரும் முழுக் கர்ப்பவதி. சிதம்பரனாரின் நண்பர்கள் அவருக்குச் செய்தி அறிவித்து ஒருமுறை ஊர் வந்து போகுமாறு வேண்டினர். இடுக்கண் வந்தபோதும் அஞ்சுதலறியாத நெஞ்சுரம் உடையவராதலால், "என் மகனையும் மனைவியையும் இறைவன் காப்பான்; என்னைவிட அவன் ஆற்றல் வாய்ந்தவன்" என்று பதிலளித்தார். தமது குடும்பத்திற்குச் செய்ய வேண்டிய கடமையைவிடத் தமிழ் நாட்டிற்கும் இந்திய சமுதாயத்திற்கும் செய்ய வேண்டிய சேவையே பெரிதென நினைத்தார் அப்பெரியார்.

### இருபெரும் கப்பல்கள்

பம்பாய் சென்ற சில தினங்களுக்குப் பின்னர்ப் பிள்ளையவர்கள், கப்பலுடன் தூத்துக்குடித் துறை முகம் வந்து சேர்ந்தார். கப்பலின் பெயர் 'காலியா' என்பதாகும். சிதம்பரனார் தாம் கூறிய சூளுரை மாறாது கப்பலுடன் வந்தமை கண்டு தமிழ் மக்கள் இன்பக் கடலில் திளைத்தனர். 'வீர சிதம்பரம் வாழ்க' என விண்ணதிர வாழ்த்தினர். அரசியல் வாதிகளோ, "எழுந்தது போராட்டம்; வீழ்ந்தது ஆங்கிலேயர் ஆதிக்கம்" என்று பெருமிதத்துடன் முழங்கினர். இக்கப்பல் 42 முதல் வகுப்புப் பயணிகளும், 24 இரண்டாம் வகுப்பு பயணிகளும்

1300 சாதாரண வகுப்புப் பயணிகளும் இருப் பதற்கும், 4000 மூட்டைப் பொருள்கள் ஏற்று வதற்கும் வசதியுடையது. 'லாவோ' என்ற மற்ருெரு கப்பலைத் திரு. எஸ். வேதமூர்த்தி பிரான்சுக்கு நேரில் சென்று வாங்கி வந்தார். இந்த இரண்டு கப்பல்கள் வாங்கிய அதே காலத்தில் இரண்டு இயந்திரப் படகு களும் வாங்கப்பட்டன.

ஒரே சமயத்தில் இருபெரும் கப்பல்களை விலைக்கு வாங்கித் தமிழகம் கொண்டு வந்த வீர சிதம்பர ஞரை இந்தியத் தினத்தாள்கள் பாராட்டின. வ.உ.சி.யை வாழ்த்தித் தலையங்கம் எழுதாத தேசியத் தாளே இல்லையெனலாம். கவியரசர் பாரதியார், அப்போது தாம் நடத்திவந்த வார இதழான 'இந்தியா'வில் 'வந்தேமாதரம்' என்னும் மந்திரச் சொல் பொறித்த கொடியுடன் 'காலியா' கப்பல் தூத்துக்குடித் துறைமுகத்தை அணுகுவதைப் போலவும், ஆடவரும் பெண்டிரும் குழந்தைகளும் திரளாகக்கூடி, 'வீர சிதம்பரம் வாழ்க!' என முழங்கிக் கப்பலை வரவேற்பது போலவும் படங்களை வெளியிட்டார். அதே இதழில் கப்பல்களை வரவேற்று எழுதிய பாரதியார், "நெடுங்காலமாக மகப் பேறின்றி அருந்தவம் செய்துவந்த பெண்ணுெருத்தி ஒரே சமயத்தில் இரண்டு மைந்தர்களைப் பெற்ருல் எத்துணை இன்பம் அடைவாளோ, அத்துணை இன் பத்தை நம் பாரத அன்னையும் இவ்விரண்டு கப்பல் களையும் பெற்றமைக்காக அடைவாளென்பது திண் ணமே" எனக் குறிப்பிட்டார்.

சுதேசிக் கப்பல் கம்பெனி நாளுக்குநாள் வலுப் பெற்று வளர்ந்து வந்தது. சுதேசிக் கப்பலிலேயே பொருள்களை ஏற்றுவதென மக்கள் உறுதி கொண்டு அதை நடைமுறையிலும் நிறைவேற்றலாயினர். முதலில் ஒரு சில வணிகர்கள் வெள்ளையர்களின் ஆசை மொழியில் சிக்கிக் கட்டுப்பாட்டை மீறி அந்நியர் கம்பெனியை ஆதரித்தனர். எனினும், சிதம்பரனாரின் வேண்டுகோளுக்கிணங்கி, அவர்களும் நல்வழிப்பட்டனர். வணிகர்கள் மட்டுமன்றிப் பயணி களும் அயல் நாட்டுக் கப்பல் கம்பெனியைப் புறக் கணித்துச் சுதேசிக் கப்பலில் பயணம் செய்தனர்.

**வெள்ளையர் போட்டி**

சுதேசிக் கப்பல் கம்பெனியின் செல்வாக்குப் பெருகுவதைக் கண்ட வெள்ளையர்கள் தங்கள் கம்பெனியின் கப்பல் கட்டணங்களை மிகவும் குறைத் தனர்; இந்திய வணிகர்களிடம் தரகர்களை அனுப்பிக் கெஞ்சினர். புகைவண்டி நிலையத்தில் கையாட்களை அமர்த்தித் தங்கள் கப்பல்களில்தான் சுதேசிப் பொருள்கள் போவதாகப் பொய்ப் பிரசாரமும் செய்தனர். அதனால் சுதேசிக் கம்பெனியாரும், இரயில்வே நிலையத்தில் தொண்டர்களை நிறுத்தி இந்திய வணிகர்களுக்கும் பயணிகளுக்கும் உண்மையைக் கூறித் தங்கள் கம்பெனிக்கு ஆதரவு தேடினர்.

போட்டியிட்டுக் கட்டணத்தைக் குறைத்தும், பொய்ம்மொழிகள் புகன்றும் எண்ணம் கைகூடாமற்

போகவே, வெள்ளைக் கம்பெனியார் தங்கள் கப்பலில் பயணிகள் கட்டணம் ஏதுமின்றி இலவசமாகச் செல்லலாமென்றும் அறிக்கை விடுத்தனர். அதுவும் பயன் தரவில்லை. இந்த மாய வித்தைகளினால் மக்களின் மன உறுதியைக் குலைக்க முடியவில்லை. அவர்கள் மனத்தில் நாட்டுப்பற்றாகிய தீ சுடர்விட்டு எரியத் தொடங்கியது. மக்கள் மன உறுதியை அறிந்த பிரிட்டிஷ் கப்பல் கம்பெனி முதலாளிகள் சிதம்பரனாரை அணுகி, சுதேசிக் கப்பல் கம்பெனியை விட்டு விலகுவதாயின் இலட்சம் ரூபாய் தருவதாக மன்றாடினர்.

> 'வீர சுதந்திரம் வேண்டி நின்றார் பின்னர்
> வேறொன்று கொள்வாரோ?'

என்று பாரதியார் கூறியவாறு நாட்டின் விடுதலைப் போரில் தம் உயிரையே பணயமாக்கத் துணிந்த வீரர், பொருளுக்காக நாட்டைக் காட்டிக்கொடுக்க துணிவாரோ? வெள்ளையரின் வஞ்சக வலையில் சிக்க மறுத்து அவர்களை விரட்டிவிட்டார். வீரர் சிதம்பரனார்,

> 'ஈன்றாள் பசிகாண்பா னாயினுஞ் செய்யற்க
> சான்றோர் பழிக்கும் வினை'

என்ற வள்ளுவரின் குறள் மொழியைக் குருமொழியாகக் கொண்டவர்.

### தொழிற்சங்கங்களின் தோற்றம்

சிதம்பரனார், கப்பல் வாணிகத்தோடு நில்லாமல் கைத்தொழில் வளர்ச்சியிலும் பயிர்த் தொழில்

வளர்ச்சியிலும் கவனம் செலுத்தினர். 1921ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 11ஆம் நாளன்று **சென்னை விவசாயக் கைத்தொழில் சங்கம் லிமிடெட்** என்ற ஒரு சங்கத்தைச் சென்னை நகரில் தொடங்கி வைத்தார். தொழில் துறையில் அனுபவமுள்ள பலர் அவருக்குத் துணை புரிந்தனர். அவர், பங்கு ஒன்றுக்குப் பத்து ரூபாய் வீதம் பத்தாயிரம் ரூபாய் மூலதனம் சேர்க்கத் திட்டமிட்டார். பங்குத் தொகையான பத்து ரூபாயையும் பத்துத் திங்களுக்குள் பல தவணை களில் செலுத்தலாமெனச் சங்கம் அறிவித்தது. ஏழைத் தொழிலாளர்களும் உழவர்களும் சங்கத்தின் பங்காளிகளாகச் சேரவேண்டும் என்பதற்காகவே இந்தச் சலுகை ஏற்படுத்தப்பட்டது. சங்கத்தின் குறிக்கோள்களாவன :

உழவர், தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல்,

உழவும், கைத்தொழிலும் புதிய முறைப்படி வளர்ச்சி பெறச் செய்தல்,

சோப்பு, மெழுகுவர்த்தி, பொத்தான் ஆகிய பொருள்களை உற்பத்தி செய்வதற்கான தொழிற்சாலை களை ஏற்படுத்துதல்,

சுதேசிக் கைத்தொழில்களில் மாணவர்களுக்குப் பயிற்சியளிக்கத் தொழிற் கல்லூரி யொன்றை ஏற் படுத்துதல்,

சென்னை மாநிலத்தில் பல மாவட்டங்களிலும் தரி சாகக் கிடக்கும் விளைநிலங்களை வாங்கி, விஞ்ஞான

முறைப்படி பயிர்த்தொழில் செய்ய உழவர்களுக்குப் பயிற்சி அளித்தல்.

மற்றும், சிதம்பரனார் தரும சங்க நெசவுச்சாலை, தேசிய பண்டகசாலை என்ற இரண்டு துணை நிலையங்களையும் தூத்துக்குடியில் தோற்றுவித்தார். இந்த நிலையங்களுக்கு மக்களிடையே ஆதரவு தேடச் சுதேசிப் பிரசார சபை யொன்றையும் தமிழகத்தின் தலைநகராகிய சென்னையில் நிறுவினார். திரு. வி. சர்க்கரைச் செட்டியாரவர்கள் இச் சபையின் தலைவராக இருந்து சுதேசிய வளர்ச்சிக்குப் பணி புரிந்தார்.

## வெள்ளையர் தந்த தொல்லைகள்

வடக்கே வங்கப் பிரிவினை எதிர்ப்பு இயக்கத்தால் ஆங்கில ஆதிக்கம் ஆட்டங் கண்டிருந்தது. அதே சமயத்தில், தெற்கே தமிழகப் போர் முனையில் ஆங்கிலேயருடைய கப்பல் வாணிகச் சுரண்டலுக்கு முடிவுகட்ட முனைந்தார் சிதம்பரனார். எனவே, ஆங்கிலேய ஆதிக்க மென்னும் நச்சு மரமானது இந்திய மண்ணில் வேருடன் விழுந்து விடுமோ என்று அதிகார இனம் அச்சங் கொண்டது.

ஆதலால், பிரிட்டிஷ் கம்பெனி முதலாளிகளுக்குத் துணையாகச் சுதேசிக் கப்பல் கம்பெனியை அழிக்கும் கொடுஞ் செயலில் ஈடுபடலாயினர் அரசாங்க அதிகாரிகள். இந்திய அதிகாரிகள் எவரும் சுதேசிக் கப்பலில் பயணஞ் செய்யக் கூடாதெனத்

தூத்துக்குடித் துணை நீதிபதி வர்லர் என்பவர் இரகசியச் சுற்றறிக்கை விடுத்தார். வெள்ளை அதிகாரிகள் தங்கள் செல்வாக்குக்கு உட்பட்ட இந்திய வணிகர்களை அணுகி, சுதேசிக் கப்பலில் பொருள்களை ஏற்றக்கூடாதென அச்சுறுத்தினர். இந்திய உயர்தர அதிகாரிகள் ஒவ்வொருவரும் சுதேசிக் கப்பல் கம்பெனியை அழிக்கும் வேலையில் ஈடுபடுமாறு வெள்ளை அதிகாரிகளால் வற்புறுத்தப் பட்டனர். இந்த இழி செயலில் இறங்க மனமற்ற அதிகாரிகளில் சிலர், போலிக் காரணங்கள் காட்டி ஓய்வு பெற்றுக்கொண்டனர். மற்றும் பலர், தம் பதவியை வெளி மாவட்டங்களுக்கு மாற்றிக்கொண் டனர்.

ஒரு சமயம் சுதேசிக் கம்பெனிக் கப்பலானது பிரிட்டிஷ் கம்பெனிக் கப்பலொன்றின்மீது மோத முயன்றதாக, பிரிட்டிஷ் கம்பெனி நிருவாகிகள் அதிகாரிகளிடம் முறையிட்டனர். அதுமுதல் பிரிட் டிஷ் கம்பெனிக் கப்பல் புறப்பட்டுச் சென்ற பிறகே சுதேசிக் கம்பெனியின் கப்பல் புறப்பட வேண்டு மெனத் துணை நீதிபதி உத்தரவிட்டார். முதலில் செல்லும் கப்பல் என்ற காரணத்தால் பிரிட்டிஷ் கம்பெனிக் கப்பலில் ஏறுமாறு மக்களைத் தூண்டு வதற்கே இந்தச் சூழ்ச்சி செய்யப்பட்டது. இந்த அநீதியான உத்தரவை எதிர்த்து மாவட்ட நீதிபதி யிடம் சுதேசிக் கம்பெனியார் முறையிட்டனர். தங்கள் கப்பல், பிரிட்டிஷ் கம்பெனிக் கப்பலுடன் மோதியதோ அல்லது மோத முயன்றதோ இல்லை

என்று மெய்ப்பித்தனர். துணை நீதிபதியின் உத்தரவு நியாயமற்றதென உணர்ந்த மாவட்ட நீதிபதி, சுதேசிக் கப்பல் எந்த நேரத்திலும் புறப்பட உரிமை உண்டெனத் தீர்ப்பளித்தார்.

தூத்துக்குடியில் எங்காவது ஒரு மூலையில் ஒன்றிரண்டு பேருக்கு வயிற்றுப்போக்கு ஏற்பட்டு விட்டால் போதும். ஊரில் 'காலரா' என்னும் நோய் இருந்து வருவதால் யாரும் கப்பல் பயணம் செய்யக்கூடாதென்று மிகைப்படுத்திப் பிரசாரம் செய்வர் சுகாதார அதிகாரிகள். கலோனியல் டாக்டர், கடற் சுங்க அதிகாரி, துறைமுக அதிகாரி ஆகிய வெள்ளை அதிகாரிகள் அத்தனை பேரும் சுதேசிக் கப்பலில் செல்பவருக்குத் தங்களால் எவ்வளவு தொல்லை கொடுக்க முடியுமோ அவ்வளவு தொல்லை கொடுத்து வந்தனர்.

## 6. அரசியல் வாழ்க்கை

**உரிமை வேட்கை**

சிதம்பரம் பிள்ளை சுதேசியத்தின் மறுமலர்ச் சிக்குச் சேவை செய்வதோடு நின்றுரில்லை; அரசியலி லும் கலந்து பணியாற்றினுர். நீண்டகால அடிமைத் தனத்தின் பயனுக, இந்திய நாட்டின் செம்மையெ லாம் பாழாகிக் கொடுமையே தலைதூக்கி நின்றது. இந்நிலையிலிருந்து நாட்டை மீட்டுக் குடிமக்கள் சொன்னபடி நடக்கும் குடியரசை அமைப்பதே இனித் தமது வேலையென எண்ணினுர். அவ்வெண் ணத்தை நிறைவேற்ற இந்திய மக்களின் தாய்ச் சபையாம் காங்கிரசு இயக்கத்தில் சேரலானுர்.

சிதம்பரம் பிள்ளை, ஆண்டுதோறும் கூடும் காங்கிரசுப் பேரவைக்குப் பிரதிநிதியாகச் சென்று வந்தார். அந் நாளில் காங்கிரசில் பாமரர்களின் ஆதிக்கம் வலுக்கவில்லை. செல்வர்களும், வழக் கறிஞர்களும் அம் மகாசபையை நடத்தி வந்தனர். அவர்களிலும் இரண்டு பிரிவுகள் இருந்தன. ஒன்று மிதவாதம்; மற்ருென்று தீவிர வாதம். பிள்ளை யவர்கள், தீவிரவாதிகள் கூட்டத்தைச் சேர்ந்தவர்.

காங்கிரசில் மிதவாதிகளே எண்ணிக்கையிலும், செல்வாக்கிலும் மிகுந்திருந்தனர். இவர்கள் ஆண்டு தோறும் காங்கிரசுப் பேரவையைக் கூட்டி, அரச வாழ்த்துக்குப்பின் அழகான தீர்மானங்கள் நிறை வேற்றுவதும் சரமாரியாகப் பேசுவதும் தவிர, செயலில் எதுவும் செய்து காட்டத் துணிவு கொண் டார்களில்லை. சுயராச்சியம் என்ருல், 'வெள்ளை யருக்குப் பதில் இந்தியர். ஆள்வது' என்பதே, அவர் களது விளக்கம்.

**திலகர் தலைமை**

1907ஆம் ஆண்டு சூரத் நகரில் கூடிய காங்கிரசு, மிதவாதிகளுக்கும் தீவிரவாதிகளுக்கும் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால் குழப்பத்தில் கலைந்தது. அதன் பின்னர் **லோகமான்ய திலகர்** தலைமையில் தீவிரவாதிகள் ஒன்றுகூடித் தங்கள் முற்போக்குக் கொள்கைகளை நாடெங்கும் பரப்பி, நாட்டு மக்களை உரிமைப் போருக்கு ஆயத்தம் செய்வதெனத் தீர்மானித்தனர். திலகர், தமிழ் நாட்டில் தமது கொள்கைக்கு ஆதரவு தேடும் பொறுப்பு அனைத்தை யும் சிதம்பரனரிடமே ஒப்படைத்தார்.

அந்நிய ஆட்சியினுல் விளையும் தீமைகளைப் பொதுமக்களிடம் விளக்கிக் கூறி, அவர்களை நாட்டுப் பற்று மிக்கவர்களாகச் செய்யும் நோக்கத்துடன் சிதம்பரம் பிள்ளையவர்களின் முயற்சியால் 1908ஆம் ஆண்டில் திருநெல்வேலியில் **தேசாபிமான சங்கம்** நிறுவப் பெற்றது. இச் சங்கத்தார் அடிக்கடி

பொதுக்கூட்டங்கள் கூட்டிச் சுதேசிப் பற்று, பிற நாட்டுப் பொருள் புறக்கணிப்பு, தேசியக் கல்வி ஆகியவற்றின் இன்றியமையாமையை விளக்கிப் பிரசாரம் செய்து வந்தனர். சங்கம் வளர்பிறை போல் நாளுக்கு நாள் வளர்வதாயிற்று.

**துறவி சுப்பிரமணிய சிவா**

**சுப்பிரமணிய சிவா** என்பவர் மதுரை மாவட்டத்தைச் சார்ந்த வத்தலக்குண்டு என்னும் ஊரில் ஊராட்சித் தலைவர் ஒருவரின் மகனாகப் பிறந்தவர்; அவர் ஆங்கில ஞானமும், தமிழறிவும் ஒருங்கே படைத்தவர்; இளமையிலேயே மனைவியைப் பிரிந்து, குடும்ப வாழ்க்கையை வெறுத்துத் துறவு பூண்டவர். வீட்டை வெறுத்து வெளியேறிய நிலையிலும் அவரால் நாட்டை வெறுக்க முடியவில்லை.

இளமைப் பருவம் காரணமாக இயற்கையாகவே புரட்சியுள்ளம் படைத்திருந்த சிவா, நாட்டில் வளர்ந்து வந்த விடுதலை இயக்கத்தினால் புத்துணர்ச்சி பெற்றார். அஞ்சா நெஞ்சமும், நினைத்த மாத்திரத்திலேயே எதையும் செய்து முடிக்கும் ஆற்றலும் அவரிடம் நிரம்பியிருந்தன. தன்னந்தனியே, ஊர் ஊராகச் சென்று சுதேசிப் பிரசாரம் செய்து வந்த சிவா, 1907ஆம் ஆண்டு திருநெல்வேலிக்கு வந்து சேர்ந்தார். அவரது வருகையை அறிந்த 'தேசாபிமான சங்கத்தார்' அவரைத் தங்கள் பிரசாரத்திற்குப் பயன்படுத்திக் கொண்டனர். சிவா, பொதுக்

கூட்டங்களில் தொடர்ந்து பேசி வந்தார். சிவா வின் சொற்பொழிவைக் கேட்க மிக்க தொலைவி லிருந்தும் மக்கள் திரள் திரளாக வந்தனர். சிவா தூத்துக்குடிக்கும் வந்து பல பொதுக்கூட்டங்களில் பேசினுர்.

இக் காலத்தில் சிதம்பரனுர், சுதேசிக் கப்பல் கம்பெனியின் செயலாளராக இருந்ததால் கம்பெனி வேலை முடிந்ததும் மாலை நேரங்களில் தூத்துக்குடிக் கடற்கரையில் நடைபெறும் பொதுக்கூட்டங்களுக்கு வந்து சிவாவின் பேச்சைக் கேட்டு அகமகிழ்வார். இருபத்திமூன்று வயதுகூட நிரம்பப் பெருத இளைஞ ரான சிவாவின் துறவிக்கோலமும் துடிதுடிப்பான பேச்சும் சிதம்பரனுரின் சிந்தையைக் கவர்ந்தன.

''கற்ருரைக் கற்ருரே காமுறுவர்''

என்னும் ஆன்ருேர் மொழிப்படி சிதம்பரனுரும், சிவாவும் நட்புக் கொண்டனர்.

**வ. உ. சி. பேசுகிருர்**

நாளடைவில், பொதுமக்களின் வற்புறுத்தலினுல் சிதம்பரனுரும் பொதுக்கூட்டங்களிற் பேசலானுர். சிவாவின் பேச்சில் நெருப்புப் பொறி பறக்கும்; சிதம்பரனுர் பேச்சு, சூறைக் காற்றுப்போல் சுழற்றி யடிக்கும். ஏற்கெனவே எரிந்து கொண்டிருக்கும் தீயுடன் காற்றும் சேர்ந்தால் கேட்கவேண்டுமா? மக்களின் மனத்தில் நாட்டுப்பற்று நன்கு சுடர்விட் டெரியலாயிற்று. வெள்ளை முதலாளிகளின் கொடு

மைகளுக்கு ஆளாகியிருந்த ஆர்வி மில் தொழிலாளர் களுக்கு, இவர்களின் ஆவேசப் பேச்சுக்கள் புத்துணர்ச்சியை உண்டாக்கின. சுதேசிப் பொருள் களை ஆதரிக்க வேண்டியதன் இன்றியமையாமையை வாதத் திறமையுடன் வற்புறுத்திக் கூறுவார் வ. உ. சி. அவர், "அந்நிய நாட்டுப் பொருள்களை விடத் தாய்நாட்டுப் பொருள்களின் விலை அதிகமாக இருக்கிறதே" என்போருக்கு, "அதிக விலையா? யாருக்குக் கொடுக்கிறீர்கள்? உங்கள் நாட்டு மக்கள்—உங்கள் சகோதரர்களுக்குத்தானே தரு கிறீர்கள்?" எனப் பளிச்சென்று பதிலளிப்பார்.

"இந்தியர்களுக்கு ஆளத் தெரியாது; அவர் களிடம் அரசாங்கத்தை ஒப்படைத்தால் அமைதி குலையும்; துன்பம் நேரும்" என்பது அக்காலத்தில் ஆங்கிலேயர் அடிக்கடி பாடிவந்த பல்லவி. மிதவாதக் கூட்டத்தார் அதனை ஆதரித்தனர். அவர்களின் கூற்றை ஆவேசமாகக் கண்டித்தார் வ. உ. சி.

"நாம் ஆளத் தெரிந்துகொண்டு வந்தால், நம் மிடம் அரசாங்கத்தை ஒப்படைப்பார்களாம்! இஃது அறியாமைப் பேச்சு. இது நீந்தத் தெரிந்துகொள்ள விரும்புபவனை நீ முதலில் நீந்தக் கற்றுக்கொண்டு வா; பிறகு நீரில் இறங்கலாம் என்று சொல்வது போலாகும். ஒரு குழந்தையை ஓடப் பழக்க வேண்டுமானால், அஃது எத்தனையோ தரம் விழும்; அடிபட்டுக்கொள்ளும்; இவ்வளவும் ஆனால்தான் ஓடி ஆடக் கற்றுக்கொள்ளும். அதுபோலவே,

நாமும் சுயராச்சியத்தில் இப்போதே நுழைந்து பல தவறுகளும் செய்து, அவற்றை உணர்ந்து தேர்ச்சி பெற்றுத்தானாக வேண்டும். அந்நியருக்கு அடிமை களாக வாழ்வதைவிட ஆளத் தெரியாததால் அழிந்து விடுவதே மேல்" எனக் கூறி, வம்பளக்கும் மிதவாதக் கூட்டத்தை வாயடைக்கச் செய்வார் சிதம்பரனுர்.

தூத்துக்குடியில் சுதேசிக் கிளர்ச்சி அரசியல் புரட்சியாக உருவெடுப்பதை அறிந்த அதிகாரிகள், "மக்களில் எவரும் ஆயுதங்களோ, தடிகளோ, கம்பு களோ எடுத்துக்கொண்டு வெளியே செல்லக் கூடாது" என்று ஆணை பிறப்பித்தனர். இதை அறிந்து சிதம்பரனுர் ஆத்திரப்பட்டார். வேல் பிடித்த வீரத் தமிழரின் கைகள் வெறுங் கோல் பிடிக்கவும் உரிமையற்றுப் போனதைப்பற்றி அவர், "ஆங்கிலேயர்கள் நாம் தடிகளும் கம்புகளும் வைத் துக்கொள்வதைக்கூடத் தடை செய்யத் துணிந்து விட்டனர். சுதேசிகள் 5½ அடி நீளத்துக்கு மேலுள்ள கம்புகளைக் கையிலெடுத்துக்கொண்டு வெளியே செல்லக்கூடாதாம்! உண்மையில், நாம் இப்போது தான் வலிமை அடைந்துவிட்டோம். படை வலிமை படைத்த அரசாங்கம் நாம் கம்பு தாங்குவதைக் கண்டும் அஞ்சுகிறது. இந்தியர்களே! நீங்கள் இந்தக் கம்பையும் விட்டுவிடவேண்டா. இதையும் விட்டு விடுவீர்களானுல், உங்களுடைய சந்ததிகள், பரங்கி யரின் உள்ளங் கால்களை வருட வேண்டிய நிலை மைக்கு வந்துவிடுவார்கள்." எனப் பேசி அரசாங்கத்

தாரின் ஆணைகளை மீறுமாறு எதிர் ஆணை பிறப்பித்தார்.

சிதம்பரனார் அடிமைத்தனத்தால் மக்கள் படும் அவதியை வருணிக்கும்போது அவர் கண்களில் தாரை தாரையாக நீர் பெருகும். சில சமயங்களில் அவர் நெஞ்சு விம்மி நிலைகுலைந்து புலம்புவார். ஆனால், மறுகணத்திலேயே அந்த அழுகை ஆவேசமாக மாறும். "ஆளப் பிறந்த மக்கள் அடிமைகளாக வாழ்வதா? பண்டம் விற்க வந்த வணிகக் கூட்டம் பாரத நாட்டை ஆள்வதென்றால், அதை நாம் பார்த்திருப்பதா? முப்பது கோடி மக்களை 9600 கிலோ மீட்டர்களுக்கப்பாலிருந்து வந்த ஐந்து இலட்சம் வெள்ளையர்கள் ஆள்வதென்றால், இதை விட இழிநிலை வேறு என்ன இருக்க முடியும்?", என்று அவர் கூறும்போது கேட்கும் மக்களின் மனத்திலே கிளர்ச்சி பொங்கி எழும். அந்தக் கிளர்ச்சி திருநெல்வேலிப் புரட்சிக்கு அடிப்படையாக அமைந்தது. சிதம்பரனார் மேடைப் பேச்சோடு நின்று விடாமல் வீரத்திற்கு விளை நிலமான பாண்டி நாட்டில் பிரிட்டிஷ் ஆதிக்கத்திற்கு எதிராகப் படை திரட்டினார். சலவைத் தொழிலாளர், வண்டி ஓட்டுவோர் முதலிய பாட்டாளி மக்கள் அனைவரும் அவரது படையில் சேர்ந்தனர். கிராமத்திற்குக் கிராமம், வீதிக்கு வீதி கூட்டங்கள் கூட்டி அவர் சுதேசிக் கிளர்ச்சியில்—சுதந்திரப் புரட்சியில்—ஈடுபடுமாறு மக்களைத் தூண்டினார்.

993

**விபின சந்திர பாலர் விடுதலை விழா**

அறிஞர் **விபினசந்திர பாலர்,** இந்திய தேசிய காங்கிரசு முன்னணித் தலைவர்களில் ஒருவர். அவர் வங்க மாநிலத்தின் முடிசூடா மன்னரெனப் புகழப் பெற்றவர். நாவன்மையில் இந்தியா முழுவதிலும் அந்தக் காலத்தில் அவருக்கு இணையாக இன்னொருவரைச் சொல்ல முடியாது. 'கேட்டார்ப் பிணிக்கும் தகையராய்க் கேளாரும் வேட்ப மொழியும் வித்தகராய்த் திகழ்ந்தார் விபின சந்திரர். அக்காலத்தில் காங்கிரசின் தீவிரக் கட்சித் தலைவர்களில் ஒருவராக விளங்கிய **அரவிந்த கோஷ்மீது** ஒரு சதி வழக்கு நடைபெற்றது. அந்த வழக்கில் அரசு தரப்புச் சாட்சியாக விபினசந்திர பாலர் அழைக்கப்பட்டிருந்தார். அரவிந்தருக்கு விரோதமாகச் சாட்சி கூறப் பாலர் சம்மதிக்கவில்லை. ஆகவே, நீதிமன்றத்தை அவமதித்த குற்றத்திற்காக ஆறு திங்கள் சிறைத் தண்டனை அடைந்தார். தமது தண்டனைக் காலம் முடிந்ததும் 1908ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 9ஆம் நாள் பாலர் விடுதலைப் பெற்றார். அவர் விடுதலை பெறும் நாளைத் திருநெல்வேலி மாவட்டமெங்கும் திருநாளாகக் கொண்டாடுவதெனத் தேசாபிமான சங்கத்தார் தீர்மானித்தனர். இதனையறிந்த அரசு அதிகாரிகள் பெரிதும் கலங்கினர். மார்ச்சு 9ஆம் நாளன்று தூத்துக்குடியில் ஊர்வலமோ, பொதுக்கூட்டமோ நடத்தக் கூடாதென்று நீதிபதி தடையுத்தரவு பிறப்பித்தார். மக்கள், தங்கள் நலத்தைக் கோரிப் பாடுபட்ட தலைவர் சிறைத் துன்பத்திலிருந்து விடுபட்டதற்கு மகிழ்ச்சி

யைத் தெரிவிக்கும் கொண்டாட்டங்களை நடத்து வதற்குக்கூட இசைவளிக்க அதிகார வர்க்கம் மனங் கொள்ளவில்லை. விபினசந்திர பாலர் ஆங்கிலேய ஆதிக்கத்தின் எதிரியாகையால் அரசினர் இசை வளிக்க மறுத்தனர்.

**வழக்குமன்றத்தில் வ. உ. சி.**

நீதிபதி, சிதம்பரம் பிள்ளையை நேரில் வரவழைத் துப் பாலர் விடுதலைக் கொண்டாட்ட சம்பந்தமாக நடைபெறவிருக்கும் ஊர்வலங்களிலோ, பொதுக் கூட்டங்களிலோ கலந்துகொள்ளக் கூடாதென எச் சரிக்கை செய்தார். அங்ஙனம் எழுத்து மூலம் உத்தரவு தரும்படி சிதம்பரனார் கேட்டதற்கு நீதிபதி மறுத்துவிட்டார்.

பிள்ளையவர்களின் தீவிரப் போக்கையும் அதி காரிகளின் அடக்குமுறையையும் கண்ட சுதேசிக் கப்பல் கம்பெனி நிருவாகிகள், இதனால் யாது விளை யுமோ என அச்சங்கொண்டு நிர்வாகக் குழுவின் அவசரக் கூட்டத்தைக் கூட்டினர். அதில், கம்பெனி யின் நன்மையைக் கருதிச் சிதம்பரனார் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடலாகாதெனத் தீர்மானித் தனர். 'வளர்த்த கடா மார்பில் பாய்வது' போன்ற இந்த நடவடிக்கையைக் கண்டு சிதம்பரனார் மனம் வருந்தினார்.

சுதேசிக் கம்பெனிப் பங்குதாரர்களில் பலப் பெரும்பாலோர் இலாபத்தைக் கருதியே சேர்ந்த வர்கள். அவர்கள், நாட்டில் கொழுந்துவிட்டெரிந்த

சுதேசி இயக்கத் தீயில் சுயநலக் குளிர்காய நினைத் தார்கள். ஆனால், கம்பெனியைத் தோற்றுவித்த சிதம்பரனாரின் எண்ணமோ வேறு விதமாக இருந் தது. அவர் கம்பெனியைத் தொடங்கியது தமக்குப் பொருள் சேர்ப்பதற்கோ புகழ் சேர்ப்பதற்கோ அன்று. இந்தியாவின் செல்வத்தைச்சுரண்டிக்கொண் டிருக்கும் வெள்ளை வணிகக் கூட்டத்தை இந்தியக் கண்டத்தை விட்டு விரட்டுவதற்கேயாகும். ஆகவே, சிதம்பரனார் கம்பெனி நிருவாகிகளின் தீர்மானப்படி நடக்க மறுத்துவிட்டார்.

கப்பல் கம்பெனி நிருவாகிகள் மட்டுமன்றிச் சிதம்பரனாரின் நெருங்கிய நண்பர்கள் பலரும் அவரை அரசியலில் ஈடுபட வேண்டாவெனக் கேட் டுக்கொண்டனர். "சுதேசியத்தை வளர்ப்பதோடு நாம் நின்றுவிடுவோம். பிறநாட்டுப் பொருள்களைப் புறக்கணிக்கும் கிளர்ச்சியை மற்றவர்கள் நடத்தட் டும்" என்பது அந்த நண்பர்களின் கொள்கை. இது சிதம்பரனாருக்குப் பிடிக்கவில்லை. தம்மை வேண்டிக் கொண்ட நண்பர்களுக்குச் சிதம்பரனார் பின் வருமாறு பதில் விடுத்தார்:

"சிலர், சுதேசியத்தை வற்புறுத்துங்கள்; அந் நியப் பொருள்களை விலக்குமாறு பேசாதீர்கள் என்றனர்; இது வெறும் பிதற்றல். அந்நியப் பொருள்களை விலக்காமல் சொந்தப் பொருள்களை எவ்வாறு வளரச் செய்வது? மெய் பேசவேண்டு மென்றால், பொய்யை விலக்க வேண்டும்; நல்லொழுக் கத்தைக் கைப்பற்றவேண்டும் என்றால் தீய ஒழுக்கத்

தைக் கைவிடவேண்டும். அதுபோலவே சுதேசிப் பொருள்களை வளர்க்கவேண்டுமாயின் பிறநாட்டு பொருள்களைப் புறக்கணிக்கத்தான் வேண்டும். இது சொல்லாமலே தெரியவில்லையா?

"சுதேசியமென்பது வெறும் பொருள்களோடு நிற்பதன்று. வாணிகத்தில் சுதேசியம்; கல்வியில் சுதேசியம்; ஆட்சியில் சுதேசியம்; இப்படி நமது வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் சுதேசி மணம் கமழ வேண்டுமென்பதே எனது உள்ளக் கிடக்கை.

"நமக்குள் நேரும் வழக்குக்களைக்கூட நாமே தீர்த்துக்கொள்ள வேண்டும். அந்நிய ஆட்சி அமைத்துள்ள நீதிமன்றங்களுக்குப் போகக்கூடாது. ஊருக்கு ஒரு நீதி மன்றம்; தெருவுக்கு ஒரு மக்கள் மன்றம் ஏற்படவேண்டும்."

பிள்ளையவர்கள் சுதேசிக் கப்பல் கம்பெனியைத் தொடங்கியது சுதந்தரப் போருக்குத் துணை புரியவே என்பதை உணர்ந்த வெள்ளை ஆதிக்க ஆட்சி அவர்மீது வலுவில் போர் தொடுத்தது. எனி னும், சிதம்பரனுர் சிறிதும் அஞ்சவில்லை. கலெக் டரின் அதிகார ஆணையையோ, சாசாசை கொண்ட கம்பெனி நிருவாகிகளின் கட்டளையையோ அவர் சிறிதும் மதிக்கவில்லை.

**'எங்கும் சுதந்தரம் என்பதே பேச்சு'**

முன் ஏற்பாட்டின்படியே மார்ச் 9ஆம் நாள் விபின சந்திரபாலரின் விடுதலைத் திருநாள் திருநெல்

வேலியில் சிறப்பாக நடைபெற்றது. கலகம் ஏதும் நிகழாதிருக்கக் காவல் அதிகாரிகள் முன்னெச்சரிக்கையான ஏற்பாடுகளைச் செய்திருந்தனர். சிதம்பரனாரும் சிவாவும் கலெக்டரின் தடையுத்தரவை மீறிப் பதினாயிரக்கணக்கான மக்களடங்கிய ஊர்வலத்தில் கலந்து கொண்டதுடன் பொதுக்கூட்டத்திலும் பேசினார்கள்.

இவ்விதமாகத் திருநெல்வேலி மாவட்டம் வங்காளத்தையும் விஞ்சி நின்றது. எங்கும் சுதந்தரப் பேச்சு; வந்தேமாதர முழக்கம்; வெள்ளையரைக் கண்டால் வெறுப்பு; அதிகாரிகளைக் கண்டால் ஆத்திரம்; அந்நிய ஆடை தரித்தவரைக் கண்டால் கோபம். அந்நியக் கப்பல் கம்பெனியை ஆதரிப்பவர்களுக்கும், அந்நிய ஆடையை அணிந்தவர்களுக்கும் சுதேசிக் கிளர்ச்சியை அடக்குவதில் அதிகாரிகளுடன் ஒத்துழைக்கும் தேசத் துரோகிகளுக்கும் சலவைத் தொழிலாளி துணி வெளுக்கமாட்டார்; சிற்றுண்டிக் கடைக்காரர் சிற்றுண்டி தரமாட்டார்; வண்டிக் காரர் வண்டி ஓட்டமாட்டார். இவ்வாறு திருநெல்வேலி மாவட்டமெங்கும் சிதம்பரனார் இட்டது சட்டமாயிற்று. அவர் வார்த்தைக்கு மறுவார்த்தை கூறுவாரில்லை. அவரது ஆணை பிறந்தால் அனலையும் விழுங்க மக்கள் ஆயத்தமாய் இருந்தனர்.

## 7. ஆர்வி ஆலையில் வேலை நிறுத்தம்

**தொழிலாளரின் துன்ப வாழ்க்கை**

முன்பு தூத்துக்குடியில் '**கோரல் மில்**' என்னும் தொழில் நிறுவனம் ஒன்று இருந்தது தற்பொழுது அஃது ஆர்வி மில் என்று அழைக்கப்படுகிறது. அந் நிறுவனத்தின் தொழிலாளர்கள் தங்கள் கூலி விகிதத்தை உயர்த்த வேண்டுமென்று நிருவாகி களிடம் விண்ணப்பித்துக் கொண்டார்கள். நிருவாகி கள் தொழிலாளர்களின் குறையைத் தீர்க்க இசைய வில்லை. ஆகவே, தொழிலாளர்கள் ஒன்று திரண்டு ஒரு மனப்பட்டு வேலை நிறுத்தஞ் செய்தனர். மெய் வருந்த உழைத்துக் கூலி பெறும் நாட்களிலேயே அரை வயிற்றுக் கஞ்சிக்கும் வழியின்றி அவதிப்படும் ஏழைத் தொழிலாளர்கள், வேலைநிறுத்த நாட்களில் குடும்பத்தைக் காப்பதெங்ஙனம்? அந்தத் தொழி லாளர்கள் தங்கள் மனைவி மக்களுடன் பட்டினி கிடக்க நேர்ந்தது.

**வேலை நிறுத்தம்**

இதை அறிந்த வீரர் ஒருவர் கருணையுடன் முன் வந்து தமக்குத் தெரிந்த வழக்கறிஞர்களின் துணை

யுடன் பொதுமக்களிடம் நன்கொடை பெற்று வேலை நிறுத்தஞ் செய்துள்ள தொழிலாளர்களுக்கு உதவினர்; அவர்களுடைய மனைவி மக்களைக் காப்பாற்றினர். அந்த வீரரின் வேண்டுகோளுக்கிணங்கி, வேலை நிறுத்தஞ் செய்துள்ள 2000 தொழிலாளர்களில் 1000 பேருக்குத் தூத்துக்குடி நகர மக்கள் தற்காலிகமாக வேறு வேலைகளைக் கொடுத்து ஆதரித்தனர். வேலை நிறுத்த நாட்களில் மாலை நேரத்தில் பொதுக்கூட்டம் நடைபெறும். அக் கூட்டங்களில் அவ்வீரர் பேசுவார். தொழிலாளர்களின் கோரிக்கைகளுக்கு மில் முதலாளிகள் இணங்கினலொழியப் பணியக் கூடாதென அவர் பறை சாற்றினர். அவர் தம் உணர்ச்சிமிக்க வீர உரைகளைக் கேட்ட தொழிலாளர்கள், உறுதியும் ஊக்கமுங் கொண்டு வேலை நிறுத்தத்தைத் தொடர்ந்து நடத்தி வந்தனர்.

இதனல் மில் முதலாளிகள் அவர்மீது சீற்றங் கொண்டனர். அவர், முதலாளிகளைக் கெடுக்க வேண்டுமென்றே கெட்ட எண்ணங்கொண்டு தொழிலாளர்களை வேலை நிறுத்தஞ் செய்யத் தூண்டினர் என்றும், அவர்தம் சொற்பொழிவுகளால் ஊரில் கலகமேற்படுமென்றும் முதலாளிகள் நீதி மன்றத்தில் முறையிட்டனர். நீதிபதி அத் தொழிலாளர் தலைவரை நேரில் வரவழைத்து, அவர்தம் சொற்பொழிவுகளால் ஊரில் அமைதி குலையுமெனத் தாம் நினைப்பதால் இனி எந்தப் பொதுக்கூட்டங்களிலும்

பேசக்கூடாதென எச்சரிக்கை செய்தார். அவ்வீரர் நீதிபதியின் எச்சரிக்கையை மீறி,

> ''அஞ்சுவது யாதொன்றுமில்லை—இனி
> அஞ்ச வருவதுமில்லை''

என்ற நெஞ்சுறுதியுடன் தொழிலாளர் கூட்டங்களில் தொடர்ந்து பேசி வந்தார்.

**தொழிலாளர் துயர்**

ஆர்வி மில் வேலை நிறுத்தச் செய்தி மதுரையிலும் பரவியது. ஆர்வி மில் நிர்வாகத்திற்குட்பட்ட மதுரைப் பஞ்சாலைத் தொழிலாளர்களும் வேலைக்குச் செல்ல மறுத்துவிட்டனர். தூத்துக்குடி வேலை நிறுத்தம் ஒரு வாரம்வரை நீடித்தது. இறுதியில் மில் முதலாளிகள் பணிந்துவிட்டனர். தொழிலாளர்களின் கூலியை அரைப்பங்கு உயர்த்துவதாகவும், நோய்வாய்ப்பட்ட நாட்களில் விடுமுறை தருவதாகவும் முதலாளிகள் வாக்களித்துத் தொழிலாளர் தலைவருடன் உடன்படிக்கை செய்து கொண்ட பிறகு, தொழிலாளர்கள் வழக்கம்போல் வேலைக்குத் திரும்பினர்.

வேலை நிறுத்த நாட்களில் பொதுமக்களின் உணர்ச்சியைக் கண்டு பயந்த தூத்துக்குடி வெள்ளையர்கள், இராக் காலங்களில் நகரிலிருக்க அஞ்சிப் பெண்டு பிள்ளைகளுடன் துறைமுகஞ் சென்று இராப்பொழுதைக் கப்பலிலேயே கழித்து வந்தார்களாம். இந்த விதமாகத் தொழிலாளர்களுக்குத் தலைமை தாங்கி ஊரெல்லாம் புரட்சிக் கனலைக்

கிளப்பிய அவ்வீரர் யார்? அவரே தேசபக்தர் **வ. உ. சிதம்பரம் பிள்ளை.**

சிதம்பரம் பிள்ளையின் சொற்பொழிவுகளால் மக்களின் மனத்தில் நாட்டுப் பற்றுப் பொங்கி யெழு வதைக் கண்டு அதிகாரிகள் அச்சங் கொண்டனர். எனவே, கலெக்டர் ஊரிலுள்ள பெருமக்களைக் கூட்டிக் கலகம் நிகழாமல் தடுக்கவும், மக்கள் அரசிடம் அன்புடையவர்களாக இருக்கவும் என்ன செய்யலாமென்று கலந்து பேசினர்; தூத்துக்குடியில் அதிகமான காவல் படையை வைக்க விரும்புவ தாகவும் கூறினர். கூட்டத்தில் அக்கருத்தைப் பெரும்பாலோர் எதிர்த்தனர். ஆனால், அரசிடம் அன்பு கொண்ட வழக்கறிஞர் திரு. அரங்கசாமி என்பவர் மட்டும் அதனை உளமார ஆதரித்தார். காவல் படையைத் தருவிக்காவிடில் சிதம்பம் பிள்ளை யின் வீரம்மிக்க சொற்பொழிவுகளால் ஊரே அழிந்துவிடுமென அவர் அலறினர். அவரது செய் கையை ஊரார் வெறுத்தனர். அன்று முதல் அவ் வழக்கறிஞர் தூத்துக்குடி மக்களின் பகைவரானர்.

## 8. சிதம்பரனூர் சிறைப்பட்டார்

**கலெக்டரின் கட்டளை**

சிதம்பரனுரின் தீவிரப் போக்கையும் பொது மக்களிடையே அவருக்குள்ள செல்வாக்கையும் கண்டு அதிகாரிகள் அச்சங் கொண்டனர். பிரிட்டிஷ் பேரரசு நிலைத்திருக்கச் சிதம்பரனுரைச் சிறை செய்தே தீரவேண்டுமென்று முடிவு செய்தனர். தூத்துக்குடியிலேயே சிறைப்படுத்துவதென்ருல் மக்கள் ஆத்திரங் கொண்டு கலகம் விளைவிப்பரென்று அஞ்சிய கலெக்டர் விஞ்சு, திருநெல்வேலிக்கு வந்து தம்மைச் சந்திக்க வேண்டுமெனச் சிதம்பரனுருக்கும் சிவாவுக்கும் ஆணை அனுப்பினுர்.

கலெக்டர் விஞ்சின் அழைப்பை ஏற்றுச் சிதம்பரனுர் திருநெல்வேலி செல்லத் தீர்மானித்தார். சிவாவைத் தவிர மற்ற நண்பர்கள் எல்லாரும் அவர் திருநெல்வேலி செல்லக்கூடாதென்று தடுத்தனர். கலெக்டர் விஞ்சு, சிதம்பரனுரைத் திருநெல்வேலியில் சிறைப்படுத்திவிடுவார் என்று எல்லாரும் நம்பினர். சிதம்பரனுரும் இதை அறிவார்; என்ருலும், கலெக்டரின் அழைப்பை அவமதிப்பதால் நேரவிருக்கும் தொல்லை அதிகப்படுமே யொழியக் குறையாதென்

பதை அவர் அறிந்திருந்தார். ஆகவே, தம்மைத் தடுத்த நண்பர்களுக்கெல்லாம் ஆறுதல் கூறித் துணைவர் சிவாவுடன் திருநெல்வேலி சென்று மார்ச்சுத் திங்கள் 12ஆம் நாள் கலெக்டரைக் கண்டார்.

## குற்றச் சாட்டுக்கள்

அச் சந்திப்பில் சிதம்பரனாரின் மீது சீறிவிழுந்து மனம் போனவாறெல்லாம் வன்சொல் வழங்கினார் கலெக்டர் விஞ்சு. விஞ்சின் சீற்றம் கண்டு அஞ்சவில்லை! சிங்கமனைய சிதம்பரனார். அச்சத்தைத் துச்சமெனத் தள்ளிக் கலெக்டருக்குச் சுடச்சுடப் பதில் கொடுத்தார். கவியரசர் பாரதி கவிதை வடிவில் தந்துள்ளபடி, கலெக்டர் விஞ்சுக்கும் கப்பலோட்டிய தமிழருக்கும் நடைபெற்ற வாக்குவாதத்தின் கருத்து வருமாறு:

''அனுமதியின்றிக் கூட்டம் கூட்டி, அரச நிந்தனையாகப் பேசியது ஒரு குற்றம்!''

''ஒன்றுமறியாத பாமர மக்களை 'வந்தேமாதரம்' என்று முழங்குமாறு தூண்டியது பிறிதொரு குற்றம்''

''ஆளும் சாதியாரான ஆங்கிலேயரைப் பழித்ததோடு, அவர்கள் இந்நாட்டைவிட்டு ஓடும் வகையில் கப்பலோட்டியது இன்னொரு குற்றம்!''

''இனியும் இப்படிச் செய்தால் உன்னைச் சுட்டுக் கொன்று, உன் நாட்டு மக்களுக்குப் புத்தி புகட்டுவேன்; தட்டிக் கேட்க ஆள் ஏது? கேட்பாருண்டேல், அவர்களையுப் சிறையில் தள்ளிப் பழி தீர்த்துக்கொள்வேன்.''

இங்ஙனம் விஞ்சு கூறிய குற்றச்சாட்டுக்களைக் கேட்ட சிதம்பரனார்,

"எங்கள் நாட்டில், நாங்கள் கூடிப் பேச அந்நிய ரான உங்கள் அனுமதி வேண்டுமோ? இந்த அநீதி எந்த நாட்டிலேனும் உண்டோ? தெய்வம்தான் ஏற்குமோ?

"வந்தேமாதரம் என்று முழங்குவது குற்றமா? 'வந்தேமாதரம்' என்பதன் பொருள்தானென்ன? எமது தாய்நாட்டை வாழ்த்துகிறோம்—தலையார வணங்குகிறோம் என்பதன்றோ? 'தாய் நாடு வாழ்க!' எனக் கூறுவது குற்றமானால், அந்தக் குற்றத்தை எங்கள் இறுதி மூச்சு இருக்கும்வரை செய்து கொண்டே இருப்போம். தாயகத்தை வாழ்த்துவது ஈனச் செயலன்று.

"எங்கள் நாட்டு வாணிகம் வளர, வளம் பல பெருகக் கப்பல் ஓட்டுகிறோம். அச் செயல் குற்றமா? எங்கள் நாட்டுச் செல்வத்தைப் பிற நாட்டார் சுரண்டிச் செல்வதைப் பார்த்து அழுதுகொண்டு தானிருக்க வேண்டுமா? பட்டினியால் செத்து மடி வதற்குத்தானா நாங்கள் பிறவி எடுத்தோம்? கொடு மையை எதிர்க்கும் ஆண்மை எங்களுக்கும் உண்டு. உலக வாழ்வு கசந்துவிட்டால் உயிர் மட்டும் இனிக்குமோ?

"நாங்கள் முப்பது கோடி மக்களும் ஒன்றுபட்டு உங்களை எதிர்ப்பதென்றே முடிவுக்கு வந்துவிட் டோம். இனியும், அடக்குமுறைகளால் ஆள்வது ஆகாத காரியம். சுட்டுக் கொல்வதல்லாமல் எங்கள்

சதையைத் துண்டம் துண்டமாக வெட்டி எடுத்து வேதனைப்படுத்தினாலும் எங்கள் முடிவு மாறாது. இதயத்தே வளரும் சுதந்தரப்பற்றும் மாயாது. இது திண்ணம்'' என்று பதிலிறுத்தார்.

சிதம்பரனார் பதிலுரைத்த பான்மை கண்டு கலெக்டர் விஞ்சின் ஆத்திரம் விஞ்சியது. திருநெல் வேலி மாவட்டத்தைவிட்டு உடனே வெளியேறச் சம்மதிக்க வேண்டுமென்றும், அரசியல் கிளர்ச்சியில் ஈடுபடுவதில்லையென நன்னடத்தை உறுதி தரவேண்டு மென்றும் சிதம்பரனாரிடம் கலெக்டர் கூறினார். சிதம்பரனார் நன்னடத்தை உறுதி தரவோ, மாவட் டத்தைவிட்டு வெளியேறவோ தம்மால் இயலா தென்றும், வேண்டுமானால் தம்மைக் கைது செய்யலாமென்றும் கூறினார். உடனே சிதம்பரனாரும் சிவாவும் கலெக்டர் முன்னிலையிலேயே கைது செய் யப்பட்டார்கள். சிதம்பரனாரின் இல்லத்தையும் காவல் துறையினர் சோதனை செய்து சில கடிதங் களைக் கைப்பற்றினர்.

**திருநெல்வேலிக் குழப்பம்**

சிதம்பரனார் கைது செய்யப்பட்ட செய்தி திரு நெல்வேலி முழுவதும் காட்டுத் தீப்போல் சில விநாடி களுக்குள் பரவியது. மறுநாள்—மார்ச்சுத் திங்கள் 13ஆம் நாள்—வணிகர்கள் கடையடைத்தனர்; மாணவர்கள் பள்ளிக்கூடங்களுக்குச் செல்லாது ஊர்வலம் வந்தனர். இவ்விதமாக ஊர் முழுவதும் கடையடைப்பும் கொந்தளிப்புமா யிருந்தன. தேச பக்தர்களும், தேசிய நிலையத்தினரும் சிதம்பரனாரைக்

கைது செய்ததைக் கண்டித்துப் பொதுக்கூட்டங்களும், ஊர்வலங்களும் நடத்தினர்.

நகரில் அமைதியைக் காக்கக் காவல் படை தருவிக்கப்பட்டது. தொழிலாளர்கள் சிறு சிறு கூட்டங்களாகச் சேர்ந்து நகரின் பல பாகங்களிலும் ஊர்வலஞ் சென்றனர். வீதியிலுள்ள நகரவை விளக்குகளெல்லாம் பிடுங்கி எறியப்பட்டன. நகரவை மண்ணெண்ணெய்க் கிடங்கு தீக்கிரையாயிற்று. சிலர் நகரவை அலுவலகத்திற்குள் புகுந்து அங்கிருந்த பொருள்களை யெல்லாம் வெளியில் கொண்டுவந்து நெருப்பிலிட்டுக் கொளுத்தினர். சர்ச் மிஷன் கல்லூரிக்குள் புகுந்து ரெவரெண்டு ஷாப்டர் என்னும் தலைமை யாசிரியரை 'வந்தே மாதரம்' என்று சொல்லும்படி வற்புறுத்தினர். அவர் மூன்று முறை 'வந்தே மாதரம்' என்று உரத்து உச்சரித்து உயிர் தப்பி ஓடினார். புரட்சிக்காரர் அக்கல்லூரியிலுள்ள பொருள்களை யெல்லாம் உடைத்து வீதியில் விட்டெறிந்தனர். பின்னர்க் காவல் நிலையத்துக்குள் புகுந்து துப்பாக்கி முதலிய ஆயுதங்களைச் சேதப்படுத்தியதுடன் கட்டடத்தையும் தீ வைத்துக் கொளுத்தினர்.

இச் செய்தி யறிந்து கலெக்டரும் காவல் தலைவரும் விரைந்து வந்து கலகத்தை அடக்க முயன்றனர். உதவிக் கலெக்டர் ஆஷ் தம் கைத்துப்பாக்கியால் கலகக்காரர்களை நோக்கிச் சுட்டார். இதனால் நால்வர் மாண்டதுடன் மூவர் படுகாயம் அடைந்தனர். வலம்புரியம்மன் கோயிலில் பணி செய்த

படுகாயம் அடைந்தனர். வலம்புரியம்மன் கோயி லில் பணி செய்த பதினேழு வயதுச் சிறுவன் வீதியில் வந்து கொண்டிருக்கையில், கையிலிருந்த தேங்காய் கீழே விழவும் அதை எடுக்கக் குனிந் தான். அவ்வளவுதான்! விஞ்சின் கைத்துப்பாக்கியி லிருந்து புறப்பட்ட குண்டு சிறுவன் மண்டையில் பாய அவன் அங்கேயே மாண்டான். ரொட்டிக் கடையில் வேலை செய்த பதினெட்டு வயது இளைஞன் ஒருவன் கடையைப் பூட்டிக்கொண்டு கையில் சாவியுடன் வீடு செல்லுகையில் சுடப்பட்டு மாண் டான்.

கலெக்டரின் கைத் துப்பாக்கிக்கு இரையான நால்வரில் இருவர் இந்துக்கள்; ஒருவர் முஸ்லீம்; மற்றொருவர் ஆதித் தமிழர். இறந்தவர்களின் பிணங்களை அப்புறப் படுத்தவோ, காயமடைந்த வர்களுக்கு மருத்துவம் செய்விக்கவோ அதிகாரி கள் அக்கறை கொள்ளாது வீதியிலேயே விட்டுச் சென்றனர்; மாலைவரை பிணங்கள் தெருவிலேயே கிடந்த பின்னர், அவற்றின் உறவினர்கள் வந்து எடுத்துச் சென்றனர்.

கலகக்காரர்கள் கற்களை எறிந்ததால் இன்ஸ் பெக்டருக்கு மண்டை உடைந்தது; கலெக்டருக்கும் சிறிய காயம் ஏற்பட்டது. குழப்பம் மூன்று நாட்கள்வரை தொடர்ச்சியாக நடைபெற்றது. அதே சமயத்தில் தூத்துக்குடியிலும் தச்சநல்லூரி லும் கடையடைப்பும் குழப்பமும் நிகழ்ந்தன. தச்சநல்லூரில் ஹராட்சி நிலையம் கொளுத்தப்

பட்டது. சாதாரணக் காவலரால் அமைதி நிலவச் செய்வது இயலாது என்று உணர்ந்து, சென்னை அரசு தண்டக் காவல் படையைத் திருநெல்வேலி தூத்துக்குடி, தச்சநல்லூர் ஆகிய இடங்களுக்கு அனுப்பி வைத்து, அப்படையினருக்காகுஞ் செல வைப் பொதுமக்களிடமே வசூல் செய்யப்படுமென அறிவித்தது. திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள வெள்ளையர் வீடுகளிலெல்லாம் இராணுவத் தினர் காவல் புரிந்தனர். குருசாமி ஐயர் என்பவரும் மற்றும் இரு பெருமக்களும் சென்னைக்கு வந்து தண்டக் காவலரை அகற்ற வேண்டுமென கவர் னரை வேண்டினர். ஊரிலுள்ள பெரிய மனிதர்கள் குழப்பத்தை அடக்கக் காவலருக்குத் தக்க சமயத் தில் உதவி புரியாததால், தண்டக் காவலரை அனுப்ப நேரிட்டதென்றும், மீண்டும் அமைதி நிலவும்வரை திருப்பி அழைக்க முடியாதென்றும் கவர்னர் கூறினர். அப்பெருமக்கள் ஏமாற்றத்துடன் ஊர் திரும்பினர்.

இந்தக் குழப்பத்தில் சம்பந்தப்பட்டதாகக் கூறித் தச்சநல்லூர், திருநெல்வேலி, தூத்துக்குடி முதலிய இடங்களில் எண்பது பேர்களைக் காவல் படையினர் கைது செய்து வழக்குத் தொடுத்ததில், ஒருவர் விடுதலையானர்; மற்றவர்கள் பலவிதமான தண்டனைகள் அடைந்தனர்.

**கொடுந் தண்டனை**

1908ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 25, 26 ஆகிய நாட்களிலும் மார்ச்சு 1, 3 ஆகிய நாட்

களிலும் அரச நிந்தனையாகப் பேசியதாக 123-ஏ பிரிவுப்படியும், சுப்பிரமணிய சிவாவுக்கு இடமும் உணவும் அளித்து உதவியதாக 153-ஏ பிரிவுப் படியும், சிதம்பரம் பிள்ளை மீது காவலர் வழக்குத் தொடுத்தனர். இவ்வழக்கு, திருநெல்வேலி மாவட்டத் துணை நீதிபதி ஈ. எச். வாலெஸ் முன்னர் மார்ச்சு மாதம் 26 ஆம் நாள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. சிதம்பரனாரின் சொற்பொழிவுகளில் சட்டத்துக்குப் புறம்பானவையென அரசியலார் தரப்பில் கூறப்பட்ட பகுதிகள் பின்வருமாறு :

''மக்கள் ஒன்று சேர்ந்தால் வெள்ளையரை விரட்டி விடலாம். நாம் எல்லாரும் ஒன்று சேர்ந்து விட்டோம் எனத் தெரிந்தால் போதும், அவர்களே போய்விடுவார்கள்.

''இந்தியாவில் 50 ஆயிரம் வெள்ளையர்கள் உள்ளனர். கட்டாயத்தில் அவர்களை வெளியேற்றுவது எளிதே. ஆனால், இந்தியர்கள் வன்முறைச் செயலில் ஈடுபடக் கூடாது என்றாலும், வெள்ளையருக்கு நாம் அஞ்ச வேண்டியதில்லை.

''இந்தியர்கள் தாங்கள் தீர்மானித்தபடி அந்நிய நாட்டுத் துணி, சர்க்கரை, எனாமல் பாத்திரம் முதலிய பொருள்களை வாங்காமல் இருந்தால் ஆங்கிலேயர் தாங்களாகவே இந்தியாவை விட்டுப் போய்விடுவார்கள்.

''இன்னும் பிரிட்டிஷ் கப்பல் கம்பெனிக்குச் சிலர் உதவி செய்கிறார்கள். இனி நான் அவர்களைக் கேட்கப் போவதில்லை. சிலர் என்னிடம் வந்து அப்படிப்பட்டவர்களுக்குக் கெடுதல் செய்வதாகக் கூறினார்கள். நான்

அவர்களைத் தடுத்தேன். தங்களுக்கு என்ன நேர்ந்தாலும் நேரட்டும் என்று அவர்கள் சொன்னார்கள்.

"சிகைத் தொழிலாளர், அந்நிய ஆடை தரித்தவர்களுக்குத் தாங்கள் இனி வேலை செய்வதில்லையெனச் சத்தியஞ்செய்து கொடுத்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒருவர் வந்தால், கத்தியால் அவர் தலையைத் தொட்டு அனுப்பி விடுவார்கள்.

"சுய ஆட்சியைத் தவிர அந்நிய ஆட்சியை விரும்புகிறவர்களுண்டா; வருவனவெல்லாம் வரட்டும்; நாம் எதற்கும் அஞ்ச வேண்டியதில்லை."

சிதம்பரம் பிள்ளைக்காகத் தஞ்சை வழக்கறிஞர் **திரு. என். கே. இராமசாமி** நீதிமன்றத்தில் தோன்றி வாதாடினார். வழக்கு நடந்துகொண்டிருக்கையில் நீதிபதி, தம் வழக்கறிஞரிடம் நேர்மையாக நடந்துகொள்ள வில்லையெனக் கூறிச் சிதம்பரனார் எதிர் வழக்காட மறுத்துவிட்டார். தொடக்க விசாரணைக்குப் பிறகு நீதிபதி, வழக்கை மாவட்ட நீதிமன்றத்துக்கு மாற்றினார். நீதிபதி **பின்ஹே** முன்னர் வழக்கு விசாரணை ஏறக்குறைய இரண்டு திங்கள் நடைபெற்றது. சிதம்பரனாருக்காகத் திருவாளர்கள் சடகோபாச்சாரியார், நரசிம்மாச்சாரியார், வேங்கடாச்சாரியார் ஆகியோரும், சர்க்கார் தரப்பில் பாரிஸ்டர் பவல், ரிச்மண்ட் ஆகியோரும் தோன்றி வாதாடினர்.

சிதம்பரம் பிள்ளை தரப்பில், **மகாகவி சி. சுப்பிரமணிய பாரதியார்** உள்படச் சான்றோர் பலர் சாட்சி கூறினர். சிதம்பரனாருக்கு எதிராக அரசியலார்

சார்பில் சாட்சி கூறியவர்களில் பெரும்பாலோர் காவல் படையினரும் பிரிட்டிஷ் ஸ்டீம் நாவி கேஷன் கம்பெனியைச் சேர்ந்த வெள்ளையர்களு மாவர். இந்த வழக்கு விசாரணை விவரங்களைத் தமிழ் நாட்டுப் பத்திரிகைகளே யன்றி, இந்தியாவி லுள்ள எல்லாப் பத்திரிகைகளும் விரிவாக வெளி யிட்டன. கல்கத்தாவிலிருந்து வெளிவந்த **'யுகாந் தாம்'** என்ற வங்காளிப் பத்திரிகை, சிறப்பு மலரில் நீதிமன்ற நடவடிக்கைகளை வெளியிட்டது.

ஜூலைத் திங்கள் 7ஆம் நாள் நீதிபதி பின்ஹே தீர்ப்புக் கூறினார். சிதம்பரனார் குற்றவாளி யெனத் தீர்மானித்து அரச நிந்தனைக் குற்றத் திற்காக இருபது ஆண்டு ஆயுள் தண்டனையும், சிவாவுக்கு உடந்தையாக இருந்த குற்றத்திற்காக இருபது ஆண்டு ஆயுள் தண்டனையும் விதித்து, இரண்டு தண்டனைகளையும் ஒன்றன்பின் ஒன்றாக நாற்பது ஆண்டுகள் அனுபவிக்க வேண்டுமெனக் கூறினார். அரச நிந்தனைக் குற்றத்திற்காகச் சிவா வுக்குப் பத்தாண்டுகள் ஆயுள் தண்டனை விதிக்கப் பட்டது.

சட்ட ஞானம் பெற்ற வழக்கறிஞரை, அரசியல் தலைவரை, கப்பலோட்டிய கர்ம வீரரை, ஏழை கள்பால் இரக்கங்கொண்ட ஏந்தலை, செந்தமிழ் வல்ல சிதம்பரனாரைக் கொலையும், கொள்ளையும் புரிந்த கொடியவர்களான சமூக விரோதிகளோடு நாற்பதாண்டுகள் மண்ணுலக நரகமான அந்த மான் தீவில் வாழுமாறு நீதிபதி பின்ஹே தீர்ப் பளித்தார். முப்பத்தைந்தே வயதுடைய வாலிபப்

பருவத்தினரான பிள்ளையவர்கள், தாய் தந்தை யரையும், இளம் மனைவியையும், இரு பச்சிளம் குழந்தைகளையும் பிரிய நேரிட்டது.

சிதம்பரனாருக்கு விதிக்கப்பட்ட கொடுந் தண்டனை கேட்டு அவர் தம் உடன் பிறந்தாரில் ஒருவ ரான மீனாட்சி சுந்தரம் என்பார் சித்தந்திரிந்து பித்த ரானார்! அவர், வாழ்நாள் முழுவதும் பித்தராகவே இருந்து 1943இல் காலமானார்.

வீரத் தமிழரான சிதம்பரனார் தமக்கு விதிக்கப் பட்ட கொடுந் தண்டனையால் மனங் கலங்கவில்லை. அவரை நீதிமன்றத்திலிருந்து சிறைக்குக் கொண்டு செல்லுகையில் தம் எதிரில் முகவாட்டத்துடன் நின்றிருந்த தூத்துக்குடி மாசிலாமணிப் பிள்ளையை நோக்கி, "தம்பி, பயப்படாதே! இருக்கிறது உயர் நீதிமன்றம். அங்குப் பார்த்துக் கொள்ளுகிறேன்" எனக் கூறிச் சிறைச்சாலையாம் தவச்சாலையை நண்ணினார் அஞ்சா நெஞ்சுடைய அண்ணல் சிதம்பரனார்.

## 9. நாட்டு மக்கள் கொந்தளிப்பு

தென்னிந்தியாவில் சிதம்பரனுர் தண்டனை அடைந்த அதே வாரத்தில் வட இந்தியாவில் லோகமான்ய திலகர், தமது 'கேசரி' என்னும் பத்திரிகையில் அரசாங்க விரோதமான கட்டுரையொன்று எழுதியதற்காக ஆறு ஆண்டு சிறைத் தண்டனையும், பத்தாயிரம் ரூபாய் அபராதமும் விதிக்கப் பட்டார். குருவும், சீடரும் ஒரே சமயத்தில் சிறை புகுந்தனர். என்றாலும் குருவைவிடச் சீடரையே அதிகமாகப் பழி தீர்த்துக் கொண்டது ஏகாதிபத்தியம்.

தமிழ் நாட்டின் தனிப்பெருந் தலைவரான சிதம்பரம் பிள்ளைக்கு விதிக்கப்பட்ட கொடுந் தண்டனையால் தமிழ்நாட்டில் மட்டுமன்றி, இந்தியா வெங்கணும் அதிர்ச்சி உண்டாயிற்று. பத்திரிகைகள் நீதிபதி பின்ஹேயின் தீர்ப்பைக் கடுமையாகத் தாக்கித் தலையங்கங்கள் எழுதின.

சிதம்பரம் பிள்ளைக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட செய்தியைக் கேட்டு, அப்போது இந்திய அமைச்சராக இருந்த லார்டு மார்லி என்பவர் மனம் பதைத்தார். அவர், அரசப் பிரதிநிதி லார்டு மிண்டோவுக்குப் பின்வருமாறு எழுதினுர் :

"திருநெல்வேலி, தூத்துக்குடி மனிதர் (சுப்பிர மணிய சிவா, சிதம்பரம் பிள்ளை) இருவருக்கும் விதித் துள்ள தண்டனையைச் சிறிதும் ஆதரிக்க இயலாது. அடுத்த அஞ்சலில் அத்தீர்ப்பு என் பார்வைக்கு வரும். அத் தண்டனைகள் நிலைக்கா. கொடுமையான இக் காரி யங்களை எக் காரணம் கொண்டும் நான் ஆதரிக்க முடியாது. இந்தப் பிழைகளையும், முட்டாள்தனங்களை யும் நீங்கள் உடனே கவனிக்க வேண்டும். ஒழுங்கை நாம் நிலைநாட்ட வேண்டியதுதான். ஆனால், கொடுமை மிதமிஞ்சிவிடின், ஒழுங்கென்பது நிலைக்குமோ? மற்றும் வெடிகுண்டுச்கு அதுவே வழியாகும்."

லார்டு மார்லியின் கண்டனத்திற்குள்ளான நீதிபதி பின்ஹோ, வேறு மாநிலத்திற்கு மாற்றப் பட்டார். ஆத்திரங் கொண்ட மக்கள் மனத்தில் ஆறுதல் ஏற்படுத்தவே இந்த மாறுதல் செய்ததாக அரசாங்க வட்டாரத்தில் கூறப்பட்டது.

**தண்டனைக் குறைப்பு**

சிதம்பரம் பிள்ளை, தமக்கு மாவட்ட நீதிபதி விதித்த தண்டனையை நீக்கச் செய்ய வேண்டு மெனக் கோரிச் சென்னை உயர்நீதி மன்றத்துக்கு விண்ணப்பம் செய்தார். 1908ஆம் ஆண்டு அக்டோ பர்த் திங்கள் 13ஆம் நாள் தலைமை நீதிபதி ஆர்னல் வைட், நீதிபதி மன்ரோ ஆகியவர்கள் முன்னர் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அரசாங்கத் தரப்பில், பாரிஸ்டர் ரிச்மண்ட் தோன் றிப் பிள்ளையவர்களுக்கு மாவட்ட நீதிபதி விதித்த தண்டனையை மாற்றக் கூடாதென்று வாதாடினர். நவம்பர்த் திங்கள் 4ஆம் நாள் நீதிபதிகள் தீர்ப்புக் கூறினர். "ஆங்கிலேயர்கள் ஆளும் வகுப்பாராயிருப்

பதை ஒழித்துவிட வேண்டுமென்பதே பிள்ளையின் நோக்கம். அவர் அந்நியப் பொருள் புறக்கணிப்பை வற்புறுத்தி பேசியது சுதேசிக் கைத்தொழில்களின் வளர்ச்சிக்காக அல்லாமல் **ஆங்கிலேயரை வெளி யேற்ற வேண்டுமென்பதற்காகவே** யாகும். ஆகவே, சிதம்பரனார் குற்றவாளியென மாவட்ட நீதிபதி பின்ஹே தீர்மானித்ததை நாங்களும் ஒப்புக் கொள் கிறோம். எனினும், உடந்தைக் குற்றத்திற்கு விதிக்கப் பட்ட இருபது ஆண்டுத் தண்டனையை, ஆறு ஆண்டாகவும், அரச நிந்தனைக் குற்றத்திற்கு விதிக்கப்பட்ட இருபது ஆண்டுத் தண்டனையை நான்கு ஆண்டாகவும் குறைக்கிறோம். இவ்விரண்டு தண்டனைகளையும் ஒன்றன்பின் ஒன்றாக அனுபவிப் பதற்குப் பதிலாக ஒரே காலத்தில் அனுபவித்தாற் போதும்" என அந்தத் தீர்ப்பில் குறிப்பிட்டிருந் தனர்.

எப்படியேனும், சிதம்பரனாரை விடுவிக்க வேண்டுமென்று அவாக்கொண்ட அவர் தம் நண்பர் கள், உயர்நீதி மன்றத் தீர்ப்பில் அமைதி கொள்ளா மல் பெருமுயற்சி செய்து பிரிவி கவுன்சிலுக்கு விண்ணப்பித்தனர். அதனால், அந்தமான் சிறை வாசத் தண்டனை ஆறு ஆண்டுக் கடுங்காவல் தண்ட னையாகக் குறைக்கப்பட்டது.

## 10. செக்கடியில் சிதம்பரனார் !

**சிறைக் கொடுமைகள்**

சிதம்பரனார், தமது தண்டனைக் காலத்தைக் கோவை, கண்ணனூர்ச் சிறைகளிற் கழித்தார். அந் நாளில் சிறைகள் தேசபக்தர்களால் நிரப்பப்பட வில்லை; ஆகவே, பிள்ளையவர்கள் தன்னந்தனி யராய்த் தவங்கிடந்தார். இன்றுள்ளதுபோல் வகுப்புப் பிரிவுகளும், பிற வசதிகளும் அன்றில்லை. அரசியல் கைதிகளுக்கெனத் தனி உரிமைகள் எதுவும் வழங்கப்படவுமில்லை. சிதம்பரனார் சிறையிற் பட்ட துன்பத்துக்கு அளவே இல்லை. கல்நெஞ்சம் படைத்த சிறையதிகாரிகள் கொலை, களவு முதலிய கொடுஞ் செயல்களைப் புரிந்து தண்டனை பெற்ற கொடியவர்களைவிட அவரை இழிவாக நடத் தினர். அறுசுவை யுண்டு அரசர்போல் வாழ்ந்த சிதம்பரனார், சிறையில் கேழ்வரகுக் கூழுண்டார்.

சிறைக் கொடுமைகளால் சிதம்பரனாரின் உடல் நலம் குறையலாயிற்று. சிறை புகுந்ததும் அவரது உடல் நிறை பெரிதும் குறைந்துவிட்டது. உயிருக்கே கேடு நேரிடலாம் என்று சிறை மருத்துவர்

எச்சரித்த பின்னரே அதிகாரிகள் அவருக்குக் கேழ்வரகு உணவை நிறுத்தி அரிசி உணவு தந்தனர்.

**செக்கிழுத்த திருமேனி**

வெற்றித் தண்டையணியும் கால்களில் கழற்றுப் பெருவிலங்கு; பட்டுடுத்த பொன்மேனியில் பருத்திச் சட்டை; வீரத் திருமார்பில் விடுதலை நாளைக் குறிக்கும் கட்டைத் தாலி; மயிரிழந்த மொட்டைத் தலை. இதுதான் சிறையிலடைபட்ட சிதம்பரனாரின் தோற்றம்.

சிதம்பரனார் எளிய உணவருந்தி, உடல் வலிமை குன்றி, உயிருக்கு ஊசலாடும் நிலைமையிலிருந்த போதும், கடுமையான வேலைகளைச் செய்யும்படி கட்டளையிட்டனர் சிறையதிகாரிகள்.

**"செக்கு மாடுகள்போல் உழைத்து ஏங்குகின்றனர்**
**அந்தக் கரும்புத் தோட்டத்திலே"**

என்று தோட்டத் தொழிலாளர் துயர் குறித்துப் பாரதியார் பாடினார். மாடுபோல் அல்ல; மாடாகவே செக்கு இழுத்தார் சீரியர் சிதம்பரனார். ஒருநாள் கடும் வெயிலிற் செக்கிழுக்கையில் மூர்ச்சித்து விழுந்தாராம். கல்வி, கேள்வி, அறிவு, ஆற்றல் களில் மேம்பட்ட சிதம்பரனார். செக்கிழுக்க, அவர் செய்த குற்றந்தான் என்ன? தொண்டு செய்யும் அடிமை, சுதந்திர நினைவு கொண்டதே குற்றமாகக் கருதப்பட்டது. செக்கிழுக்க நேர்ந்ததைப் பற்றி வீர சிதம்பரனார் விம்மி அழவில்லை. பின் எப்படி அத் துன்பத்தைப் பொறுத்திருப்பார்? எண்ணெ

யாடும் செக்கைச் சுற்றுவதாக அவர் எண்ணியிருக்க மாட்டார். எண்ணியிருப்பின் அவரது கருணை உள்ளம் கசிந்திருக்கும்; தமிழ்த் திருமேனி நொந் திருக்கும். அவர் செக்கைச் சுற்றும்போதெல்லாம் சுதந்தர அன்னையின் கோயிலைச் சுற்றுவதாகவே கற்பனை செய்து கொண்டிருப்பார் கற்பனை ஆற்றல் படைத்த அக் கவிவாணர்.

**வளர்த்த கடா....**

சிறைக்குள்ளே அதிகாரிகள் இழைக்கும் இன்னல்கள் ஒருபுறமிருக்கச் சிறைக்கு வெளியேயிருந்து சுதேசிக் கப்பல் கம்பெனிப் பங்குதாரர்களும் சிதம்பரனாருக்குத் தொல்லை விளைவித்தனர். வ. உ. சி. சிறை புகுந்ததும் அவரால் நடத்தப்பட்டு வந்த கப்பல் கம்பெனி நசித்துவிட்டது. சிதம்பரனாரைப் பிரிந்த பிறகு சுதேசிக் கம்பெனி நிருவாகிகள் பிரிட்டிஷ் கம்பெனியின் போட்டியைச் சமாளிக்கச் சக்தியற்றுவிட்டனர். மற்றும், ஆற்றல் மிக்க சிதம்பரனாருக்கே இரண்டு ஆயுள் தண்டனை தந்த அரசு, தங்களையும் சிறைக்குள் தள்ளுமோ என்ற அச்சத்தால், கம்பெனியைக் கலைத்ததோடு சிதம்பரனார் தம் இரு கண்களெனக் கருதி வந்த கப்பல்கள் இரண்டையும் விற்றுவிட்டனர். மற்றொரு வேதனை தரும் செய்தி என்னவென்றால், எந்தக் கப்பலை வாங்க வ. உ. சி. வடநாடு சென்று அரும்பாடு பட்டுப் பணந்திரட்டினாரோ அந்தக் 'காலியா' என்ற கப்பலைப் பிரிட்டிஷ் கம்பெனிக்கே விற்று விட்டதாகும்.

சிறையில் வாடும் சிதம்பரனார் இந்தச் செய்தியைக் கேட்டுப் பல நாட்கள் ஊண், உறக்கமின்றி உள்ளம் வருந்தினார். கம்பெனியைக் கலைத்துவிட்டதைக்கூட அவரால் தாங்கிக் கொள்ள முடிந்தது. ஆனால், எந்தப் பிரிட்டிஷ் கம்பெனியை ஒழிப்பதற்காகப் பாடுபட்டு இரு ஆயுள் தண்டனை ஏற்றாரோ, அதே கம்பெனியாரிடம் 'காலியா' என்ற கப்பலை விற்ற இழிவான செயலைத்தான் அவரால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. சோதனைக் காலம் வரும் போது நம் நாட்டு மக்கள் எப்படிக் கோழைகளாகி விடுகிறார்கள் என்பதை எண்ணி எண்ணி ஏங்கினார் சிதம்பரனார்.

சுதேசிக் கப்பல் கம்பெனி நிருவாகக் குழுவினர் கம்பெனியைக் கலைத்து, கப்பல்களை விற்றதோடு நிற்கவில்லை. கம்பெனியின் முறிவுக்குச் சிதம்பரனாரின் அரசியல் நடவடிக்கைகளே காரணம் என்று அவர்மீது பழிகூறித் தாங்கள் இழந்துவிட்ட பொருள்களை ஈடுசெய்ய வேண்டுமென்று சிதம்பரனாரின்மீது சட்டப்படி நடவடிக்கை மேற்கொள்ளவும் முயன்றனர். இதைக்கண்டு சிதம்பரனார் சிந்தை நொந்தார். சுதேசிக் கம்பெனியின் சட்ட ஆய்வாளரான திரு. சி. விசயராகவாச்சாரியாருக்குச் சிறையிலிருந்த வண்ணம் வ. உ. சி. பின்வருமாறு கடிதம் ஒன்று எழுதினார் :

''என்னால் தொடங்கப்பட்ட சுதேசிக் கப்பல் கம்பெனிக்குப் பொருள் உதவிய எல்லாருக்கும் எனது வணக்கத்தைத் தெரிவியுங்கள். கம்பெனி முறிந்ததனால் ஏற்பட்ட இழப்பைப் பங்குதாரர்கள் ஏற்பதே நியாயம்.

அவர்கள் மறுத்தால் அக் கடன்களை நானே கொடுத்து விடுகிறேன். ஆனால், அருள்கூர்ந்து நான் சிறை மீளும் வரை அவர்களைப் பொறுத்திருக்கச் சொல்லுங்கள்.''

### சிறையதிகாரிகளுடன் போராட்டம்

சிதம்பரனார், கோவைச் சிறையில் தண்டனை அனுபவித்து வந்தபோது, நாடோறும் சிறை அதிகாரிகளுடன் போராட வேண்டியிருந்தது. ஒரு நாள் தோட்டி வேலை செய்யுமாறு வ. உ. சி. யைக் கட்டாயப் படுத்தினர் சிறையதிகாரிகள். தமதுயிர் போயினும் சரி, தோட்டி வேலை செய்ய முடியாதெனக் கண்டிப்பாகக் கூறி விட்டார் வ. உ. சி. அவரது மன உறுதியை அறிந்த அதிகாரிகள் மேலும் வற்புறுத்தாமல் விட்டு விட்டனர்.

மற்றொரு நாள் சிறையதிகாரி சிறையைப் பார்வையிட்டுக் கொண்டே சிதம்பரனார் இருக்கு மிடம் வந்தார். அப்போது என்ன காரணத்தாலோ சிதம்பரனார் அவரைப் பார்த்துச் சிரித்தார். ''ஏன் சிரிக்கிறாய்?'' என்று அவர் கேட்க, ''சிரிக்காமல் அழவா சொல்கிறாய்?'' என்று அலட்சியமாகப் பதிலளித்தார் வ. உ. சி. இதனால் சீற்றங்கொண்ட சிறையதிகாரி, சிதம்பரனார் தம்மை அவமதித்த தாகச் சிறைக் கண்காணிப்பாளரிடம் கூறினார். சிறைக் கண்காணிப்பாளர் இரு ஆயுள் தண்டனை பெற்ற சிதம்பரனாருக்குச் சிறையதிகாரியைப் பார்த்துச் சிரித்த குற்றத்திற்காக மேலும் இரண்டு வாரத் தண்டனை விதித்தார்.

**கைதிகளின் குமுறல்**

திருநெல்வேலிக் குழப்பத்தில் தண்டனை யடைந்த கலகக் கைதிகள் பலரும் அப்போது கோவைச் சிறையில் இருந்தனர். சிரித்ததற்காக வ. உ. சி. தண்டனை பெற்றதும் வேறொரு பகுதியிலிருந்த கைதிகளுக்குத் தெரிந்தது. தங்கள் வீரத் தலைவரை நாடோறும் சிறையதிகாரிகள் கொடுமைப் படுத்தி வருவதைக் கண்டு ஏற்கெனவே குமுறிக் கொண்டிருந்த அவர்களுக்கு, இந்த நிகழ்ச்சி எரிகிற தீயில் எண்ணெய் வார்த்தது போலாயிற்று. ஏனைய குற்றவியல் கைதிகளும் வ. உ. சி.க்கு உற்ற துன்பங்களைக் கேட்டுச் சீற்றம் கொண்டனர். எல்லாருமாகச் சேர்ந்து சிறையதிகாரியைக் கொன்றுவிடத் தீர்மானித்தனர். ஒரு நாள் பிற்பகல் திடீரென்று சிறையதிகாரியின் அலுவலகம் தாக்கப்பட்டது. அன்று ஞாயிற்றுக் கிழமை. ஆதலால், சிறைக் காவலர்களில் பெரும்பாலோர் விடுமுறையிலிருந்தனர். இந்தச் சமயத்தைப் பயன்படுத்திக் கொண்டு சிறைக் காவலர் மீது ஆத்திரம் கொண்ட கைதிகள், முன்னேற்பாட்டின்படி கலகம் செய்தனர். இரண்டு மணி நேரம் சிறை அமர்க்களமாயிற்று. அபாய அறிவிப்பு மணி இடைவிடாது அலறியது. கைதிகள் சிறையின் தலைவாயிற் கதவுக்குப் போடப்பட்டிருந்த பூட்டை உடைத்துக் கொண்டு வெளியேறும் சமயத்தில், தனிக் காவல் படையினர் எண்ணற்றோர் வந்து சிறைச்சாலையை முற்றுகையிட்டுக் கைதிகள் வெளியேறுதவாறு தடுத்தனர். அப்போது கைதிகளுக்கும்,

காவலருக்கும் கடும் போர் நடந்தது. காவலர் கூட்டத்தில் ஒரு கைதி மாண்டார். பின்னர் நிலைமை கட்டுக்கடங்கி விட்டது. ஆனால், அரசியல் கைதிகள் வகுத்திருந்த திட்டப்படி சிறைக் காவலர் தாக்கப்பட்டுப் படுகாயமடைந்தார். அவர் உடல் மீண்டும் நல்ல நிலை எய்தப் பல திங்கள் ஆயின.

**சிறை மாற்றம்**

இந்தக் கலகத்திற்குக் காரணமாயிருந்ததாக கைதிகள் பலர்மீது வழக்குத் தொடுத்தனர் சிறையதிகாரிகள். இந்த வழக்கில் எதிரிகள் எல்லாரும், ஒன்று முதல் இரண்டு ஆண்டுவரை கடுங்காவல் தண்டனை பெற்றனர். பின்னர் அத் தண்டனை குறைக்கப்பட்டது. சிதம்பரனர் எதிரிகள் தரப்பில் சாட்சி கூறினர். சிறைக்காவலரின் கொடுமைகளைத் தாங்கிக் கொள்ள முடியாததாலேயே கைதிகள் கலகம் செய்தனரென்றும் இந்தக் கலகத்துக்கு அரசியல் காரணம் கற்பிப்பது சிறை அதிகாரிகளின் சூழ்ச்சி யென்றும் கூறினர். இந்த நிகழ்ச்சிக்குப் பின்னர்ச் சிதம்பரனர் கண்ணனூர்ச் சிறைக்கு மாற்றப்பட்டார்.

## 11. மக்கள் கிளர்ச்சி

**கவிஞன் சிந்திய கண்ணீர்**

சிதம்பரனாரும் கவியரசர் பாரதியாரும் நெருங்கிய நண்பர்கள்; திலகரைப் பின்பற்றுபவர்கள்; இன்பத்திலும் துன்பத்திலும் இணைபிரியாதவர்கள். ஆகவே சிதம்பரனார் சிறையில் படுந் துன்பத்தை அறிந்து, பாரதியார் நெஞ்சங் குமுறினார். அந்த மேலோன் வெஞ்சிறையில் வீழ்ந்து கிடப்பதைக் கேட்டு அவர் நெஞ்சு பொறுக்கவில்லை. "மெய்யறம்" போன்ற நீதி நூல்கள் எழுதிய சிதம்பரனாரின் கைகள் சிறையில் செக்கு இழுப்பதைக் கேட்டுக் கண்ணீர்விட்டார் பாரதியார்.

தம் அருமைத் தோழர் சிதம்பரனாருக்குற்ற துன்பம், மனித ஆற்றலால் நீக்க முடியாதென்று எண்ணினார் போலும்! ஆகவே அவர் எல்லாம் வல்ல இறைவனிடம் முறையிடலானார்.

மேலோர்கள் வெஞ்சிறையில் வீழ்ந்து கிடப்பதுவும்
நூலோர்கள் செக்கடியில் நோவதுவுங் காண்கிலையோ!
மாதரையும் மக்களையும் வன்கண்மை யாற்பிரிந்து
காதல் இளைஞர் கருத்தழிதல் காணாயோ!

என்ற பாரதியார் பாடலிலுள்ள வரிகள் நமக்கு எதை நினைவூட்டுகின்றன? முப்பத்தைந்து வ...

தில்—காதற் பருவத்தில்—மனைவியைத் துறந்து, மக்களைப் பிரிந்து சிறையில் வாடிய சிதம்பரனாரின் துன்பத்தையே அன்றோ?

சிதம்பரனாரை, 'மேலோன்', 'நூலோன்', 'காதல் இளைஞன்' என்றெல்லாம் கூறிக் கடவுளுக்கு அறிமுகப்படுத்துகிறார் பாரதியார். அந்த வீரன், "சிறையில் வீழ்ந்து கிடப்பதை, செக்கடியில் நோவதை, மனையாளைத் துறந்ததை, மக்களைப் பிரிந்ததை, கண்ணனூர்ச் சிறையில் கருத்தழிந்து வாடுவதை இறைவா, நீ காணாயோ!" என்று கதறுகின்றார்.

'மேலோர்கள்', 'நூலோர்கள்' என்று பாரதியார் பன்மையில் குறிப்பிட்டாலும், அவர் சிதம்பரனாரை நினைவில் கொண்டே கூறியிருப்பார் என்பதில் ஐயமில்லை. ஏனெனில் 'மேலோர்', 'நூலோர்' என்ற உயர்ந்த நிலையில் வைத்துப் பேசத்தக்கவர்கள் அந்நாளில் சிதம்பரனாரைத் தவிர வேறொருவரும் சிறை புகுந்ததில்லை; செக்கு இழுத்ததில்லை.

"தண்ணீர் விட்டோ வளர்த்தோம் சர்வேசா!"

என்ற முதலடி கொண்டு அவர் பாடியுள்ள அப்பாடல், நமது கண்ணீரைக் காணிக்கையாகக் கொள்ளும் தன்மை வாய்ந்தது. அப்பாடலில்,

"கண்ணீரால் காத்த பயிர் கருகத் திருவுளமோ?"

என்றாரே, அந்தப் பயிர்தான் வ. உ. சி.

"ஓராயிரம் வருடம் ஓய்ந்து கிடந்த பின்னர்
வாராது போலவந்த மாமணியைத் தோற்போமோ"

என்றாரே, அந்த மாமணிதான் வ. உ. சி.

''எண்ணமெலாம் நெய்யாக எம்முயிரின் உள்வளர்த்த
வண்ண விளக்கி∴து மடியத் திருவுளமோ?''

என்றுரே, அந்த வண்ணவிளக்குத்தான் வ. உ. சி.

**வன்முறைப் புரட்சி**

தமிழ் நாட்டில் தேசியப் புரட்சியின் வித்தை விதைத்த சிதம்பரனுரை அரசு சிறைக்குள் தள்ளியது. எனினும், புரட்சி அடங்கிவிடவில்லை. வெளிப்படையாக அறவழியில் நடைபெற்ற சுதேசிக் கிளர்ச்சியை அரசு அடக்குமுறையால் நசுக்கவே, அறப் புரட்சி ஆயுதப் புரட்சியாக மாறியது.

சிதம்பரம் பிள்ளைக்கு விதிக்கப்பட்ட கொடுந் தண்டனை, திருநெல்வேலிக் குழப்பத்தில் துணைக் கலெக்டர் நடத்திய துப்பாக்கிச் சூடு ஆகியவற்றுல் ஆத்திரம் கொண்ட இளைஞர்கள் இனி அறப் புரட்சி பயன் தாராது என எண்ணி, ஆயுதப் புரட்சியில் ஈடுபடத் தீர்மானித்தனர். அதன் மூலம் நாடு விடுதலை அடையுமெனத் தவருன நம்பிக்கை கொள்ளலாயினர். அந்த இளைஞர்களின் கொள்கை பிள்ளையவர்களுக்கு உடன்பாடன்று.

சிதம்பரனுர், அகிம்சையை மதமாகக் கொண்டவரல்லர். எனினும், ஆயுத பலங்கொண்டு ஆட்சி முறையைக் கவிழ்க்க வேண்டுமென்று அவர் கூறியதில்லை. அம் முறை இந்தியாவின் அப்போதைய நிலைமைக்குப் பொருந்தாதது என்பதே அவரது கருத்து.

தமிழகத்தில் சிதம்பரனார் தலைமையின் கீழ் சுதேசிக் கிளர்ச்சியும், அறவழிப்பட்ட அரசியல் புரட்சியும் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போதே வேறு சிலர் ஆயுதப் புரட்சிக்கு ஆயத்தமாகி வந்தனர். சுதேசிக் கிளர்ச்சியின்மீது அரசியலார் செலுத்தும் ஒவ்வோர் அடக்கு முறையும், ஆயுதப் புரட்சியாளர்களின் ஆவேசத்தை அதிகப்படுத்தி வந்தது.

**வட நாட்டில் கிளர்ச்சி**

வடக்கே மராட்டிய மாநிலத்திலும், வங்க மாநிலத்திலும் ஆயுதப் புரட்சியாளர் 1906ஆம் ஆண்டிலேயே செயலாற்றத் தொடங்கிவிட்டனர். 1908ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 30ஆம் நாள் பீகார் மாநிலத்தைச் சேர்ந்த முஜபர்பூரில் **கென்னடி** என்ற ஆங்கில மாதையும், அவர் மகளையும் வெடி குண்டு வீசிக் கொன்றனர். **கிங்ஸ்போர்டு** என்ற மாவட்ட நீதிபதியைக் கொல்லச் செய்த முயற்சியே தவறுதலாக அந்தப் பெண்மணிகளைக் கொன்றுவிட்டது. இந்தக் கொலைகளுக்குக் காரணமானவர் எனக் கருதப்பட்ட **குதிராம் போஸ்** என்ற பதினெட்டு வயது இளைஞர் தூக்கிலிடப்பட்டார். இதுபோன்ற அரசியல் கொலைகளும்—கொள்ளைகளும் அப்போது வட இந்தியாவில் அடிக்கடி நிகழ்ந்து வந்தன. தென்னிந்தியப் புரட்சியாளர்களுக்கு இந்த நிகழ்ச்சிகள் மகிழ்ச்சி அளித்திருக்க வேண்டும்; **ரௌலட்** குழுவினர் வெளியிட்டுள்ள அறிக்கை சிதம்பரனார் சிறைப்பட்ட காலத்தி

லிருந்து அவர் விடுதலை பெறும்வரை தமிழகத்தில் நடைபெற்ற வன்முறைப் புரட்சிகளைப் பற்றி விளக்குகிறது. ஆனால், ரௌலட் குழுவின் அறிக்கையில் காணப்படுபவை அனைத்தும் உண்மையெனக் கொண்டு விடுவதற்கில்லை. ஏனெனில், பிரிட்டிஷ் ஆட்சியின் அடக்குமுறைப் பேயாட்டங்களுக்கு ஆதரவாகக் காரணங்கள் கற்பிப்பதே அந்த அறிக்கை வெளியிட்டவர்களின் கருத்து. என்றாலும் சிதம்பரனாரை அரசியலார் சிறையில் தள்ளியதன் விளைவாக, தமிழ் இளைஞர்கள் கொண்ட ஆத்திரத்தை அந்த அறிக்கையால் உணரலாம்.

**அபிநவ பாரத சங்கம்**

தென்பாண்டி நாட்டில், அரசியல் ஆவேசம் கொண்ட இளைஞர்கள் ஒன்றுகூடி, **அபிநவ பாரத சங்கம்** என்ற பெயரில் ஓர் இரகசிய இயக்கத்தை அமைத்துக் கொண்டனர். இந்தியாவின் விடுதலைக்காகத் தங்கள் உடல், பொருள், உயிர் அனைத்தையும் தியாகம் செய்வதாகச் சத்தியமும் மேற்கொண்டனர். அந்தச் சத்தியப் பத்திரத்தில் தங்கள் உடலிலிருந்து எடுத்த செந்நீரைக் கொண்டே கையொப்பமிட்டனர். அந்தப் புரட்சிக்காரர்களிடம் ஓர் அச்சகமும் இருந்தது. அதன் பெயர் **'பரங்கி ஒழிப்பு அச்சகம்'** என்பதாகும். அந்த அச்சகத்திலிருந்துதான் புரட்சியாளர்களின் இரகசியப் பிரசுரங்கள் வெளியிடப்பட்டு வந்தன. இந்தப் பிரசுரங்களின் விளைவாகச் சென்னை

அரசாங்கம் தேசபக்த இளைஞர்களை வேட்டை யாடத் தொடங்கிற்று. **கரூர் கிருஷ்ணசாமி** என்ற புகழ்மிக்க தேசபக்தர் உள்பட நூற்றுக் கணக் கான இளைஞர்கள்மீது வன்முறைக் குற்றங்கள் சாட்டிக் கடுந்தண்டனை விதித்தனர் அதிகாரிகள். புரட்சிக்காரர்கள் சிலர், இரகசியப் போலீசாரின் கண்களுக்குத் தப்பிப் பிரஞ்சுத் தமிழகமான புதுச்சேரியில் அடைக்கலம் புகுந்தனர். அவர் களில் **நீலகண்ட பிரமச்சாரி, சங்கர கிருஷ்ணையர், எம். பி. திருமலாச்சாரி** ஆகியவர்கள் குறிப்பிடத் தக்கவர்கள் என ரௌலட் அறிக்கை கூறுகிறது. புதுச்சேரியிலிருந்த தமிழகத்துப் புரட்சிக்காரர்கள் இலண்டன், பாரிஸ் போன்ற வெளி நாடுகளிலிருந்த இந்தியப் புரட்சிக்காரர்களோடு தொடர்பு வைத்துக் கொண்டனர். அந்தக் காலத்தில், இலண்டனி லுள்ள 'இந்தியா மாளிகை' இந்தியப் புரட்சிக் காரர்களின் பாசறையாக இருந்தது. **விநாயக தாமோதர சவர்க்கார்** அந்தப் புரட்சிக்காரர்களின் தலைவராக இருந்தார். தமிழ் நாட்டுப் புரட்சி வீர ரான **வ. வே. சு. ஐயர்** சவர்க்காரின் வலக்கரமாகத் திகழ்ந்தார்.

தூத்துக்குடிப் புரட்சிக்குப் புத்துயிர் அளிப் பதில் இலண்டன் 'இந்தியா மாளிகை' கவனம் செலுத்தியது. புதுவையில் அடைக்கலம் புகுந்த புரட்சியாளர்களில் சிலர் பாரிஸ் வழியாக இலண்ட னில் உள்ள 'இந்தியா மாளிகை' சேர்ந்தனர். 1910ஆம் ஆண்டு இறுதிக்குள் தென்னிந்தியப் புரட்சிக்கு "இந்தியா மாளிகை'யில் திட்டம்

உருவாகி விட்டது. இலண்டனில் தங்கியிருந்த வ. வே. சு. ஐயர், சியாம்ஜி கிருஷ்ணவர்மா ஆகியோர் அங்கிருந்து பாரிஸ் வழியாகப் புதுவை வந்து சேர்ந்தனர். அன்றுமுதல் புரட்சிப் புயல் தென்பாண்டி நாட்டிலும் வீசத் தொடங்கியது.

**கலெக்டர் ஆஷ் கொலை**

ஆஷ் என்பவர், அப்போது திருநெல்வேலிக் கலெக்டராக இருந்தார்; அவர் துணைக் கலெக்டராக இருந்தபோது செய்த கொடுமைகளுக்காகப் பழி வாங்குவதென்று புதுவையிலிருந்த புரட்சிக்காரர்கள் தீர்மானித்தனர். 1911ஆம் ஆண்டு ஜூன் 17ஆம் நாள் ஆஷ், புகை வண்டியில் கொடைக்கானலுக்குச் சென்றுகொண்டிருந்தார். வண்டி மணியாச்சி நிலையத்தை அடைந்ததும் அதே வண்டியில் கலெக்டருடனேயே பயணம் செய்து கொண்டிருந்த ஓர் இளைஞர், தமது கைத் துப்பாக்கியால் கலெக்டரைச் சுட்டுக் கொன்றார். மறு கணமே அவர், மலங் கழிக்கும் அறைக்குள் நுழைந்து தம் வாய் வழியாகத் தம்மைத்தாமே சுட்டுக் கொண்டதால், தலை சுக்கல் சுக்கலாக நொறுங்கி மாண்டார். தம்மை அடையாளம் கண்டு பிடிப்பதன் மூலம் தம் புரட்சித் தோழர்களை அரசாங்கம் கைது செய்துவிடாமல் தடுப்பதற்காகவே இந்தப் புது முறையான தற்கொலை உபாயத்தை அவர் கையாண்டார். ஆனால், அவரது எண்ணம் ஈடேறவில்லை. அவர் காட்டிலாகா அதிகாரியான செங்கோட்டை இரகுபதி

ஐயரின் குமாரர் வாஞ்சிநாத ஐயர் என, வழிப் போக்கர் ஒருவரால் அடையாளம் கண்டு பிடிக் கப்பட்டார். அவரது சட்டைப் பையிலிருந்து பல கடிதங்கள் எடுக்கப்பட்டன. அதில் சிதம்பரனார் கடுந்தண்டனை பெறக் காரணமாக இருந்தார் என் பதற்காகவே, தாம் கலெக்டரைச் சுட்டுக் கொன்ற தாக அவர் குறிப்பிட்டிருந்தார். மற்றும் தொடர்ந்து வன்முறைப் புரட்சியில் ஈடுபட வேண்டுமென்ற வேண்டுகோளும், செயலாற்றும் திட்டங்களும் அக் கடிதத்தில் காணப்பட்டன.

கலெக்டர் ஆஷ் கொலையுண்ட செய்தி சிறையி லிருந்த சிதம்பரனாருக்கு எட்டியது. சுதந்தர ஆவே சத்தால் வீர இளைஞர்கள் பழி வாங்கும் பாதையில் சென்று, தங்களைத் தாங்களே பலியிட்டுக் கொள் வதை அவர் விரும்பவில்லை. நாடாள வேண்டிய இளங் காளையர் நாசமாகின்றனரே என்று வருந் தினார். சிறையிலிருந்து அவர் திரு. சி. விசயராகவாச் சாரியாருக்கு ஒரு கடிதம் எழுதினார். அதில் வெளி யில் நடைபெறும் வன்முறை நிகழ்ச்சிகளைப் பற்றிக் குறிப்பிட்டபோது,

"நான் சிறைப்பட்ட பின்னும் என்னைப் பின் பற்றிச் சுதேசிக் கிளர்ச்சியை அறவழியில் நடத்தி வரும் அன்பர்களுக்கு எனது வணக்கத்தைத் தெரி வித்துக் கொள்கிறேன். ஆனால், எனது கோட் பாட்டுக்கு மாறாகக் கொலைச் செயல்கள் நடைபெறு வதற்கு வருந்துகிறேன். நாம் போராடுவது பிரிட்டிஷ் ஆட்சிமுறையை எதிர்த்தேயாகும். ஆங் கில அதிகாரிகளைக் கொலை செய்வதால் அந்நிய

ஆட்சி அழிந்துவிடாது. கொடியவர்களாயினும், அவர்களது உயிருக்குத் தீங்கு செய்யக் கூடாதென் பதே எனது கோட்பாடு. இதைப் புரட்சியில் விருப்பமுடையாருக்கு அறிவியுங்கள்" என்று கூறி யுள்ளார்.

இந்தக் கொலைக்குப் பின்னர், காவலர் தீவிர மாகப் புலன் விசாரித்து, கல்கத்தாவில் வசித்து வந்த தஞ்சை மாவட்ட எருக்கூர் நீலகண்ட பிரம் மச்சாரி, தென்காசி டி. எஸ். சிதம்பரம்பிள்ளை உள்பட மொத்தம் பதினுன்கு பேர்களைக் கைது செய் தனர். திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி, செங்கோட்டை ஆகிய இடங்களில் இரகசியச் சங்கங்களை நிறுவியதாகவும், ஒரே சமயத்தில் தமிழ் நாட்டின் பலவிடங்களில் வன்முறைப் புரட் சியை உண்டாக்கச் சதி செய்ததாகவும் இவர்கள் மீது குற்றங்கள் சாட்டப்பட்டன. இவ்வழக்கு மாவட்ட நீதிமன்றத்தாரால் விசாரிக்கப்பட்டு, ஒன்பது பேர்களுக்குப் பலவிதத் தண்டனைகள் விதிக் கப்பட்டன; ஐவர் விடுதலை பெற்றனர்.

## 12. வீரருக்கு விடுதலை

**பிரிந்தவர் கூடினர்**

சிதம்பரம் பிள்ளையவர்கள் தமது தண்டனைக் காலத்தைக் கோவை, கண்ணனூர்ச் சிறைகளில் கழித்துவிட்டு 1912ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் விடுதலை அடைந்தார் பின்னர்ச் சென்னையில் மயிலாப்பூர், சிந்தாதிரிப்பேட்டை, பெரம்பூர் ஆகிய பகுதிகளில் பல ஆண்டுகள் வசித்து வந்தார். சிதம்பரனார் சிறை மீண்டதும் சுப்பிரமணிய சிவாவைத் தவிர, அவரை 'வா'வென்றழைப்பார் எவருமிலர். பல ஆண்டுகள் சிறைக் கொடுமைகளை அனுபவித்துவிட்டு வெளிவந்த சிதம்பரனாரைக் கண்டதும் **"அப்பா சிதம்பரம், வந்தாயா!"** என்று அன்புடன் அணைத்துக்கொண்டார் சிவா. இஃதன்றோ தலை சிறந்த நட்பு!

அரசு நிந்தனைக் குற்றத்திற்குத் தண்டனை பெற்றதன் காரணமாக, வ. உ. சி. யின் வழக்கறிஞர் சான்றிதழ் பறிமுதலாயிற்று. சிதம்பரனார் வருவாய்க்கு வேறு வழியின்றிக் கலங்கினார். அந் நாளில் தமக்குற்ற துன்பத்தைக் குறித்

துத் தம் நண்பர் ஒருவருக்கு எழுதிய கடித மொன்றில்,

> **வந்தகவி ஞர்க்கெல்லாம் மாரியெனப் பல்பொருளும்**
> **தந்த சிதம்பரமன் தாழ்ந்தின்று—சந்தமில்வெண்**
> **பாச்சொல்லிப் பிச்சைக்குப் பாரெல்லாம் ஓடுகிறான்**
> **நாச்சொல்லும் தோலும் நலிந்து.**

எனக் குறிப்பிட்டுள்ளார். சிறைக்கஞ்சாத அவர் நெஞ்சம் வறுமையை நினைந்து வாடியது. அவ் வறுமையிலும் நம் பிள்ளையவர்கள் பொதுநலப் பணியில் ஈடுபடத் தயங்கவில்லை. அவர் பெரம்பூர் புகைவண்டித் தொழிலாளர் சங்கத்தின் துணைத் தலைவராக இருந்து அவர்கள் நலன்களுக்காகப் பல ஆண்டுகள் பாடுபட்டார். ஏற்கெனவே பறிக் கப்பட்ட வழக்கறிஞர் 'சான்றிதழ்' நீதிபதி இ. எச் வாலஸ் என்பவரின் பேருதவியால் திரும்பக் கிடைத் தது. பின்னர்ச் சில காலம் கோயில்பட்டியில் தங்கி வழக்கறிஞர் தொழில் புரிந்து மீண்டும் தூத்துக் குடியை அடைந்தார்.

**ஒத்துழையாமைக்கு எதிர்ப்பு**

கிலாபத் அநீதி, பஞ்சாப் படுகொலை, பயனற்ற மாண்டேகு-செம்ஸ்போர்டு சீர்திருத்தம் ஆகிய வற்றை எதிர்த்து ஆங்கில அரசுடன் ஒத்துழை யாமைப் போர் தொடங்க வேண்டுமெனக் காந்தி யடிகள் கருதினார். அதற்கான திட்ட மொன்றையும் குறித்து நாட்டு மக்கள் முன் படைத்தார். சட்ட சபை, கல்லூரி, நீதி மன்றம் ஆகியவற்றைப்

புறக்கணிப்பதே அத்திட்டத்தில் குறிப்பிடத்தக்க பகுதிகளாகும்.

ஒத்துழையாமைத் திட்டம் சிதம்பரனுருக்குப் பிடிக்கவில்லை. அதன் எல்லாப் பகுதிகளையும் எதிர்த் தார். மகாத்மாவைப் பின்பற்றுவதா; மனச் சாட்சி யைப் பின்பற்றுவதா? என்ற பிரச்னையில் அவர் முடிவு காண வேண்டியிருந்தது. மகாத்மாவைவிட மனச் சாட்சியையே பெரிதாக மதித்து அவர் காங் கிரசிலிருந்து விலகினுர். ஆம்; மனச் சாட்சிப்படி பணிபுரிய அவர் காங்கிரசை விட்டாரேயன்றி, மகாத்மாவிடமோ அல்லது மற்றத் தலைவர்களிடமோ அவர் பகைமை கொண்டு விலகவில்லை.

**காந்தியடிகளிடம் கொண்ட அன்பு**

அவருக்கு, வேறு எவரையும்விடக் காந்தியடி களிடம் அளவு கடந்த மதிப்பு உண்டு. தாம் இயற் றிய கவிதையொன்றில்,

> "உலகெலாம் புகழும் நலனெலாம்
> அமைந்த காந்திமா முனிவன்"

எனப் போற்றுவதே இதற்குச் சான்று ஆகும். அடி களாரின் ஒழுக்க வாழ்வு அவரது உள்ளத்தைக் கவர்ந்தது. என்ருலும், காந்தீயத்தின் ஆணிவேர் களான அகிம்சை, ஒத்துழையாமை ஆகிய தத்து வங்கள் வ. உ. சி.க்குப் பிடிக்கவில்லை. மேலும் சிதம் பரனுர், திலகரின் மெய்த்தொண்டர். அவரையே அன்னை, தந்தை, குரு, தெய்வம் ஆகிய எல்லாமாகக் கொண்டவர். எனவே, திலகரின் கொள்கைக்கு எதி

ராகக் கிளம்பிய காந்தீயத்தை அவர் ஏற்க மறுத்தது இயற்கையேயாகும்.

காந்தியடிகளும் தமது கொள்கையை முற்றும் ஏற்க மறுத்த வ. உ. சி. மீது அன்பு செலுத்தி வந்தார். வ. உ. சி.யின் களங்கமற்ற உள்ளத்தை தந்நல மற்ற தேசபக்தியை அடிகளார் அறிந்ததே இதற்குக் காரணமாகும். வ. உ. சி. தூத்துக்குடியில் புரட்சி நடத்திய காலையில் காந்தியடிகள் தென்னுப்பிரிக்காவில் இருந்து வந்தார். அந்தக் காலத்திலேயே வ. உ. சி. யும் காந்தியடிகளும் கடிதங்களின் மூலம் நட்புக் கொண்டிருந்தனர். காந்தியடிகள் இந்திய அரசியலில் ஈடுபட்ட பிறகு, வ. உ. சி. யுடன் அவர் நேரடியாகத் தொடர்பு வைத்துக்கொள்ள வசதி ஏற்பட்டது.

கல்கத்தாக் காங்கிரசுச் சிறப்புக் கூட்டத்தில் காந்தியடிகளின் ஒத்துழையாமைத் திட்டத்திற்குப் பலமான எதிர்ப்பிருந்தும், அதிகப்படியான வாக்குக்களால் தீர்மானம் நிறைவேறிவிட்டது. பிள்ளையவர்கள் சென்னைக்குத் திரும்பியதும் ஒத்துழையாமைத் திட்டத்தால் விடுதலைப் போர் வெற்றி பெறுதெனப் பத்திரிகைகளில் அறிக்கை வெளியிட்டுவிட்டுக் காங்கிரசிலிருந்து விலகிக்கொண்டார்.விலகினும்,அவர் திலகர் காட்டிய தேசியப் பாதையைவிட்டு விலகவில்லை. இறுதிவரை தேசியம் ஒன்றையே தமது மூச்சாகக் கொண்டார்.

## 13. சிதம்பரனாரின் தமிழ்த் தொண்டு

**கலைஞர் சிதம்பரனார்**

வீர சிதம்பரனார் வெறும் அரசியல்வாதி மட்டுமல்லர்; சிறந்த கலைஞருமாவார். பேச்சுக் கலை, அவரது உடன் பிறப்பு; இலக்கியக் கலை, வ. உ. சி. யின் இணைபிரியாத் தோழன்; காவியக் கலை, கப்பலோட்டிய தமிழனின் அல்லலைப் போக்கும் இல்லக் கிழத்தி; நாடகக்கலை, சிதம்பரனாரின் உள்ளத்தைக் கவரும் செல்வக் குழந்தை; வீரக்கலை அவருக்கு மரபு வழி வந்த மதிப்பற்ற சொத்து. ஆம், கலைப்பண்புகளே குடும்பமெனக் கொண்டு வாழ்வு நடத்திய கலைஞராவர் வ. உ. சி.

சிதம்பரம் பிள்ளை, நம் தாய் மொழியாம் தமிழில் மிக்க பற்றுக் கொண்டிருந்தார். ஓய்ந்த நேரங்களில் தமிழ்மொழி வளர்ச்சிக்குப் பெரிதும் உழைத்து வந்தார். வ. உ. சி. சங்க இலக்கிய இலக்கணங்களில் வல்லவர்; உண்மை உரைகாணும் உரம் பெற்றவர். மதுரைத் தமிழ்ச் சங்கப் புலவர்.

## அறநூல் இயற்றிய அண்ணல்

வ. உ. சி., தமிழில் சொற்சுவை, பொருட்சுவை கனிந்த பாக்கள் பலவற்றை இயற்றியுள்ளார். கோவை, கண்ணனூர்ச் சிறைகளில் பிள்ளையவர் களின் கை கல்லுடைத்ததோடு நிற்கவில்லை; கவி களும் எழுதியது. சிறையிலிருக்கையில் தமக்குற்ற இன்னல்களைக் குறித்துத் தந்தைக்கும், தம்மைப் பிரிந்தமைக்கு வருந்த வேண்டாமென ஆறுதல் கூறி அன்னை, மனைவி, நண்பர்கள் முதலியோருக்கும் எழு திய கவிதைகள் கேட்போரின் உள்ளத்தை உருக்கும் தன்மை வாய்ந்தனவாகும். மற்றும், அவர் ஈகை— உண்மை முதலிய ஒழுக்கப் பாக்களும், பதி, பசு, பாசச் செயல்கள். கடவுள் உண்மை, கடவுளுக்குக் காவற்றொழிலை அளித்தல் முதலிய சமயப் பாக்களு மாகத் தனிப்பாடல்கள் பல இயற்றியுள்ளார். அவர் இயற்றிய 'மெய்யறிவு', 'மெய்யறம்' போன்ற அறவுரை நூல்கள் யாவும் பண்டைக்கால நீதி நூல் களுக்கு நிகரானவையாகும்.

## ஆசிரியர் சிதம்பரனார்

பிள்ளையவர்கள் பலருக்குத் தமிழ்க் கல்வி கற்பித்து வந்தார். தாம் சொல்லிக் கொடுத்தவற் றைப் பாடம் கேட்பவர் மறுநாள் ஒப்புவிக்க வேண் டும். இன்றேல் அவர் வேறு பாடம் நடத்தமாட் டார். அவரிடம் பாடம் கற்றுக்கொள்வது எல்லா ருக்கும் எளிதன்று. இராஜாஜி அவர்கள் சிதம்பர னாரிடம் திருக்குறள் பாடங் கேட்டபோது, அவரு டைய நிபந்தனைகள் பிடிக்காமையால், "எனக்குப்

பாடஞ்சொல்லித் தரும் பொறுமை தங்களுக்கு மில்லை; தங்களிடம் பாடம் கேட்கும் பொறுமை எனக்குமில்லை" எனக் கூறி விடைபெற்றுக் கொண் டாராம். தமிழ்க் கல்வியில் ஆர்வமுடையோருக்குச் சிதம்பரனார் உண்டி உதவியும், உறுபொருள் கொடுத் துங் கற்பிப்பார். இதற்கு, சுவாமி சகஜானந்தர் அவர்களே சான்றுவார்.

**மொழி பெயர்ப்புப் பணி**

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்களைத் தமிழ் மொழியில் பெயர்ப்பதில் பிள்ளையவர்கள் பெரிதும் ஊக்கங் காட்டி உழைத்தார்; அவர் புகழ்பெற்ற ஆங்கிலப் புலவரான ஜேம்ஸ் ஆலன் அவர்களின் ஆங்கில நூற்களை, 'மனம்போல் வாழ்வு', அகமே புறம்', 'வலிமைக்கு மார்க்கம்' என்ற பெயர்களுடன் தமிழில் வெளியிட்டுள்ளார். மேலும் அவர் திருக் குறள் அறத்துப்பாலை ஆங்கில மொழியில் பெயர்த் துள்ளார்.

செந்தமிழ் வல்ல சிதம்பரனார் அரிய தமிழ் நூல் கள் பலவற்றைத் தமிழ் மக்களுக்கு உதவுமாறு பதிப் பித்துள்ளார். அவை, திருக்குறள்—மணக்குடவர் உரை—அறத்துப்பால்; தொல்காப்பியம் எழுத்து—சொல்—பொருள்—இளம்பூரணர் உரை; இன்னிலை- ஆகிய நூற்கள் ஆகும்.

**தமிழ் மருத்துவம்**

தமிழ் மொழி வளர்ச்சியில் மட்டுமின்றி; தமிழ் வழிப்பட்ட தொழில் வளர்ச்சியிலும் கப்பலோட் டிய தமிழர் கருத்துடையவரா யிருந்தார். மருத்து

வத் துறையில், தமிழ் மருத்துவமாகிய சித்த மருத்துவத்துக்கு முதலிடம் தரவேண்டுமென்பது பிள்ளையவர்களின் பேராவல். ஆங்கில மருத்துவர் கடைப்பிடித்து வரும் **எக்ஸ்ரே, அறுவை முறை** முதலிய புதிய முறைகளைத் தழுவிச் சித்த வைத்தியம் புத்துயிர் பெற வேண்டுமென்பதை, அவர் சமயம் வாய்த்த போதெல்லாம் வற்புறுத்தி வந்தார்.

# 14. குண நலன்கள்

**தியாக உணர்வு**

அன்பும், அருளும், உழைப்பும், ஊக்கமும், கொடையும் ஆகிய அருங்குணங்கள் யாவும் வ. உ. சி. யிடம் ஒருங்கே அமைந்திருந்தன. நாம் நாடு விடுதலை பெறவேண்டின் உடல், பொருள், உயிர் அனைத்தையும் தியாகம் செய்ய சிலரேனும் முன்வர வேண்டுமென்பது அவரது கருத்து. 'உடல், பொருள், ஆவி, உடல், பொருள், ஆவி' என்ற பல்லவியை வீணாக எல்லாரும் பாடுகின்றனர். உண்மையில் உடலையும், பொருளையும், உயிரையும் நாட்டின் பொருட்டு வருத்திக் கொண்டார் சிதம்பரப் பெரியார். "வறுமையை நீக்கு" "உரிமைக்குப் போரிடு", "சிறைக்குச் சிறிதும் அஞ்சாதே" என்பன அவர்தம் அறிவுரைகள். காந்தியடிகளின் செல்வாக்குக் காங்கிரசில் வலுத்த பிறகு கருத்து வேறுபாட்டால் விலகி இருந்தாரே யன்றி, அந்நியக் கட்சி எதிலும் சேர்ந்தாரில்லை. ஏன் அவர் விரும்பியது நாட்டின் விடுதலை ஒன்றே. அவ் விடுதலை எவ் வழியில் எவர் மூலம் வந்தாலென்ன?

**நன்றி மறவாமை**

"எழுமை எழுபிறப்பும் உள்ளுவர், தங்கண்
விழுமந் துடைத்தவர் நட்பு"

என்னும் பொய்யா மொழிக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கினர் வ. உ. சி. சுதேசிக் கப்பல் கம்பெனியின் வளர்ச்சியில் ஊக்கங் காட்டி உதவிய தூத்துக்குடி ஆறுமுகம் பிள்ளையின் பெயரைத் தம் பிள்ளைகளில் ஒருவருக்கு வைத்தார். அரச நிந்தனைக் குற்றத்திற்காகச் சிறைத் தண்டனை யடைந்ததன் காரணமாக இழந்துவிட்ட, தம் வழக்கறிஞர் சான்றிதழைத் திரும்ப வாங்கிக் கொடுத்த நீதிபதி வாலஸ் துரை யின் பெயரை மறவாது, தம் மற்றொரு மைந்தனுக்கு **வாலீஸ்வரன்** என்ற திருப்பெயரைச் சூட்டினர். தமக்கு அவ்வப்போது வேண்டிய பொருளுதவி புரிந்து வந்த வேதியப்பப் பிள்ளையின் நினைவாகத் தம் மகளுக்கு, **வேதவல்லி** என்று பெயர் வைத்தார். இவ்வாறு பல்லாற்றானும் உதவி புரிந்த பலருக்கும் பிள்ளை தமது நன்றியைச் செலுத்தியுள்ளார்.

**ஒப்புரவிற் சிறந்த உத்தமர்**

சிதம்பரச் செம்மல் இல்வாழ்க்கையை இனிது நடத்திய நாளில், தம்மை நாடிவரும் எளியவருக்கு இல்லையென்னாது ஈந்து வாழ்ந்தார். ஈகையும் இரக்கமும் பிள்ளையவர்களிடம் பொலிந்து விளங்கின. பிறர் துன்பங் கண்டால் மனம் பொறார். "வறுமையால் வருந்துகிறேன்" என்று எவர் வாயி

னின்று கேட்பினும் தம் கைப்பொருளைத் தமக்கென
வேண்டாது தாராளக் குணத்துடன் வழங்குவார்.
ஒருநாள் ஒருவர் பிள்ளையவர்களை அணுகி "என்
குழந்தையின் திருமணத்திற்கு நாள் வைத்துவிட்
டேன்; கையில் ஒரு காசும் இல்லை. ஓராயிரம் ரூபாய்
தேவையிருக்கும். எப்படியாவது கொடுத்துதவ
வேண்டும்" எனக் கவிதை மூலமாய் வேண்டினர்.
பிள்ளையவர்கள் அப்போது தம்மிடமிருந்த ஓராயிரம்
ரூபாயையும் உடனே கொடுத்து உதவி புரிந்தார்.
இவ்வாறே இவரது உதவியைப் பெற்ற புலவர்
பலர்.

**ஒழுக்கமே உயிராகக் கொண்டார்**

சிதம்பரனார் ஒழுக்கத்தில் சிறந்த உத்தமர்.
தற்புகழ்ச்சி, ஆடம்பரம், பொறாமை, புறங்கூறல்
ஆகிய தீ நெறிகள் அவர் நெஞ்சில் என்றும் இடம்
பெறவில்லை. உண்மை உணர்தல், உணர்ந்த வழி
நிற்றல், தீமையை எதிர்த்தல், பகைவருக்கும் அருளல்
ஆகிய நன்னெறிகள் அவரிடம் நிரம்பி இருந்தன.
மக்களிடையே தீ நெறி போக்கி, நன்னெறி பரப்பு
வதற்கென்றே, **விவேக பாநு** என்ற திங்கள் இதழ்
ஒன்றைச் சிறிது காலம் நடத்தினர் சிதம்பரனர்.
வேதாந்த சமயத்தில் விருப்பம் கொண்டிருந்தார்.
**சுவாமி வள்ளி நாயகம்** என்பவர் வ. உ. சி. யின்
பள்ளித் தோழர். வழக்கறிஞர் தொழில் நடத்தி
போதும் இவ்விருவரும் இணைபிரியாத தோழர்
களாகவே யிருந்தனர். பின்னர் வள்ளி நாயகம்
வழக்கறிஞர் தொழிலைக் கைவிட்டுத் துவராடை

யணிந்து துறவியான போது அவரையே தம் ஞான குருவாகக் கொண்டு சமய சாத்திரங்களைப் பயின்றார் ப. உ. சி.

**பிறர்நலம் போற்றிய பெருந்தகை**

தந்நலம் மறுத்தலும், பிறர்நலம் பேணுதலும் பிள்ளையவர்களின் பிறவிக் குணங்கள். தம்முடன் சிறைப்பட்ட சிவாவைச் சிறையில் விட்டுத் தாம் ஜாமீனில் வெளிவர மறுத்ததும், சுதேசிக் கப்பல் கம்பெனியை விட்டு விலகிக் கொண்டால் இலட்சம் ரூபாய் தருவதாக அந்நியக் கம்பெனியார் கூறியதை ஏற்க மறுத்ததும் எதனால்? தந்நலமற்ற தன்மையாலன்றோ! இவர் நாட்டின் பொருட்டுத் தம் கைப்பொருளையும், வருவாயையும் இழந்து மிக ஏழையாக வாழ நேர்ந்த போதும், பிறர்நலம் பேணுதலை விட்டொழித்தாரில்லை. ஒத்துழையாமைக் காலத்தில் கோவில்பட்டியில் வாழ்ந்தபோது, சென்னை திரு. எம். எஸ். சுப்பிரமணிய ஐயர் முதலியோர்மீது நடைபெற்ற அரச நிந்தனை வழக்கில் யாதொரு கைம்மாறும் கருதாது எதிர் வழக்காடினார்.

துப்பாக்கி பிடித்த 'சிப்பாயைக்' கண்டால் 'அப்பா' என்றோடித் தப்பாது தலை மறைத்துக் கொள்ளும் இயல்புள்ள காலத்தில், பிள்ளையவர்களின் பெயர் ஒன்றே வெள்ளையரிடையே பேரச்சத்தை உண்டாக்கிற்று. "பிள்ளையவர்களின் சொற்பொழிவையும் பாரதியாரின் பாட்டையும் கேட்டால், செத்த பிணமும் உயிர்த்தெழும்; அடி

மைப்பட்ட நாடு ஐந்தே மணித் துளிகளில் விடு தலை பெறும்; புரட்சி ஓங்கி எழும்" என இவரைத் தண்டித்த நீதிபதி பின்ஹே கூறினாரென்றால் சிதம்பரனாரின் வீரம் செப்புந் தரத்ததோ?

**வீரரைப் போற்றுதல்**

வீரர்களின் வரலாற்றைக் கேட்பதிலும், அவர் களைப் போற்றிப் புகழ்வதிலும் சிதம்பரனாருக்கு விருப்பம் அதிகம்.

'பாம்பறியும் பாம்பின கால்' என்ற பழமொழிக் கிணங்க, வீரக் கலையில் வித்தகரான சிதம்பரனார் தம்மையொத்த வீரர்களைப் போற்றிப் புகழ்ந்ததில் வியப்பென்ன இருக்கிறது? சிதம்பரனார் சிறையி லிருந்த காலத்தில் பண்ணோடு கலந்து பாடக்கூடிய குற்றவியல் கைதிகளைக் கூட்டிவைத்து, **மதுரை வீரன், வீரபாண்டியக் கட்ட பொம்மன்** ஆகிய இருபெரும் வீரர்களின் வரலாற்றைக் கூறும் தெருக்கூத்துப் பாடல்களைப் பாடச் சொல்லிக் கேட்பார். வரி வாங்க வந்த வெள்ளையரை எதிர்த்து,

**"வானம் பொழியுது பூமி விளையுது**
**மன்னவன் காணிக்கு ஏது கிஸ்தி?"**

என்று வல்லமைபேசிய கட்டபொம்மனின் வரலாறு, பிள்ளையவர்களின் உள்ளத்தைக் கொள்ளை கொண் டது. அவர் தமது சுயசரிதையில்,

**"அருந்திறன் நாட்டி ஆங்கில ரோடமர்**
**பொருந்திய கட்ட பொம்மு நாயகன்"**

எனக் கூறிப் பாஞ்சாலங் குறிச்சியாரின் வீரத்தைப் பாராட்டுகின்றார். மற்றும்,

''பாஞ்சால மன்னன் பண்புடன் அமர்ந்த
பாஞ்சால நகர் பக்கத்துள்ளது''

என்ற வரிகளில், வீரபாண்டியக் கட்டபொம்மன் அரசாண்டதும், 'காகம் பறவாது கட்டபொம்மன் சீமையின் மேல்' எனப் பெயர் பெற்றதுமான பாஞ்சாலங்குறிச்சி நகரத்தின் மதிற்புறத்துள்ளதே தாம் பிறந்த ஒட்டப்பிடாரம் என்று பெருமிதத்துடன் கூறியுள்ளார்.

## 15. மீளாப் பிரிவு

**துன்பமலை**

வீரர் சிதம்பரனார் பாரத நாட்டின்மீது பற்றுக் கொண்டதன் விளைவாக, அவர் அடைந்த பரிசு என்ன? வறுமையும், பிணியுமாம்! உண்மைத் தேசபக்தருக்கு வேறு என்ன கிடைக்கும்? இதை யறிந்ததே.

"பஞ்சமும் நோயும்நின் மெய்யடியார்க்கோ
பாரினில் மேன்மைகள் வேறினியார்க்கோ?"

என்று இறைவனை நோக்கி முறையிட்டார் பாரதியார்.

1936ஆம் ஆண்டில் சிதம்பரனார் நோய்வாய்ப் பட்டார். ஒரு திங்களுக்கு மேலாகவே படுக்கையில் கிடந்தார். பாரத அன்னையின் அடிமைப் பிணி யகற்றப்பாடுபட்ட அண்ணல், தமது பிணிபோக்கும் வகையறியாது வருந்தினர். நாட்டுப் பணியில் நாட்டங்கொண்ட நாள்முதலாக இன்னலன்றி இன்னொன்றறியாத அப் பெரியார்க்கு இறுதி நாள் வந்துற்றது. மருத்துவர்கள் கைவிட்டனர்; மனைவி மக்கள் கண்ணீர் விட்டனர். சுற்றத்தாரும் நண்பர்களும் சூழ இருந்து, அழுகின்ற மனைவி, மக்களுக்கு ஆறுதல் கூறினர். இந்நிலையில்,

நவம்பர் 18ஆம் நாள் நள்ளிரவில் கப்பலோட்டிய தமிழர்—கன்னித் தமிழ் வளர்த்த கவிஞர்—மாற்றலர்க்கஞ்சாத மறவர்— வ. உ. சிதம்பரனார் இம் மண்ணுலக வாழ்விலிருந்து விடுதலை பெற்றார்.

"சொந்த நாட்டிற் பிறர்க் கடிமை செய்து துஞ்சிடேன்"

என்று கூறிய வாய் அடைத்தது; ஏழை மக்களின் இன்னல் கண்டு நீருகுத்த கண்கள் மூடின; தமிழ் மணங் கமழும் திருமேனி பிணமானது.

தமிழ்நாட்டின் தனிப்பெருந் தலைவர் சிதம்பரனாரின் மரணச் செய்தி திருநெல்வேலி, தூத்துக்குடியெங்கும் பரவியது. அன்றொரு நாள், "சிதம்பரனார் சிறைப்பட்டார்!" என்ற செய்தியைக் கேட்டதுமே வெறிகொண்டு புரட்சி விளைவித்த மக்கள் அவரது மீளாப்பிரிவைச் சகிப்பரோ? பிள்ளை அவர்கள்பால் அன்பு கொண்ட மக்கள் அவரது இல்லத்தை யடைந்து தங்கள் வீரத் தலைவரை, அரசனுக்கும் தலைவணங்காத ஆண்மையாளரை, கடலிலே கப்பலோட்டிய கர்ம வீரரை, புலவர்களின் வறுமை தீர்த்த புரவலரைக் கண்ணாரக் கண்டு தங்கள் இறுதி வணக்கத்தைத் தெரிவித்தனர்.

சிதம்பரனார், தமது ஆவி பிரியும் முன்னர்க் கவியரசர் பாரதியாரின் தேசியப் பாடல்களைப் பாடச் சொல்லிக் கேட்டு உள்ளம் பூரித்தார்.

சிதம்பரனார், நாத்திகர் அல்லர்; பழுத்த ஆத்திகர். ஆனால், ஆளுக்கொரு தெய்வம், நாளுக்கொரு

சடங்கு என்ற போலிச் சமய வாதிகளின் கொள்கை அவருக்கு உடன்பாடன்று. அவர் கண்ட சமயம் மக்கள் சமுதாயம்; அவர் போற்றிய வேதம் திருக் குறள்; அவர் கடைப்பிடித்த சமயநெறி, எம் மதத் தையும் சம்மதமாகக் கொள்ளும் சன்மார்க்க நெறி. மற்றும், ஏழை எளியவர்களுக்குத் தொண்டு செய் வதையே இறைவனுக்குச் செய்யும் வழிபாடாகக் கருதினர் வ. உ. சி.

**கப்பலோட்டிய கதிரவன் மறைவு**

உயிர்விடும் சமயத்தே, தேவாரத்தையோ, திருவாசகத்தையோ பாடச் சொல்லிக் கேட்பர் சைவர். அதுபோலவே, பிரபந்தம் ஓதக் கேட்பர் வைணவர். ஆனல் சிதம்பரனரோ, பாரதியாரின் நாட்டுப் பாடலைப் பாடச் சொல்லிக் கேட்டுக் கொண்டே உயிர் நீத்தார்.

**''எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி**
**இருந்தது மிந்நாடே''**

என்று தொடங்கும் பாடலும்,

**''என்று தணியு மெங்கள் சுதந்திர தாகம்''**

என்ற முதலடி கொண்ட பாடலும்தான் வ. உ. சி. கடைசியாகக் கேட்ட பாடல்கள்.

பிள்ளையவர்கள் இம் மண்ணுலகை விட்டுப் பிரியும் சமயம் 1936ஆம் ஆண்டிலேயே, **''கூடிய சீக்கிரத்தில் உண்டாகும் உலகப் போரின் வாயிலாக இந்திய நாடு சுதந்தரம் எய்துவது திண்ணம்''** என்று

கூறிப் போனார். அவரது ஆழ்ந்த அரசியல் அறிவையும், கனிந்த நாட்டுப் பற்றையும் என்னென்று கூறுவது!

"சாவதற்கு முன்னர்ச் சுதந்தரத்தைக் காணக் கொடுத்து வைக்காமற் போனேனே!" என்று கண்களில் நீர் ததும்பக் கூறிய சொற்களே அவர் வழங்கிய இறுதிச் சொற்கள்.

பாரதியாரின் சுதந்தரப் பாட்டே சிதம்பரனாரின் காதுகள் கேட்ட இறுதிப் பாட்டு. அவர், தமது படுக்கையைச் சூழ்ந்திருந்த தேசபக்தர்களுக்குக் கடைசி வணக்கத்தைச் செலுத்தி விடை பெற்றுக் கொண்டார். ஆம்; சிதம்பரனார் தமது இறுதிக் காலத்திலும் காணவிரும்பியது சுதந்தரம்; கேட்க விரும்பியது பாரதியாரின் பாடல்; வணங்க விரும்பியது தேசபக்தர்கள் கூட்டம். என்னே அவரது நாட்டுப் பற்று!

## 16. நினைவுச் சின்னங்கள்

வ. உ. சிதம்பரனுர் தமது வாழ்வின் இறுதிக் காலத்தில் அரசியலிலிருந்து விலகியிருந்த காரணத்தால் மக்கள் அப் பெரியாரை மறந்தனர். அவர் மறைந்த மூன்று ஆண்டுகள் வரை அவரது நினைவு நாளைக் கொண்டாடக் கூடத் தமிழகத்து அரசியல் வாதிகள் நினைத்தார்களில்லை. ஆனுல், இந்த நிலைமை நெடுநாள் நீடித்திருக்கவில்லை. 'நன்றி மறப்பது நன்றன்று', 'எந்நன்றி கொன்ருர்க்கும் உய்வுண்டாம், உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு' என்ற வள்ளுவர் கட்டளைப்படி, சென்னை மக்கள் சிதம்பரனுர் செய்த சேவைக்கு நன்றி செலுத்தும் பொருட்டுச் சிலை எடுத்துப் போற்றலாயினர்.

**சிலைக்கு வணக்கம்**

1939ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் 21ஆம் நாள் சென்னை மாவட்டக் காங்கிரசுக் குழுவினர் இராயப்பேட்டைக் காங்கிரசு மண்டபத்தில் சிதம்பரனுருக்கு அழகிய முக உருவச்சிலை யொன்று அமைத்து வைத்தனர். திரு. எஸ். சத்தியமூர்த்தி தலைமையின் கீழ், டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன் சிதம்பரனுரின் சிலையைத் திறந்து வைத்துப் பேசுகையில்,

''சிதம்பரனுர் தூயதமிழர். தமிழருக்குரிய ஆண்மையும், ஆற்றலும் ஒரு வடிவமெடுத்துக் கண்ணுக்குத் தோன்றுமானல், அவை சிதம்பரம் பிள்ளையைப்போலத் தான் தோன்றும். நான் இங்கிலாந்தில் இருந்தபோதும், அதற்குப் பின்னர்ச் சில நாள்வரையிலும் அரசியலில் புரட்சிக்காரனுகவே இருந்தேன். அதற்குக் காரணம் சிதம்பரம் பிள்ளை நடத்திய தூத்துக்குடிப் புரட்சியே யாகும். எனவே, **சிதம்பரனுர் என் முதல் அரசியல் குரு என்பதைப் பெருமையுடன் சொல்லிக் கொள்கிறேன்.** சிதம்பரனுர் தம் கண்ணிலிருந்து மறைந்தாலும் அவரது ஆவி நம்மைச் சுற்றி உலாவுகின்றது. நாம் நடத்தும் சுதந்திரப் போரில் சிதம்பரனுர் ஆவி வடிவில் வந்து நின்று நமக்குத் துணை புரிகிருர் என்று நான் திடமாக நம்புகிறேன்.''

எனக் குறிப்பிட்டார். விழாவிற்கு, சேலம் சி. விசய ராகவாச்சாரியார் அனுப்பியிருந்த செய்தியில்,

''சிதம்பரம் பிள்ளையை நான் நன்கறிவேன். மாசு மறுவற்ற தேசபக்தர். கள்ளமற்ற நெஞ்சுடையார். அவரது வீரப் புரட்சியை இப்போது நினைத்தாலும்கூட எனக்கு உணர்ச்சி மேலிடுகிறது. அப் பெரியார் தமிழ் நாட்டார் சிலை எடுத்துப் போற்றுவதற்குத் தகுதி யுடைய வீரராவார்''

என்று குறிப்பிட்டிருந்தார். சிதம்பரனுர் அரசியலி லிருந்த காலத்தில் அவரோடு கைகோத்து நின்று கடமையைச் செய்த பெருமக்கள் அனைவரும் விழா வுக்கு ஒருமிக்க வந்திருந்தனர்.

நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை, சுவாமி சுத்தானந்த பாரதியார் போன்ற புலவர் பெருமக்களும் தங்கள் கவிதைகளைச் சிதம்பர ஞரின் விழாவுக்கு காணிக்கைகளாக அனுப்பி யிருந்தனர்.

சுதந்தர இந்தியாவிலும், மக்கள் வீர சிதம்பரனுரை மறந்துவிடவில்லே. "சலப் பிரபா" என்ற கப்பலேக் கடலில் மிதக்க விட்டபோது, இந்தியத் துணே முதல்வராகவிருந்த சர்தார் படேல், அடிமை இந்தியாவில் ஆங்கிலேயருக்கு எதிராகக் கப்பலோட்டிய வ. உ. சி.யின் வீரத்தைப் பாராட்டிப் பேசினுர்.

**கனவு பலித்தது**

மற்றும், தூத்துக்குடிக்கும் சிங்களத்திற்குமாகப் போக்குவரவு செய்யத் தாங்கள் வாங்கிய முதற் கப்பலுக்கு **'வி. ஓ. சிதம்பரம்'** என்று பெயர் வைத்தனர் தென்பாண்டி வணிகர்கள். 9-2-49இல் கவர்னர் ஜெனரலாக இருந்த இராஜாஜி 'வீரர் வ. உ. சி. புகழ் வாழ்க!' என்று ஐம்பதாயிரம் மக்கள் செய்த ஆரவாரத்திற்கிடையே தூத்துக்குடிக் கடலில் அக்கப்பலே மிதக்கவிட்டார். அடிமை இந்தியாவில் கப்பலோட்டியதற்காகச் சிதம்பரனுருக்குக் கடுந்தண்டனே விதித்தனர் ஆட்சியாளர். சுதந்தர இந்தியாவிலோ கவர்னர் ஜெனரல் **'வி. ஓ. சிதம்பரம்!** என்ற பெயர் தாங்கிய கப்பலேத் தூத்துக்குடிக் கடலிலே மிதக்கவிட்டு வ. உ. சி.யின் புகழை வாயாரப் பேசினுர். ஆம்; சிதம்பரனுர் கண்ட கனவு பலித்தது.

**உலகத் தமிழ் மாநாட்டிலும் உத்தமரின் சிலே**

அண்மையில் நடைபெற்ற இரண்டாம் உலகத் தமிழ் மாநாடு, கப்பலோட்டிய தமிழரை மறந்துவிடவில்லே. எப்படி மறக்க முடியும்? தமிழ்

 (14258)

வளர்த்த பெரு மக்களில் நம் சிதம்பரனாரும் ஒருவர் அல்லரோ? அவர் கப்பலோட்டிய பெருமையையும் குறிப்பதற்காகச் சென்னைத் துறைமுக வாயிலிலே சென்னை மாநகராட்சியினரால் சிதம்பரனாரின் உருவச் சிலையொன்று எழுப்பப்பெற்றது. நீலத் திரைக் கடல் ஓரத்திலே நிற்கும் அந்தச் சிலை நித்தம் அவர் தொண்டினைப் பேசிக்கொண்டிருக்கிறது. வங்கக் கடலின் வண்ண அலைகள் அவர் புகழைப் பாடிக் கொண்டிருக்கின்றன.

**புதிய தமிழகம்**

வ. உ. சி. தொடங்கி வைத்த சுதந்தரப் போர் வெற்றி பெற்றுவிட்டது. அவர் வெளியேற்ற விரும்பிய வெள்ளையர் கூட்டம் இந்தியாவை விட்டு வெளியேறிவிட்டது. விடுதலை பெற்ற இந்தியாவில் தமிழ் மக்களாகிய நாம் தலைவர் சிதம்பரனாருக்கு அளிக்கும் காணிக்கை என்ன? செம்பொற் சிலையா? பளிங்கு மண்டபமா? வாணிகக் கப்பலா? இல்லை; இல்லை. அவை என்றேனும் ஒரு நாள் அழியக் கூடியனவே. சிதம்பரனாரின் நினைவாக நாம் உருவாக்கும் சின்னம் அழியாத **புதிய தமிழகம்.** ஆம்; குமரிமுதல் வேங்கடம் வரையுள்ள புதிய **தமிழகம்.** தமிழர்களே! அந்தப் புதிய தமிழகத்தை உருவாக்கப் பாடுபடுங்கள்; சிதம்பரனாரின் ஆண்மை மிக்க வரலாறு நமக்கு வழிகாட்டும்; அவரது ஆவி நமக்கு வாழ்த்துக் கூறும்.

வாழ்க தமிழினம்!
வாழ்க தமிழகம்!
சிதம்பரனாரின் திருப்பெயர் வாழ்க!

9930

## கட்டுரைப் பயிற்சி

1. சிதம்பரனாரின் இளமைப் பருவமும் கல்விப் பயிற்சியும்.
2. வ. உ. சி.யின் வழக்கறிஞர் வாழ்க்கை.
3. சிதம்பரனாரின் இல்லற வாழ்க்கை.
4. சுதேசிக் கப்பல் விடுதல்.
5. சுதேசிக் கப்பல் விடுவதில் சிதம்பரனார் அடைந்த இடையூறுகள்.
6. சிதம்பரனாரின் அரசியல் வாழ்க்கை.
7. ஆர்வி மில்லின் வேலை நிறுத்தம்
8. வ. உ. சி. சிறைப்படுதல்.
9. சிதம்பரனாரின் சிறை வாழ்க்கை.
10. வ. உ. சி. சிறைப்பட்டபோது நடைபெற்ற கிளர்ச்சிகள்.
11. சிதம்பரனார் விடுதலை யடைதல்.
12. சிதம்பரனாரும் காந்தியடிகளும்.
13. சிதம்பரனாரின் குணநலன்கள்.
14. சிதம்பரனார் தமிழுக்குச் செய்த தொண்டுகள்.
15. வ. உ. சி. அவர்களின் மறைவு.
16. சிதம்பரனாருக்கு நினைவுச் சின்னங்கள்.

# கப்பலோட்டிய தமிழன்

ஒன்பதாம் வகுப்பு

ஆசிரியர் :

ம. பொ. சிவஞானம்

விலை ரூ. 1-00

இன்ப நிலையம்

மயிலாப்பூர் :: சென்னை-4.